


# மெய்ஞான சூரியன்

## ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி)

மக்கன்பூர்.



உருது மூலம்


அல்ஹாஜ். ஹஜ்ரத் அல்லாமா சையத் மஹ்ஜர் அலி வக்காரி மதாரி
மக்கன்பூர்.

தொகுப்பாசிரியர்

அல்ஹாஜ். S.மக்தூம் முஹ்யித்தீன் (எ)
சர்குருஹால் இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப்
சர்குரு ஷா தப்காத்தி மண்டல்தாரி ஜமா
தமிழ்நாடு.



ஹஜ்ரத் சர்குருஹால் கஞ்சலிஷா சாஹிப்
ஆஷிகானே மதாரி



ALHAJ HAZRATH ALLAMA SYED MAHAZAR ALI WAQARI MADHARI

# மெய்ஞ்ஞான சூரியன்
## ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி)
## மக்கன்பூர்

உருது மூலம் :
அல்ஹாஜ். **அல்லாமா சையத்**
**மஹ்ஜர் அலி வக்காரி மதாரி**
மக்கன்பூர்.

தொகுப்பாசிரியர் :
அல்ஹாஜ். **S.மக்தூம் முஹ்யித்தீன்** (எ)
**சர்குருஹால் இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப்**
சர்குரு. **ஷா தப்காத்தி மண்டல்தாரி ஜமா**
தமிழ்நாடு.

வெளியீடு :
வெள்ளம்ஜி. **ஜமால் - தாவூது பேகம் பதிப்பகம்**
No.13, ஹால்ஸ்ரோடு, எழும்பூர்,
சென்னை - 8

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மெய்ஞான சூரியன் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) |
| உருது மூலம் | : | அல்ஹாஜ். அல்லாமா. சையத் மஹ்ஜர் அலி வக்காரி மதாரி |
| தொகுப்பாசிரியர் | : | அல்ஹாஜ். S.மக்தூம் முஹ்யித்தீன் (எ) சர்குருஹால் இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - ஜனவரி 2022 |
| பிரதிகள் | : | 500 |
| நூல் அளவு | : | 1x8 டெம்மி |
| பக்கங்கள் | : | 145 |
| ஒளி அச்சு / நூல் அச்சு | : | நாடார் பிரஸ், கும்பகோணம். |
| வெளியீடு | : | வெள்ளம்ஜீ ஜமால் - தாவூது பேகம் பதிப்பகம் No.13, ஹால்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை - 8 |




# சமர்ப்பணம்

**பேரின்ப சாகரம் ஆன்மீக சூரியன்**
**ஹஜ்ரத் குத்புல் மதார் சையத் புதீஉத்தீன்**
**ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் ரஹ்மு**
**என்னும் பாதார விந்தங்களில் சமர்ப்பணம் ...**

ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் வரலாற்றை எழுத வேண்டும் என்று பேரார்வம் கொண்டிருந்தவர்களும், ஆவூரில் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இறைநேசச் செல்வரும், எங்களது தந்தையுமான ஹஜ்ரத் சர்குருஹால் கஞ்சலிஷா மதாரி (ரஹ்) அவர்களின் உன்னதமான ரூஹை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக !! ஆமீன் ! யாரப்பல் ஆலமீன் !!

*தங்கள்*

அல்ஹாஜ். சர்குருஹால்.

**இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப்**

பரம்பரை முத்தவல்லி சர்குரு மதார்ஷா அவுலியா தர்கா,
ஆவூர், திருவாரூர் மாவட்டம்.

Cell : 9698663945

Rs. 80.00

## ஆசிரியர் உரை

புகழனைத்தும் ரப்புல் இஜ்ஜத் அல்லாஹ் ஜல்ல
ஜலாலஹுவுக்கே உரியது !!

தம் மதார் பேடா பார் !!    தம் மதார் பேடா பார் !!!

ஸலாமும் ஸலவாத்தும் ஹபீபு ரப்பில் ஆலமீன் அஹ்மது முஸ்தஃபா முஹம்மது முஸ்தஃபா ரசூல் (ஸல்) அவர்களின் பேரிலும் அவர்களின் குடும்பத்தினர்களாகிய அஹ்லெ பைத்துக்கள், கிளையார்கள், ஸஹாபாக்கள் மீதும் என்றென்றும் உண்டாவதாக !!

வல்ல நாயன் அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து அவனது திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் போற்றி அவர்களின் குலவழியில் தோன்றிய மஹபூபே சுபஹானி ஹழ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) நாயகத்தையும், அஜ்மீர் அரசர் ஹழ்ரத் கரீபு நவாஸ் காஜா முயினுத்தீன் சிஷ்தி (ரலி) அவர்களையும், குத்புல் மதார் ஹழ்ரத் சையதினா பதீஉத்தின் ஜிந்தாஷாமதார் (ரலி) அவர்களையும், திருச்சி ஹழ்ரத் சுல்தான் பாபாயே நத்ஹர் தப்லே ஆலம் பாதுஷா தவுல் சமந்தர் (ரலி) அவர்களையும், நாகூர் நாயகம் ஹழ்ரத் ஷாஹுல் ஹமீது காதிர்வலி கஞ்ஜேஸவாய் (ரலி) நாயகத்தையும், அவர்களின் தவப்புதல்வர் ஹழ்ரத் சையது முஹம்மது யூசுப் தாதா ஆரிப் பில்லாஹி நாயகத்தையும், எங்களது முன்னோர் ஆவூரில் அடக்கமாகி இருக்கும் ஹழ்ரத் சையதினா சர்குரு மதார்ஷா அவுலியா (ரலி) ஆகியோரின் அருளாசியையும், எங்களது தந்தை மர்ஹூம் ஹஜ்ரத் சர்குருஹால் கஞ்சலிஷா மதாரி சாஹிப் (ரஹ்) அவர்களின் துஆவையும் வேண்டி மன்றாடி இந்த என்னுரையை துவங்குகிறேன்.

நமது இந்திய துணைக் கண்டத்தில் பெரும்பாலும் அவுலியாக்களின் கூட்டத்தில் 596 வருடம் ஜீவித்திருந்து தீன் எனும் நேர்வழியைப் பரவச் செய்த நடு உச்சி பகலில் உதித்த சூரியனைப் போல பிரகாசித்து வந்த மஹா கீர்த்தியும், புகழும், சிறப்பும் சிறந்து விளங்குகின்ற லட்ச நீதிகர் ஷாம் எனும் தேசத்தில் ஹலபு நகரில்



பிறந்து வளர்ந்து இந்தியா உ.பி. மாநிலம் மக்கன்பூர் எனும் ஊரில் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் எங்கள் மெய்ஞ்ஞான சொரோப் ஆன்மிகச் சூரியன் ஹழ்ரத் குத்புல் அக்தாபு அ பர்துல் அஹ்பாபு ஷம்ஷூல் ஆரிஃபீன் சையதினா பதீஉத்தீன் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் புனித தர்கா ஷரீபை சென்ற 2012-ம் ஆண்டு ஜியாரத் செய்ய நாடி சென்றோம். அப்போது அந்த தர்கா ஷரீபின் சஜ்ஜாதா நஷீன் ஹழ்ரத் மௌலானா ஹாபிஸ் சையத் மஹ்ஸர் அலி காரி வக்காரி மதாரி அவர்களை சந்தித்த போது, நமது ஷஜ்ராவை பார்த்து விட்டு பெருமிதப்பட்டு நம்மை நல்ல விதமாக கண்ணியப்படுத்தி உபசரித்து ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் வரலாற்று உருது நூல்களை கொடுத்து ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் வரலாறை உங்களது தமிழ் மொழியில் மொழி பெயர்த்து வெளியிடுங்கள் என ஆலோசனை கூறினார். இதற்கு முன்பு தமிழகத்தில் 1923-ம் ஆண்டு காஞ்சி ஹாபிஸ் மௌலவி காஜா முஹம்மது ஆலிம் சாயபு அவர்களால் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் வரலாற்று நூல் பழைய தமிழ் நடையில் வெளியாகி இருந்தது. இந்த ஒரு நூல் மட்டுமே தமிழில் வெளி வந்துள்ளது. இருந்தாலும் அதன் பதிப்புகள் மறுபடி வராமல் இப்போது உள்ள சந்ததிகள் பலரால் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களைப் பற்றி தெரியாத நிலை உண்டாகி உள்ளது. எமது தந்தை ஹஜ்ரத் சர்குருஹால் கஞ்சலிஷாமதாரி அவர்களின் வஸிய்யத்படி நாமும் மறுபதிப்பு செய்யனும் என எண்ணிக் கொண்டிருந்த நிலையில் மக்கன்பூரில் ஹழ்ரத் சையத் மஹ்ஸர் அலி அவர்கள் கூறியது எம்மை மேலும் தூண்டியது. எமக்கு ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களே கூறியது போல உணர்ந்தோம்.

அதன்பின் "தாரிக்குல் மதாருல் ஆலம்" என்ற உருது நூல் மற்றும் தமிழில் வெளிவந்த "கவாகிபுல் அன்வார்ஃபீ மணாகிபில் குத்பி ஜிந்தா ஷாஹ் மதார்" என்ற நூலையும் நோட்டமிட்டு, தஞ்சை தர்கா இதழின் ஆசிரியர் மௌலவி. M.சையத் அஹ்மது M.A., அவர்கள் மூலம் தஞ்சை, மௌலவி. முஹம்மது பஷீர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து நாம் இரு நூல்களில் உள்ள

கருத்துக்களைத் தொகுத்து "ஆன்மீக சூரியன் ஹஜ்ரத் ஜிந்தா ஷாஹ் மதார் (ரலி)" என்கிற இந்த நூலை தொகுத்தோம்.

இது விஷயமாக தஞ்சை மாவட்டம், வழுத்தூர், வெள்ளம்ஜி குடும்பம் அவுலியாக்களின் நேசர் Er. M.J.முஹம்மது இக்பால் சாஹிப் மற்றும் அவரது சகோதரர் சமுதாய ஆர்வலர் M.J.அப்துல் ரவூஃப் சாஹிப் ஆகியோரிடம் நான் சொன்ன போது அவர்கள், தங்களது வெள்ளம்ஜி ஜமால் முஹம்மது தாவூத்பேகம் அறக்கட்டளை சார்பாக வெளியிடுவதாக மனமுவந்து கூறினார்கள். இந்நூலை வெளியிட உதவிய வெள்ளம்ஜி ஜமால் முஹம்மது குடும்பத்தார்களுக்கு இறைவனின் நல்லருளும், ஹஜ்ரத் ஜிந்தா ஷாஹ் மதார் (ரலி) அவர்களின் அருளாசியும் கிடைக்க நாம் இறைஞ்சுகிறோம்.

மேலும் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சில்லா இருந்த புகைப்படங்களை இணையதளத்தில் இருந்து திரட்டி தந்த எமது புதல்வி ஜனாபா. M.நூருல் ஃபஹிமா B.Com., M.B.A அவர்களுக்கும் இறையருள் கிடைக்க துஆ செய்கிறோம். இவ்வுயர்ந்த பணியின் நற்கூலியை எமது உடலுயிர் தந்தை ஹஜ்ரத் சர்குருஹால் கஞ்சலிஷா மதாரி சாஹிப் அவர்களின் ரூஹுக்கு அளிக்குமாறு வல்ல நாயனை பிரார்த்திக்கிறேன். இந்த நூலைப் படிப்போர், கேட்போர் இந்த நூல் உருவாக உதவியவர்கள் அனைவருக்கும் அல்லாஹுதஆலா இருலோக வரிசைகளையும், தரஜாக்களையும் கொடுத்தருள் புரிவானாகவும் ஆமீன் !!

அல்ஹாஜ். **S.மக்தூம் முஹ்யித்தீன்** (எ)
சர்குருஹால் **இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப்**
சர்குரு **ஷா தப்காத்தி மண்டல்தாரி ஜமா,** தமிழ்நாடு.
பரம்பரை முத்தவல்லி,
**ஹழ்ரத் சர்குரு மதார் அவுலியா தர்கா**
ஆவூர், திருவாரூர் மாவட்டம்.



## பதிப்புரை

அல்ஹம்துலில்லாஹ்

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யாரசூதுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், வஅஹ்லே பைத்தி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

ரஹ்மத்துன்லில் ஆலமீனாக வந்துதித்து, பிரபஞ்சங்களுக்கு இறைமறையையும், நேர் வழியையும் அருளிய நம் உயிரினும் மேலான நபிகள் நாயகம் ஹஜ்ரத் சையதினா முஹம்மது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களின் திருத்தோன்றலாக வந்துதித்து கோடிக்கணக்கான மாந்தர்களை சத்தியத்தின் வழிப்படுத்திய உயர்ஞான மகான், "குத்புல் மதார், மதாருல் ஆலமீன் ஹஜ்ரத் சையத் அஹமது பதிவுத்தீன் ஜிந்தாஷாஹ் மதார் நாயகம் அவர்களின் உயரிய வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை பல மொழிகளில் படித்து அதனை அழகான முறையில் நூலாசிரியர் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்கள்.

குத்புல் மதார் நாயகம் அவர்கள் திருநபிகளாரின் காலத்திற்கு சமீபமாக ஹிஜ்ரி 242ஆம் ஆண்டு பிறந்து, ஹஜ்ரத் சையதினா மௌலாஅலீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ஹஜ்ரத் சையதினா ஹாஜா ஹசன் பசரீ-ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹஜ்ரத் சையதினா ஹாஜா ஹபீப் அஜமி கத்தஸல்லாஹு ஸிர்ராஹுல் அஜிஸ் அவர்கள், ஹஜ்ரத் சையதினா அபா எஜிதில் பிஸ்தாமி கத்தஸல்லாஹு சிர்ராஹுல் அஜிஸ் அவர்கள் என்ற மிக சமீபத்தில் ஷஜ்ரா எனப்படும் ஞானப்பாட்டை சங்கிலித் தொடர்பில் உள்ள உயர்ஞான மகான் ஆவார்கள்.

தங்களின் திருப்பாட்டனார் ஆகிய ஹஜ்ரத் சையதினா இமாம் ஹுசைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஓர் எண்ணமான, "கிழக்கு தேசம் செல்ல வேண்டும்" என்ற எண்ணத்தை, தான் நிறைவேற்றும் விதமாக இறையோனின், உத்தமத் திருநபிகளாரின் ஆசியும், உத்தரவும் பெற்று கடல் மார்க்கமாக அன்றைய குஜராதின் கொராசான் மலைப் பகுதிகளில்

வந்தடைந்து, இறை தியானங்கள் செய்து, அங்கு வாழ்ந்து வந்த சித்தர்கள், யாக முனிவர்கள் போன்றோருடன் சிறப்பான முறையில் பழகி அவர்களின் வாழ்வில் பல படித்தரங்களை அடைய நேர்வழி காட்டி, நல்லுபதேசங்கள் செய்து இறை வேதத்தையும், திருநபிகளாரின் வழிமுறைகளையும் எடுத்துக் கூறி நல்வழிப்படுத்திய உயர்ஞான மகான் ஆவார்கள்.

தங்களின் திருப்பாட்டனார் திருநபிகளாரின் கரங்களால் 9 கவள சுவனத்து உணவையும், உயர் சுவனத்து உடையையும், அருளாக பெற்று அதன்பின் ஊன், உடுப்பு போன்ற உலக ஆசாபாசங்கள், தேவைகளும் இல்லாதவர்களாக சர்வ சதா காலங்களும், இறைவணக்கமும், இறைதியானமும், சீடர்களுக்கு நல்லுபதேச ஞானபோதனைகளும் வழங்குவது மட்டுமே செய்யக்கூடிய இறைநேசச் செல்வராக, 596 வயது நீண்ட நல்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் மதாருல் ஆலமீன் நாயகம் அவர்கள்.


பெரும் இறையருள் பெற்ற உயர்ஞான மகான், "குத்புல் மதார்" நாயகம் அவர்களின் வரலாற்று நூல் தமிழில் வெளியிட வேண்டும் என்ற அருமையான நூலாசிரியர் சர்குரு ஹால் இப்ராஹிம் அலிஷா சாஹிப் அவர்களின் கோரிக்கையை ஏற்று எங்களது "ஜமால் முஹம்மது தாவூது பேகம் பதிப்பகம்" சார்பாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். மற்றும் அருமையான நூலாசிரியர் அவர்களுக்கும், இந்த நூல் வெளிவர காரணமாக அவர்களுக்கு உதவியாக இருந்த நல்லோர்களுக்கும் வாசகப் பெருமக்களான தங்களுக்கும் இறைவனின் அருள்கிருபைகள் பொழியட்டுமாக ! ஆமீன் !!

வஸ்ஸலாம்

டாக்டர். **M.J.முஹம்மது இக்பால்** B.E., MBA.,Ph.D.,

வழுத்தூர்.





حضرت سیدشاہ رحمۃاللہ شطاری ولی‌اللہ درگاہ شریف کلہ
HAZRATH SYED SHA RAHAMATHULLAH SAHIB SHUTTARI
VALIULLA DARGAH TRUST (WAKF-ALAL-AULAD)
WAKF REGD. NO. GS 104 S/A

மௌலவி ஸையத் V.N.ஸக்காப்
முத்தவல்லி, தர்கா ஆபீஸ்,
கிள்ளை - 608 102. சிதம்பரம் (வழி)
தொலைபேசி : 04144 - 249263

Moulavi SYED.V.N. SAQAF
Muthawalli, Darga Office, KILLAI-608 102.
(Via) Chidambaram, Tamil Nadu.
Phone : 04144 - 249263

தம்மதார் பேடா பார்! دم مدار بیڑا پار! ۲۸ صفر المظفر ۱۴۴۰ ہجری Date 7.11.2018

ஓரு அருளே ! நிறையருளே !!

அல்லாஹ்விற்கே எல்லா புகழும்

ஸலவாத்து என்னும் ஈடேற்றமும், காருண்ய நபி கண்மணி நாயகம் ரசூலே கரீமின் "நாலைனே பாக்" என்ற திவ்விய பிரபந்த பாத ரட்சைக்கு என்றென்றும் உரித்தாகும் நம் நபிநாதர் அவர்களின் பரிசுத்த கிளையார்களா ! அஹ்லே பைத்து சாதாத்துக்கள், சாஹெப்மார்கள், சையத்மார்கள் மீதும் பெருமானாரால் தோழமையுடன் திவ்விய வாழ்நாள் தரிசனம் பெற்ற சஹாபா பெருமக்கள் மீதும், தாபயீன்கள், தபோ தாபயீன்கள் என நல்லோர்கள் மீதும் இறையோன் அருட்பார்வை இறங்குவதாக மற்றும் இறைநேசச் செல்வர்களாம் ஈடு இணையற்ற அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட வல்ல வலிமார்களின் கருணை கடாட்ச கடைக்கண் பார்வை என்றென்றும் நம் மீது ஒளி வீசட்டுமாக.

வலிமார்களின் சரிதைகள் தமிழ் கூறும் நல்லுலகில் இன்று குறைந்து வருகின்ற காரணத்தால் அல்லது வெளியிடப்பட்டவை மறு அச்சுகள் பெறாத காரணத்தால் சுமார் ஐம்பது ஆண்டுகளாக தேவ்பந்து தப்லீக் வஹ்ஹாபிகள் முதல் நவீன தௌஹித் வஹ்ஹாபிகள் வரை இன்றைய உலகில் இஸ்லாத்தின் ஆணி வேராகிய ஹகீதா கொள்கை வெண்ணீர் பாய்ச்சுகின்ற விஷமத்தனமான வேலைகள் ஆங்காங்கே இஸ்லாம் என்ற பெயரில் நாடகமாடிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் ஆலி ஜனாப். அல்ஹாஜ். S.மக்தூம் மொஹ்யித்தீன் என்கிற சர்குருஹால் இப்ராஹிம் அலிஷா மதா சாஹெப், சர்குரு ஷா தபகாத்தி மண்டல்தாரி ஜமா, தமிழ்நாடு மற்றும் பரம்பரை முத்தவல்லி ஹஜ்ரத் சர்குரு மதார்ஷா அவுலியா தர்கா, ஆவூர், திருவாரூர் மாவட்டம் அவர்கள் அளப்பறிய பெரும் பணியினை மேற்கொண்டு எஜமானார் சற்குருநாதர் மதாரிஷா அவர்களின் ஜீவ

சரித்திரத்தை தமிழாக்கம் செய்து "ஆன்மீக சூரியன்" ஹஜ்ரத் ஜிந்தாஷா மதார்" என்ற நூலை சிறப்பாய் வெளியிட்டிருப்பது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, அந்த வலியுல்லாவின் கராமத்தான அற்புதம் என்னவென்றால் அவர்களின் பாரம்பரியத்தில் வந்த நமது நூல் தொகுப்பாளரானவர் மூலமாக இந்நூல் வெளிவரும் என்பதை வைடூரிய பொக்கிஷமாகவே கருத வேண்டும். அதை வெளியிட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து பேர்களும் பாராட்டுக்குரியவர் ஆவர். ஹஜ்ரத் சையிதி ஜிந்தாஷாஹ் மதார் அவர்களை பற்றி அரபு, பாரசீக உருதுவில் நூல்களாக வெளிவந்து இருந்தும், பல மெய்ஞான நூல்களில் அவர்களை பற்றிய குறிப்புகள் இருந்தாலும், இக்காலத்தே இந்நூல் வெளிவருவது சிறப்புக்குரியதாகும்.

ஜமாஅல்லா ஃபகீர்மார்கள் எனும் இறை வலிமார்களின் நேசத்தையும், கிதமத்து என்னும் பணிவிடைகளையும் செய்வதற்காக தோன்றி வளர்ந்து வாழையடி வாழையாய் சட்டதிட்டங்களின் ஊடே பாத்திஹா, தரூத், ஸலாம், சலவாத்து, நிதாசதா, நிஃபில் என்னும் சூர் குழல் ஊதி, பாஜீதார், கொத்துவால், பண்டாரி, பண்டாரா, சற்குரு சஜ்ஜாத நஷின் மற்றுமு; அதன் தாத்பரிய வாயிலாக ஷரிஅத் சட்டத்தினூடே கொடி பிடித்து அஸா கோள் தாங்கி நிதா, சதா என்னும் கட்டியம் கூறி டங்கா என்ற கொட்டு, நகாரா, தாயரா அடித்து வீதி தோறும் வலம் வந்து இறைநேசச் செல்வர்களாம் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வல்ல விமார்களின் தர்கா சந்நிதானங்கள், தைக்கால்கள், ஆஸ்தானாக்கள், பஞ்சா ஆஷிர்கானாக்கள், கான்காக்கள் என்ற இஸ்லாமிய ஏகத்துவ தத்துவத்தில் அல்லாஹ், முஹம்மது மொஹ்யித்தீன் என்ற நேர்கோட்டில் தஸவுஃப்பு என்ற மெய்ஞான நடைமுறையில், குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் என்ற ஷரீஅத் சட்டங்களுக்கு உட்பட்டு நடைமுறைப்படுத்தும் தர்காக்கள் தோறும் நடைபெறும் மேற்சொன்ன அத்தனை நற்காரியங்களும் தர்காக்களில் இருக்கின்ற மரபுவழி நடைமுறைகளை செயல்படுத்துபவர்களே ஃபக்கீர்மார்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

இந்நூலை வாசிக்கும் போது நாம் மேற்சொன்ன நடைமுறைகளின் ஆதாரங்கள் எஜமான் சற்குருநாதர் ஜிந்தாஷா மதார் ரஹ்மத்துல்லாஹ் அவர்களின் அற்புத கராமத்துகளும், மெய்ஞான இறை ரகசிய வழிபாட்டு கோட்பாடுகளும்,



ஸூஃபியத்தின் சன்மார்க்க சாட்சிகளாய் இந்த நூல் குதுப்புஜ்ஜமான் ஷா மதாரின் மேன்மையையும், கண்ணியத்தையும், சங்கையையும், வல்லோன் அல்லாய் எப்படி அவர்களை நேசிக்கின்றான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் புலனாகும்.

இந்நூலுக்கு நாம் செலுத்தும் மரியாதையும், காணிக்கையும் என்பது அதை வாங்கி வாசித்து கருத்து கருவூலங்களையும், ஸூஃபியத்து போதனைகளையும் உள்வாங்கினால் இம்மையான இவ்வுலகில் சௌபாக்கியங்களுக்கும், நிம்மதிகளுக்கும் குறையிராது என்பதோடு மறுமையில் ஹஜ்ரத் ஷா மதாரின் கண்ணிய சமூகத்தின் துவாவினால் நாம் ஈடேற்றம் பெறுவோம் என்பது திண்ணம்.

ஃபக்கீர்மார்களின், வலிமார்களின் அற்புத காரணியாக விளங்கும் இந்த மாரிஃபத்தான நூலுக்கு அற்பனும் லாயக்கற்றவனுமான எம்மை போன்ற ஃபக்கீரிடம் மதிப்புரை வழங்க ஆணையிட்ட நூலின் கோர்வையாளர் சங்கை மிகு சர்குரு. அல்ஹாஜ். இப்ராஹிம் அலிஷா மதாரி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு சுருக்கமான இம்மதிப்புரை நிறைவாய் இருந்தால் அது அம்மஹானின் கருணையே ஆகும். குறைகள் நிறைந்திருப்பின் இவ்வெளியோன் மன்னிப்பை வேண்டுகிறோம்.

அல்லாஹ் பஸ் பாக்கி ஹவஸ் ஏகோனே நிறைந்தவன்
மற்றவை அனைத்தும் மாயையே.
நன்றி ! வஸ்ஸலாம்.

இங்ஙனம்
என்றும் பணிவுடன், தாழ்மையுள்ள,
**சையத் ஷா வஜீஹுன்னகி சக்காப்**
தஃஜீம்தரக் காரிரி, ஷீத்தாரி
சஜ்ஜாதாநிஷீன் & டிரஸ்டி
ஹசரத் ரஹ்மத்துல்லா வலியுல்லா தர்கா,
கிள்ளை - 608 102, சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்.
தொலைபேசி எண் : 04144 - 249263

# புகழ்பா

பார்வையுள்ளோர் பாரீர்
புத்தியுள்ளோர் கேளீர் … மதார்
மகான்களின் முன் வரிசையில் …
மானிடர் எவரும் மரியாதையோடு
தரை நோக்கி விழி சரியும் தர்பார் …
நாடியவரை நாடிய படியாக்கும்
நாயன் அவனே … நாடியதை நடத்தும்
ஆற்றல் அளித்த வலி …
மகத்துவம் மிக்க வலிகளின் முன்
ஒன்றுமில்லை நாமெல்லாம் உணர்ந்து கொள்வீர்
மதார் … ஒரு மலர்
அம்மலரின் மணத்தால் விலாயத் பூஞ்சோலை
வசந்தம் வீசுகிறது …
இப்பிரபஞ்சம் எவனுடையதோ
அவனுடையது வலி மதார் …
இந்த மஹ்ஜரின் சொல்லருகி… அவ்வலியின்
புண்ணியத்தால் பிறந்ததுதான்.

**- மஹ்ஜர் மதாரீ**

சிறப்பு மிக்க சிரியாவில் (ஷாம்) பிறந்து இந்தியத் திருநாட்டில் உத்திரப்பிரதேசம் மக்கன்பூரில் குடிகொண்ட மகான் ஹஜ்ரத் ஷாஹ் மதார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் வரலாற்றை தமிழுலகம் அறியத் தருகிறோம்.

அல்லாஹ், ரசூல் அங்கீகரிக்கட்டும். அம்மகானின் நல்லாசி நிலவட்டும்.

தம் மதார் பேடா பார்!
***DHAM MADHAAR BEDA PAAR !!***



# அணிந்துரை

இறையோனின் சாந்தியும், சமாதானமும் நம் அனைவர்கள் மீதும் நிலவட்டுமாக ! ஆமீன் !!

அருமை நூலாசிரியர் அவர்களால் "மகான் குத்புல் மதார் ஹஜ்ரத் சையத் பதீவுத்தீன் ஜிந்தாஷாஹ் மதார்" நாயகத்தின் வரலாற்று சுருக்க சரிதத்தை எங்கள் ஜமால் முஹம்மது தாவூது பேகம் அறக்கட்டளை சார்பாக எம் அருமைச் சகோதரர், சமுதாயப் பேரொளி, அறிவியல் அறிஞர். டாக்டர். M.J.முஹம்மது இக்பால் B.E., M.B.A., அவர்களின் பெரும் முயற்சிகளால் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

குத்புல் மதார் நாயகத்தை பற்றி சிறுவயதிலேயே நாங்கள் பெற்றோர்கள் வழியாக அறிந்து இருந்தாலும் அவர்களின் சிறப்பான முழு சரித்திரமும் சமீப காலங்களிலேயே இணையதளம் மூலமாகவும், எனதன்பான ஆவூர் ஜனாப்.சூஃபி நௌஷாத் அலி @ கலிபா முஹம்மத் அலிஷா மதாரி சாஹிப் அவர்கள் மூலமாகவும் அறிய முடிந்தது. அதனை தமிழில் சுருக்கமாக வெளியிட வேண்டும் என்ற உந்துதல் இருந்தாலும் தக்க சமயத்தில் நூலாசிரியர் அவர்களின் கோரிக்கையாலும் உடன் ஈடேறிது.

வலிமார்களின் அருள் பெற்ற எங்கள் வழுத்தூரில் அடங்கியுள்ள இறைநேசச் செல்வர்கள் ஹஜ்ரத் சையதினா ஷா மத் திவான், ஷா ஷாத்ரத் திவான், ஷா கல்கல் திவான் கத்தஸல்லாஹு சிர்ராஹுல் அஜீஸ் அவர்களும் குத்புல் மதார் நாயகத்தின் "ஷா தப்காத்தி மதாரியா தரீ க்கா" வை சேர்ந்தவர்கள் என்பதும் சிறப்பம்சமாகும். இந்த இறைநேசச் செல்வர்களின் கராமத்துக்களை காரணீயங்களை நாங்களும் எங்கள் குடும்பத்தார்களும் நிறைய அனுபவித்துள்ளோம்.

மேலும் ஆசிய ஜோதி நாகூர் நாயகமாம் ஹஜ்ரத் குத்புல் மஜிது ஷாகுல் ஹமீது காதிர் வலி கஞ்சஷவாயி கஞ்சபக்ஷ் பாதுஷா அவர்களும் குத்புல் மதார் நாயகத்தின் தரீக்காவின் கிலாபத்தும், இஜாஸத்தும் பெற்று பாக்கியங்கள் பெற்றவர்கள் என்பதும் சிறப்பாகும்.

மிகுந்த முயற்சிகளால் பல மூல நூல்களிலிருந்து பல முக்கிய வரலாற்று சம்பவங்களை சுருக்கமாக எழுதியுள்ளார்கள். நூலாசிரியர் சர்குரு ஹால் இப்ராஹிம் அலிஷா அவர்கள். அருமை வாசகர்களாகிய தாங்கள்சிறப்புடன் நூலை வாசித்து நூலாசிரியர் அவர்களுக்காகவும், உறுதுணையாக நின்றவர்களுக்காகவும் எல்லா சிறப்புகளையும் அடைய இறையோனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்.

வஸ்ஸலாம் !

சமுதாய நல ஆர்வலர்.

வெள்ளம்ஜி. அல்ஹாஜ். **M.J.அப்துல் ரவூஃப்** D.M.E.,

வழுத்தூர்.

01.05.2019



# கருத்துரை

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

சிறப்பும் மேன்மையையும் மிகுந்த மகான் ஹஜ்ரத் குத்புல் மதார், மதாருல் ஆலமீன் சையத் பதீவுத்தீன் ஜிந்தாஷாஹ் மதார் கத்தஸல்லாஹு ஸிர்ராஹுல் அஜிஸ் அவர்கள் சுருக்கமான, அற்புத வரலாற்று பதிவை பல்வேறு நூல்களிலிருந்து திரட்டி மொழி பெயர்த்து ஆசிரியர் அவர்கள் வடித்துள்ளார்கள். நமது உயிரினும் மேலான ஈருலக வேந்தர். நபிகள் நாயகம் ஹஜ்ரத் சையதினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதக் குடும்பமாம், (அஹ்லே பைத்) ''புனிதர்கள் ஐவர்'', ''பஞ்சதனே பாக்'', எனும் ஹஜ்ரத் சையதினா மௌலா அலீ இப்னு அபூதாலிப் அலைஹிஸ்ஸலாம் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள், ஹஜ்ரத் சைய்யிதா ஃபாத்திமா பின்த் ரசூல் அலைஹிஸ்ஸலாம்., ஹஜ்ரத் சையதினா இமாம் ஹஸன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ஹஜ்ரத் சையதினா இமாம் ஹுசைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் திருத்தோன்றலாக, சையதாகப் பிறந்து இறைவனின் அருளால் மிக நீண்ட ஆயுள் காலங்கள் இந்த மனித குலத்திற்கு இறை சேவைகள் செய்த நாயகம் ஹஜ்ரத் குத்புல் மதார் சையதினா பதீவுத்தீன் ஜிந்தாஷாஹ் மதார் தைபூரிஷ்ஷாமி (கத்தஸல்) சீரிய வரலாற்றை அறிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் ஏக இறைவனே, தம் அருள்மறையாம் திருமறையில் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் முதல் ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் வரை வாழ்ந்து வழிகாட்டிய நபிமார்கள். குகைத் தோழர்கள் போன்ற நல்லடியார்கள் பற்றியும் மானிட சமுதாயம் படிப்பினை பெற எடுத்தியம்பியுள்ளான்.

அதுபோலவே ஏக இறையோனை அவனுடைய நல்லருளைக் கொண்டு ஹக்கை அறிந்து அடைந்து, அவனுடைய திருப்பொருத்தத்திற்கு ஏற்பவே வாழ்ந்து மறைந்த சாலிஹீன்கள், நல்லடியார்கள், மகான்களைப் பற்றி அறிந்து அவர்கள் வழி நடப்பது நன்மை பயப்பதாகும்.

இந்நூலின் கொடைநாயகர் சமுதாயப் பேரொளி, வழுத்தூர் எமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய வெள்ளம்ஜி. டாக்டர். M.J.முஹம்மது இக்பால் B.E., M.B.A., அவர்களின் சிறப்புகளை சுருக்கமாக எழுத வேண்டுமானாலும், நூற்றுக்கணக்கான பக்கங்கள் தேவைப்படும். பெருந்தகையவர்கள் சிறு வயது முதலே மிகச்சிறந்த ஞானம் அறிந்த ஆன்மீகவாதியாகவும், சக மனிதர்களிடமும் இறைவனின் ரூஹ் உள்ளது என்ற "மஃரீபா"வின் சிந்தனையில் அனைவரிடமும் ஒரே விதமாக பழகும் சிறந்த குணமுடையவர். சாதி, சமய, நிற, இன பேதமின்றி ஆயிரக்கணக்கான மானிடர்களை தங்களின் தொழில், வேலைவாய்ப்பு உதவிகள் மூலமாக அவர்களை தொழில் நுட்பங்கள் அறிந்து, அவர்கள் உயர்நிலையை அடையச் செய்து பெரும் செல்வந்தர்கள் ஆகவும் ஆக்கிய, ஆக்கிக் கொண்டிருக்கும் பெருந்தகையாளர்கள். அந்த வகையில் இந்த எளியோனும் கடந்த கால் நூற்றாண்டுகள் காலமாய் பெருந்தகையவர்களின் நேசத்தால் பிணைக்கப்பட்டு அவர்கள் உடன் பணி செய்யும் பேறு பெற்றவன். "வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாவண்ணம்" ஏழைகளுக்கு உதவுதல்.

"ஒரு நாளைக்கு 70 முறை உங்கள் பணியாளரை மன்னியுங்கள்" என்ற நபிகள் நாயகத்தின் பொன்மொழிக்கு ஏற்ப வாழும் மகான். தான் தொடங்கும் எந்த காரியம் ஆனாலும் அது நபிகளாரின் சொல், செயலுக்கு உகந்ததா என உறுதி செய்த பின் செயல்படுத்தும் உயர் குணமுடையவர். அனைத்திற்கும் மேலாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்கள்தம் புனித அஹ்லே பைத்துக்களின் மீதும், வலிமார்களின் மீதும் மிகுந்த மரியாதையும், நேசமும் மிக்கவர்கள். அதேபோல் இவர்களின் தமையனார், எமது மரியாதைக்குரிய அண்ணன். சமுதாய நல ஆர்வலர். அல்ஹாஜ். M.J.அப்துல் ரவூஃப் சாஹிப் அவர்களும், தங்கள் தம்பி அவர்களின் நற்செயல்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து மிக நேர்த்தியான அனுபவமும், ஆற்றலும் மிக்கவர். பல ஞானிகளின் தொடர்பில் எப்போதும் உள்ள சான்றோர். மொத்தத்தில்



பெற்றோர்களின் பெயர் பெருமையுடன் விளங்கிடும்படி வாழ்பவர்கள் "வெள்ளம்ஜி" குடும்பத்தார்கள். வல்ல இறையோன் அல்லாஹ், இவர்களுக்கும் இவர்களின் குடும்பத்தார்களுக்கும், நோய் நொடியற்ற நீண்ட நல்வாழ்வினையும், நிறைவான அபிவிருத்தியுடன் கூடிய செல்வங்களையும் வழங்கியருள் புரிவானாக ! ஆமீன் !!

மேலும், எமது மரியாதைக்குரிய தந்தை நாயகமும், ஆத்மீக தந்தையாரும் ஆகிய ஹஜ்ரத் சைகு, சர்குரு ஹால் கஞ்சலிஷா சாஹிப் மதாரி அவர்களுக்கும், எமது சைகு. ஹஜ்ரத் கலீபா. அப்துல்லாஷாஹ் பண்டாரி சாஹிப் அவர்களுக்கும், இறையோன் நல்சுவனத்தை அருளிட இறைஞ்சுகிறோம். நோய்வாய்ப்பட்டுள்ள எமது P.பீர் கலீபா சையத் ஜமாபக்ஷ் அலிஷா மதாரி சாஹிப் அவர்களுக்கும், எமது அன்புத் தாயார், மரியாதைக்குரிய சைய்யிதா. நூருன்னிஸா அவர்களுக்கும் அவர்களின் பிணி நீங்கி நல்வாழ்வு வாழ இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

மேலும், இந்த அருமையான நூலின் ஆசிரியரும், எமது மதிப்பிற்குரிய மூத்த சகோதரரும், P.பீர்பாயும் ஆகிய தமிழ்நாடு ஷா தப்காத்தி மதாரியா ஜமாவின் சர்குருவும் ஆன ஹாஜி. சர்குரு ஹால் இப்ராஹிம் அலிஷா மதாரி சாஹிப் அவர்களுக்கு நோய் நொடியற்ற நீடித்த நல்வாழ்வையும், பேரருளையும் புரிய இறையோனை இறைஞ்சுகிறோம். மேலான வாசகர்களாகிய தாங்களும் அருளான கொடைநாயகர்களுக்கும், அருமையான ஆசிரியர் அவர்களுக்கும் இறையோன் நல்லருள் கிருபைப் புரிய இறைஞ்சிட வேண்டுகிறேன்.

அல்ஹம்துலில்லாஹ்

ஜனாப். கலிபா. **முஹம்மது அலிஷா ஆஷிகானே மதாரி சாஹிப்**

**(எ) நௌசாத் அலி**

சில்சிலா ஏ ஷா தப்காத்தி மதாரியா.,

ஆவூர், தமிழ்நாடு.

02.05.2019

## ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் தந்தை வழி

ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் இயற்பெயர் கையத் காஜா பதீஉத்தீன், சயிக்கினை பெயர் "அபூதுறாப்" பட்டப் பெயர். ஷாஹ் மதார். அவர்கள் தந்தை பெயர் சையது குத்வத்துத்தீன் அலீஹலபி அவர்கள் தந்தை சையது பஹாபுத்தீன் அவர்கள் தந்தை சையது லஹீருத்தீன் அவர்கள் தந்தை சையது அஹமது அவர்கள் தந்தை சையது இஸ்மாயில் அவர்கள் தந்தை இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி) அவர்கள் தந்தை இமாம் ஹீசைன் (ரவி) அவர்கள் தந்தை ஹஜ்ரத் மௌலா அலீ கர்ரமல்லாஹீ வஜ்ஹஹீ இந்த விவரம் ஸியருல் மதார் என்ற கிதாபில் உள்ளது.

**தாயார் வழி :** நாயம் ஜிந்தாஷாஹ் (ரலி) அவர்களின் தாயார் பெயர் பீபீ ஹாஜிரா பட்டப் பெயர் ஃபாத்திமா. இவர்கள் தந்தை வழி அப்துல்லா, சையத் ஸாஹித், சையது முஹம்மது, சையத் ஆபித், சையது அபூசாலிஹ், சையது யூசுப், சையது அபூல்காசிம், சையது அப்துல் லாஹித் மஹ்லு, சையது ஹஸனுல் முஸன்னா (ரலி), ஹஜ்ரத் சையதினா, ஹசன் (ரலி), ஹஜ்ரத் சையதினா மௌலா அலி, கர்ரமல்லாஹீ வஜ்ஹஹீ...

## ஹலபில் உதித்த கதிரவன்

விலாயத் வேந்தர், ஹஜ்ரத் சையது பதீஉத்தீன், குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) எனும் விலாயத் சூரியன் சிறப்பு மிகு ஷாம் தேசத்தில் பிரபலமான ஹல்பு எனும் ஊரில் ஹிஜ்ரி 242ம் ஆண்டு ஷவ்வால் பிறை 1 அன்று உதயமானது. ஈதுல் ஃபித்ர் பெருநாள் பிறை மட்டுமின்றி மதார் எனும் ஆன்மீக சூரியனும்தான்.

ஹிஜ்ரி 242ல் குரோஸான், நைஷாபூர், தபீருஸ்தான் இஸ்ஃபஹான் போன்ற முக்கிய ஊர்களில் ஏற்பட்ட நில நடுக்கத்தாலும் அரபுலகம் பெரும் பாதிப்பிற்கு உள்ளானது. இதில் ஹலபு நகரம் மட்டும் தப்பவில்லை. அங்கும் பெரும் பாதிப்பு இந்த சூழலில்தான் புனித ரமலான் வந்தது. அப்போது திடீரென ஒரு நாள் எங்கிருந்தோ வந்த ஒரு பறவை ''யா மஃஷரன் நாஸ் இத்தக்குல்லாஹ்" என கூவிக் கொண்டே போய் மறைந்தது.



அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் என்ற அதன் கூக்குரல் மறுநாளும் கேட்டது. மக்களின் உள்ளங்களில் கிலி ஏற்பட்டது. ஹிஜ்ரி 242ன் ரமலானும் பதட்டமாகவே கழிந்தது. ஹிஜ்ரி 242 ஷவ்வால் 1 அதாவது பெருநாள் பிறை வந்தபோது... அந்த விடியல் உணரப்பட்டதில் வியப்பில்லை. முசீபத் காலத்தில் அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடை வந்தால்தான் அருளின் அருமை புரியும். வெயிலில் தானே நிழலின் அருமை தெரியும். ஆம் இந்நேரத்தில் தான் ஆன்மீகச் சூரியன் "ஷாஹே மதார்" அவதரித்தார்கள்.

ஹஜ்ரத் ஷாஹ் மதார் (ரவி) அவர்களுக்கு 3 மூத்த சகோதரர்கள் ஹஜ்ரத் சையத் மக்சூதுத்தீன், ஹஜ்ரத் மஹ்லூபுத்தீன், ஹஜ்ரத் சையத் நிஜாமுதீன் 3 பிள்ளைகள் இருந்தபோதும் ஹஜரத் சையத் குத்வத்துத்தீன் அலி ஹலபி அவர்களுக்கு சத்திய சன்மார்கத்திற்காக தம்மை அர்ப்பணிக்க கூடிய ஒரு மகன் வேண்டுமென்று துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

**"அந்த துஆவும், அவாவும் நிறைவேறிய கோணம் கேளீர்"...**

ஒரு நாள் இரவு கனவில் ஹஜரத் முஹம்மதுர் ரசூலுல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்கள் திருக்காட்சி தந்து "அலியே! உம் அவா துவா அங்கீகரிக்கப்பட்டது. விரைவில் அல்லாஹீத்த ஆலா உமக்கு ஒரு மகத்தான மாபெரும் கராமத்துக்களை நிகழ்த்தும் வலியுல்லாஹ்வை வாரிசாக்குவான். அவரை குத்பாக உயர்த்தி வைப்பான். மதாருல் ஆலமீன் எனும் கிரீடம் கட்டப்போகிறான். அவர் மூலம் வழியறியா லட்சோப லட்சம் மக்கள் நேர்வழி பெறப் போகிறார்கள். அவரின் லட்சணத்திற்கேற்ப பதீஉத்தீன் (சன்மார்க்கத்தை புத்தாக்கம் செய்பவர்) எனப் பெயர் வைப்பீர் என சுப சோபனம் கூறினார்கள். சுபஹானல்லாஹ் இத்தகைய சீதேவிகளின் வம்சத்தில் மேன்மக்களின் ரத்தத்தில் தோன்றி ஹஜ்ரத மதார் ஆலம் சையத் பதீவுத்தீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கராமத் உடைய வலிய்யுல்லாஹ் வாகவேப் பிறக்கிறார்கள்.

பிறந்த நேரத்தில் வீடு முழுதும் மிக்க பிரகாசத்துடன் பல அற்புதங்களும் வெளியாயிற்று. தங்கள் தாயின் வயிற்றை விட்டு

ஸஜ்தாவின் கோலத்தில் = லாயிலாஹ = இல்லல்லாஹீ, முஹம்மது ரசூலுல்லாஹி எனும் மணமான கலிமாவை ஓதியபடி தறிபட்டார்கள். அப்போது வானிலிருந்து ஒரு அசரீரி "ஹாதா வலியுல்லாஹ்" இவர் ஓர் அல்லாவின் வலியாக உள்ளார் என கேட்டது. இந்த சப்தத்தை அங்கு கூடியிருந்த அனைவரும் கேட்டு ஷாஹ்மதார் (ரலி) அவர்களின் மகிமையை எண்ணி வியந்தார்கள். மேலும் ஹஜ்ரத் மதார் (ரலி) அவர்கள் பிறந்த போது நாயகம் ரசூல் (ஸல்) அவர்கள் தங்கள் சஹாபாக்கள் புடைசூழ ரூஹானியத்தின் மூலமாக ஹாலிராகி செய்கிறார்கள். பின் ஹில்ரு (அலை) அவர்கள் வந்து, ஹஜ்ரத் மதார் (ரலி) அவர்கள் தந்தைக்கு நன்மொழி சுபசோபனம் கூறி மறைந்தார்கள். "அலா இன்ன அவ்லியா அல்லாஹி லா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்".

ஹஜ்ரத் ஷைகுல் மஹாயிக் ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 310ன் காலகட்டத்தில் ஒரு ஹதிஸ் ஷரீஃபை எடுத்து எழுதுகிறார்கள். ஹஜ்ரத் ரசூலே கரீம் (சல்) அவர்கள் கூறுகிறார்கள். இருநூறு ஆண்டுகளுக்கு பின் உங்களிடையே ஹஃபீஃபுல் ஹாஸ் **(HAFEEFUL HAASH)** ஒருவர் வருவார் என கூற யாரசூலுல்லாஹ்! "ஹஃபீஃபுல் ஹாஸ்" என்றால் என்ன? என நபித்தோழர்கள் வினவ மனைவி மக்களற்ற துறவி என பதில் தந்தார்கள். கஷ்ஃபுல் ஹஜீபின் 519ம் பக்கத்தில் ஷைகு மார்களில சிலர் மணவாழ்வை விரும்பாது இருந்தது. இந்த ஹதீஸின் அடிப்படையில் அமைந்ததே. (மற்றபடி பொதுவாக துறவறம் அனைவருக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல. இது குறித்து நிக்காஹ் அனைவர் மீதும் கட்டாயமானதுமல்ல. இது குறித்து நிக்காஹ் சம்பந்தப்பட்ட ஃபிக்ஹ் அவசியம் என்பதை இங்கே வலியுறுத்துகிறோம். அறியாமை வாதிகளால் தான் சமூகத்தில் குழப்பங்கள் ஏற்படுகிறதென்பதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுகிறோம்).

"ஹஃபீஃபுல் ஹாஸ்" (எனும் துறவிகள் பலர்) குறுகிய காலத்தில் மக்களில் பலரையும் விட சிறப்பிற்குரியவர்களாக திகழ்வார்கள் என கூறியுள்ளார்கள்.

ஹஜ்ரத் உஸ்மான் அலி ஹுஜ்ரீ (ரஹ்) கூறுகிறார்கள். எவர்



உள்ளம் இச்சை எனும் ஆபத்தில்லாது உள்ளதோ, எவரின் இயல்பே இச்சையின் உந்துதல் இல்லாது பாசம் விளையாது பரிசுத்தமாக உள்ளதோ அவரின் துறவறம் அறமே என்பது மஷாயிக் மார்களின் கொள்கையாகும்.

அத்தகைய ஹஃபீஃபுல் ஹாதாக தூய்மை உள்ளம் கொண்டவர்களாக தம் உள்ளத்தால் முழுக்க முழுக்க அல்லாஹ் ரசூலையே நிரப்பியவர்களாக அல்லாஹ் ரசூலின் திருப்திக்காகவே வாழ்ந்த அறப்பணி செய்த சீதேவிகள் மேன் மக்கள் தான் என்பதை மறுக்க முடியாது.

அத்தகைய சிறப்பு மிக்க ஹஃபீஃபுல் ஹாத் ஹஜ்ரத் சையது பதீஉத்தின் குத்புல் மதார் (ரலி) அவர்களை குறித்து தான் பேசிக் கொண்டுள்ளோம்.

## கர்ப்பத்தில் கராமத்

ஆன்மீகச் சூரியன் மதார் ஆலம் (ரலி) தம் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே கராமத் நிகழ்த்தியதை அன்னவர்களின் அன்னை சொல்வதை கேட்போம். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் என் வயிற்றில் இருந்தபோது நான் பற்பல அற்புதங்களை உணர்ந்தேன். அதிசய கனாக்கள் கண்டேன். சோபனம் கூறக் கேட்பேன். கர்ப்ப கால அவஸ்தைகள் கொஞ்சமும் இல்லை. நான் ஏதேனும் சந்தேகத்திற்குரிய உணவை சாப்பிட்டுவிட்டால் வயிற்றில் சென்றதும் உடனுக்குடன் வெளியேறிவிடும். அன்னவர்களுக்கு பாலூட்டும் பருவத்திலும் பல அற்புதங்களை கண்டேன்.

அழுது கொண்டிருப்பார்கள் பாங்கு சத்தம் கேட்டவுடன் அழுகை நின்றுவிடும். குர்ஆன் ஓதினாலும் அமைதியாக கேட்க ஆரம்பித்து விடுவார்கள். ஞானபார்வையுள்ள சீதேவிகள் அவர்களைக் கண்டால் பதீஉத்தீனே! வலியாக பிறந்த சீதேவியே! என்று சொல்லிக் கொண்டே தூக்கிக் கொஞ்சுவார்கள்.

**கல்வி :** நாயகம் (ரலி) அவர்களுக்கு 4 வயது 4 மாதம் 4 நாள் நிரம்பியபோது அவர்களின் தகப்பனார் திருக்குர்ஆன் ஓதவைப்பதற்காக அப்போது பிரபல்யமாக இருந்த மௌலானா

ஹீஸைபத்துஷ்ஷாமி (ரஹ்) சொல்கிறார்கள். நான் மிகுதியாய் கனவில் இவ்வாறு சொல்லப்பட்டு வந்தேன். அதாவது, ஒருவர் என்னை நோக்கி உம்மிடம் ஓதுகிற பதீஉத்தீன் அல்லாஹ் தஆலாவுக்கு உகந்த ஒலியாக ஆகிவிடுவாரென நன்மாராயம் சொல்லி வந்தார். அவ்வாறே அவர்கள் அந்த பதவியை பெற்றவர்களாகி 14 வயதிற்குள் லாஹிரான இல்முகளை படித்து நிறை பூரணமாக தேர்ச்சி அடைந்து அக்காலத்தில் பயிற்சி பெற்ற மஷ்ஹூரான உலமாக்களில் ஒருவராகவும் விளங்கினார்கள்.

இன்னும் சாதாத்மார்கள் போன்ற சீதேவிகளிடம் இம்முறை நடைமுறையில் உள்ளது. குறிப்பாக மக்கன்பூரில் உள்ள சாதாத்மார்கள் தம் குழந்தைக்கு 4 வருடம் 4 மாதம் 4 நாட்கள் பூர்த்தியானதும் மக்கன்பூர் மகான் நம் ஆன்மீக சூரியன் மதார் ஆலம் (ரஹ்) அன்னவர்களின் தர்பாருக்கு அழைத்துச் சென்று முதன் முதலாக பிஸ்மி சொல்லிக் கொடுத்து பாடம் சொல்லிக் கொடுத்து அன்னவர்களின் ஆசி பெறுவது வழமையாக உள்ளது.

தம் நான்காம் வயதில் கல்வி பயிலத் துவங்கிய நம் மகான் 14ம் வயதிலேயே கல்வி ஞானத்தில் சம்பூரணத்துவம் பெற்றார்கள். அக்காலத்திலேயே ஷாம் தேசத்தில் மிகப்பெரிய கல்விச் சீமானாகத் திகழ்ந்த ஹஜ்ரத் சதீதுத்தீன் ஹுதைஃபா மர்அஷி ஷாமீ (ரஹ்) அவர்களிடம் கல்வி பயிலச் சென்றால் கருங்கல் கூட வைரமாகிவிடுமாம். அவ்வாறிருக்க வைரமே கல்வி பயிலச் சென்றால் .. அதை விளக்க வேண்டுமா? என்ன? அதுமட்டுமல்ல. நம் ஆன்மீகச் சூரியன் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் பாடம் பயிலச் சென்றவர்களா? பாடம் நடத்தச் சென்றவர்களா? என்பதை பின்வரும் நிகழ்ச்சியின் மூலம் தெரிந்து கொள்ளுங்கள். உஸ்தாத் பெருந்தகை அவர்கள் அலிஃப் என சொல்லிக் கொடுக்கிறார்கள். உடனே நம் மதாருல் ஆலம் அவர்கள் அலஃபுக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். வலியாகாவே பிறந்த சீதேவியல்லவா? அலிஃபுக்கு மட்டும் ஒரு வாரம் விளக்கம் சொன்னார்கள். அப்படி எனில் தம் பத்தாண்டு கால மாணவப் பருவத்தில் எவ்வளவு கற்றுத் தந்திருப்பார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.



தம் அன்னையின் மணிவயிற்றில் தொடங்கிய கராமத்துக்கள் குழந்தைப் பருவம், மழலைப் பருவம் மாணவப் பருவம் என இன்னும் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மார்க்கம் சம்பந்தப்பட்ட அத்தனை அக, புற அறிவும் ஞானமும் சங்கமித்தோடு மட்டுமின்றி ரீமியா, கீமியா, ஹீமியா, சீமியா கலையிலும் கை தேர்ந்தார்கள் நம் மதார் நாயகம் (ரலி) அவர்கள்.

## ரீமியா

நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தை அடைந்து கொள்ளும் கலை.

## கீமியா

விஞ்ஞான உலகம் இதை மண்ணைக் கூட பொன்னாக மற்றும் ரசவாதம் என்றும், மெய் ஞானமோ ஞான சூனியத்தையும் ஞானியாக்கும் கலை என்றும் கூறலாம்.

## ஹீமியா

தல்ஸம் எனப்படும். அதாவது இறை ரகசியங்களை அறிந்து அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்கும் கலை.

## சீமியா

மேற்கண்ட மூன்றைப் போலவே மகான்களுக்கு மட்டுமே சாத்தியமான கலை.

நம் மகான் ஹஜ்ரத் சையத் பதீஉத்தீன் மதார் ஆலம் (ரலி) அவர்கள் நன்கறிந்தவர்களின் முக்கியமானவர்கள் ஹஜ்ரத் பாபா மான் தர்யாயி (ரஹ்) இவர்களின் புனித தர்கா வரோதராவில் உள்ளது) அவர்கள் கூறுகிறார்கள். ஹஜ்ரத் மதாருல் ஆலமீன்(ரஹ்) அவர்கள் எத்தனையோ கராமத்துக்களை நிகழ்த்தியுள்ளார்கள். தான் நினைக்கும்போது தன் உடலிலிருந்து ஆன்மாவை வெளியாக்கி தான் நினைக்கும்போது தன் உடலுக்குள் நுழைவிப்பார்கள். இத்தகைய மகத்தான கராமத் உடைய வலியுல்லாஹ் அவர்கள் இறைமறை நான்கையும் அறிந்தவர்கள். அவர்களின் பேரற்புதத்தில் இதுவும் அதாவது 4 வேதங்களின் ஹாஃபிழாகவும் இருந்ததும் ஆகும்.

## ஹஜ் பயணம்

தம் 14ம் ஆம் வயதில் கல்வியில் ஞானத்தில் சம்பூரணத்துவம் பெற்ற கையோடு தம் தந்தையரின் திருக்கரம் பற்றி பைஅத் செய்து ஜஃபாரிய்யா தரீக்காவில் தம்மை இணைத்துக் கொண்டார்கள். முரீதானார்கள். பின் இறையில்லத்தை ஹஜ் செய்யவும் தம் பாட்டனார் ரசூலுல்லாஹி சல்லல்லாஹூ அலைஹி வசல்லம் அவர்களை ஜியாரத் செய்யவும் மதாருல் ஆலமீன் அவர்களின் மனம் நாடியது. தம் பெற்றோரிடம் அன்னவர்கள் முறையிட்ட அழகைப் பாருங்கள். என் அருமை பெற்றோரே! எனக்கு இருவிதமான கடமைகள் உள்ளது. ஒன்று அல்லாவிற்கானது. மற்றொன்று தங்களுக்கானது. தங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை முடித்துவிட்டு அதன்பின் அல்லாஹீவின் பாதையில் அர்ப்பணமாக விரும்புகிறேன். எனினும் நீங்கள் தாங்களாகவே என்னை அவ்வாழ்வின் தொண்டுக்காக சமர்ப்பணம் செய்துவிட்டால் நான் என்னால் முடிந்தளவு இறைத் தொண்டாற்றவே விரும்புகிறேன்.

இதற்குத்தானே இத் திருப்புதல்வரை வேண்டினார்கள். ஹஜ்ரத் குத்வத்துத்தீன் (ரஹ்) மனமாற தம் பிள்ளையை மகத்தான ரப்புல் ஆலமீனின் பாதையில் தொண்டாற்ற அர்ப்பணம் செய்தார்கள்.

இறையில்லம் நோக்கி பயணம் கிளம்பிய நம் நாயகம் மதார் (ரலி) அவர்கள் செல்லும் வழியில் ஓர் குகையில் சிறிது காலம் தனிமையில் தவமிருந்தார்கள். அல்லாஹ்வின் வலி வந்து அமர வேண்டுமென அக்குகை தவமிருந்திருக்குமோ? ஃபாலஸ்தீன் ஜெருசேலமில் பைத்துல் முகத்தஸை அடைந்தபோது "பதீஉத்தீன் வருக வருக தங்களின் வரவிற்காக தான் காத்திருந்தேன்" என வரவேற்ற மாபெரும் ஞானி உலகறிந்த சுல்தானுல் ஆரிஃபீன் ஹஜ்ரத் பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள்தான்.

துல்பிகார் பதீஇல் என்ற புத்தகத்தின் 25ம் பக்கத்தில் ஹஜ்ரத் ஹாஜா நஸிருத்தீன் (ரஹ்) அவர்கள் எழுதுகிறார்கள். ஹஜ்ரத் சையத் பதீவுத்தீன் மதார் ஆலம் (ரலி) அவர்களை கண்டதும் சுல்தானுல் ஆரிஃபீன் ஹஜ்ரத் பாயஸீத் பிஸ்தாமி (ரலி) அவர்கள்



எழுந்து வந்து அன்னவர்களின் நெற்றியிலும் கண்களிலும் முத்தமிட்டு வரவேற்று சொன்னார்கள். பதீஉத்தீன் நான் ஓர் கனா கண்டேன். கண்மணி நாயகம் ரசூலுல்லாஹி சல்லல்லாஹீ அலைஹி வசல்லம் அன்னவர்கள் விஜயம் செய்த திருச்சபையில் நான் விஜயம் செய்கிறேன். என்னிடம் கூறுகிறார்கள். "தைஃபூர்! பதிஉத்தீன் எனும் திருநாமமுடைய வலியுல்லாஹ் இன்னும் சில நாட்களில் தங்களிடம் வருகை புரிவார்கள். அவர்களிடம் நீர் ஒப்படைக்கவேண்டிய அமானிதம் ஒன்றுள்ளது. இதோ, இப்போது அந்த அமானிதத்தை தங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று ஒப்படைத்தார்கள். அந்த அமானிதம் தான் சில்சிலாயே தைஃபூரியா மதாரிய்யா.

இந்த சில்சிலா தைஃபூரிய்யா எப்படி வந்தது எனில் தைஃபூர் என்பதை தம் பெயரில் தாங்கிய 3 வலியுல்லாக்களிடமிருந்து அன்னவர்கள் பெற்ற அந்தரங்க ஃபைஜான் எனும் ஞான ஊற்று.

I. ஹஜ்ரத் தைஃபர் ஷாமி. திமிஷ்கின் மஸ்ஜிதில் இமாமாக இருந்தவர்கள். ஹிஜ்ரி 562 அல்லது 522ல் வஃபாத்தானார்கள். இந்த சில்சிலாவானது.

ஹஜ்ரத் சையது பதீஉத்தீன் குத்புல் மதார்

ஹஜ்ரத் ஷைக் சையத் தைஃபூர் ஷாமி

ஹஜ்ரத் ஷைக் அப்துல் அவ்வல் சஜா வந்தீ

ஹஜ்ரத் ஷைக் ரபீஃ முகத்தஸி

ஹஜ்ரத் ஷைக் காஜா அப்துல்லாஹ் மக்கீ.

ஹஜ்ரத் சித்திக்குல் அக்பர் அபூபக்கர் (ரலி)

ஹஜ்ரத் சைய்யிதினா முஹம்மதின் ரசூலுல்லாஹி சல்லல்லாஹீ அலைஹி வசல்லம்.

II. ஹஜ்ரத் சையத் முஹம்மது தைஃபூர் ஷாமீ. இவர்கள் ஹஜ்ரத் சையதினா இமாம் ஜாபர் சாதிக் (ரலி) அவர்களின் பரம்பரை இவர்கள் ரஜப்பிறை 27 ஹிஜ்ரி 490 அல்லது 491ல் மறைந்தார்ள். இவர்களின் தர்கா பிஸ்தாமி-யில் உள்ளது. அன்னவர்களின் மண்ணறையில் இருந்து தாமாக ஒளிப் பிழம்புகள் சுடர்விட்டு

ஜொலிக்குமாமம். அன்னவர்களின் முர்ஷித் (குரு) பெருந்தகை ஹஜ்ரத் யமீனுத்தீன் ஷாமி (ரஹ்) ஹிஜ்ரி 378 துல்ஹாஜ் பிறை 27ல் மறைந்தார்கள். பிஸ்தாமில் ஹஜ்ரத் பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் புனித அடைக்கஸ்தலம் அருகில் அன்னவர்களின் புனித அடைக்கஸ்தலம் உள்ளது.

III. ஹஜ்ரத் சுல்தானுல் ஆரிஃபீன் பாயஸீத் பிஸ்தாமி அவர்களின் பெயரிலும் தைஃபூர் உள்ளது. ஆக இம்மூன்று மகான்களிடமிருந்தும் அன்னவர்கள் பைஜான் எனும் ஞானப் பொக்கிஷம் பெற்றார்கள்.

வானவர்களில் ஜிப்ரயில் (அலை) எத்தகைய அந்தஸ்து மிக்கவர்களோ அதுபோல வலிமார்களில் ஹஜ்ரத் பாயஸீத், பிஸ்தாமி (ரலி) அவர்கள் என ஹஜ்ரத் ஜீனைதுல் பக்தாதி (ரலி) அவர்கள் கூறுவார்கள். அல்லாஹ்வின் பாதையில் தம்மை அர்ப்பணம் செய்த அவ்லியாக்கள் கடைசியாக அடையும் மகாம் இருக்கிறது. அது ஹஜ்ரத் பாயஸீத் பிஸ்தாமி (ரலி) அவர்களின் ஆன்மீகப் பயணத்தில் துவக்கஸ்தானம் என்றும் அவர்கள் கூறுவதுண்டு. ஹஜ்ரத் அபூசஈத் அபுல்கைர் (ரலி) அவர்கள் "நான் பதினெட்டாயிரம் ஆலத்தில் சஞ்சரித்தேன். எங்கும் வாழ்ந்த பாயஸீத் (ரலி) இல்லை. ஹஜ்ரத் பாயஸீத் ஹக்கில் காணாமல் போயிருந்தார்கள்" என்றார்கள்.

## புனித ரவ்லா ஷரீஃபில்

ஹஜ்ரத் பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிடம் பைஅத் பெற்று தைஃபூரிய்யா சில்சிலாவிலும் முரீதான நம் ஆன்மீக சூரியன் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அன்னவர்கள் தம் ஷைகடமிருந்து விடைபெற்று புனித மக்காபதி வந்து இறையில்லம் தரிசித்து ஹஜ் கடமையையும் நிறைவு செய்கிறார்கள். பின்பொருநாள் கஃபா ஷரீஃபை தவாஃப் செய்து கொண்டிருக்கும்போது ஓர் அசரீரி "ஓ பதீ உத்தீன்! மாமதினா செல்வீர் தங்களின் பாட்டனார் தங்களின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்". மஃஷீகிடமிருந்து அழைப்பு வரும்போது ஆஷிகின் மனநிலை எப்படியிருக்கும் தெரியுமா? அந்தப் பரவசம் அனுபவித்து உணர வேண்டிய விஷயம்.



ரஹ்மத்துல் ஆலமீன் காத்தமுதல் நபியீன் முஹம்மதுர் ரசூலுல்லாஹி சல்லல்லாஹீ அலைஹி வசல்லம் அன்னவர்களின் புனித ரவ்ழாவை அடையும் வரை ஆஷிகே ரசூல் ஆன்மீகச் சூரியன் அல்லாஹ்வின் வலி ஹஜ்ரத் சையதினா பதீஉத்தீன் குத்புல் மதார் (ரலி) அவர்களின் கண் உறங்கவில்லை. கால் ஓயவில்லை. மனம் நிலை கொள்ளவில்லை. மதினா ஷெரீபில் தங்கி ஜியாரத் செய்து சலாம் உரைத்து ரவ்லாஷரீஃபை முத்தமிட்டு கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களின் மீது நிறைய நிறைய சலவாத் ஓதி வந்த காலை ... ஒரு நாள் ஆன்ம உலகில் ஒரு நிகழ்ச்சி..

சையதில் முர்ஸலீன் முஹம்மது (ஸல்) அன்னவர்கள் நம் மதார் நாயகம் அவர்களை சுட்டிக்காட்டி ஹஜ்ரத் சையதினா ஹஜ்ரத் சையதினா மௌலா அலீகர்ரமல்லாஹீ வஜ்ஹஹீ அவர்களிடம் உத்தரவிடுகிறார்கள். அலியே இதோ உம் பிச்சாரத்தில் நின்றும் உள்ள பிள்ளை, இவருக்கும் இர்ஃபான் எனும் மெஞ்ஞான ரகசிய இல்முகளைக் கொண்டு அவரின் கல்பை பரிசுத்தப்படுத்துங்கள். முன்னோர் பின்னோர் யாவரின் ஞானத்தையும் அருளுரைகள் பின் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பாசறையில் இணைத்து சம்பூரணப்படுத்துங்கள்.

நாயகம் மதாருல் ஆலமீன் அவர்கள் மெஞ்ஞாப் பாட்டையில் அடைந்த ஃபைஜான் மகத்தானது. அன்னவர்கள் 7 சில்சிலா மூலம் கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களை அடைகிறார்கள்.

1. சில்சிலா ஜஃபரிய்யா மதாரிய்யா
2. சில்சிலா தைஃபூரிய்யா மதாரிய்யா
3. சில்சிலா சித்தீகிய்யா மதாரிய்யா
4. சில்சிலா உவைசிய்யா மதாரிய்யா
5. சில்சிலா தபகாத்தியா மதாரிய்யா
6. சில்சிலா மஹ்தவிய்யா மதாரிய்யா
7. சில்சிலா பசரிய்யா மதாரிய்யா

இமாம் மஹ்தி(அலை) அவர்கள் உலகின் இறுதிகாலத்தில் வரும்போது அவர்களை அறியக்கூடிய முதல்நபர் நம் ஆன்மீகச்

சூரியன் குத்புல் மதார், மதாருல் ஆலமீன் (ரஹ்) அவர்களின் மஹ்தலியா மதாரிய்யா சில்சிலாவின் அருளைப் பெற்றவராகத் தான் இருப்பார்கள் என நம்பப்படுகிறது.

சியருல் மதார் நூலாசிரியர் ஹஜ்ரத் ஜஹீருத்தீன் காதிரி (ரஹ்) அவர்கள் எழுதுகிறார்கள். இறை நேசத்திலும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் தவ்ராத் ஜபூர் இன்ஜீல் குர்ஆன் ஆகிய 4 வேத அறிவும் வழங்கப்பட்டவர்கள். தலைமைத்துவம் மிக்க 4 மலக்குகளுக்கு அருளப்பட்ட (1) மர்ரா, (2) ஜனுர்ரப், (3) சர்மாஜன், (4) மஹர் அல்ஃப் ஆகிய 4 கிரந்த அறிவும் பெற்றுள்ளார்கள். ஜின்களின் தலைவர்களுக்கு தரப்பட்ட (1) தாகவீ, (2) ஜாஜரீ, (3) சனாரீ, (4) இல்யாண் ஆகிய 4 கிரந்த அறிவும் தரப்பட்டவர்கள். இவை யாவும் ஹஜ்ரத் மௌலா அலி (ரலி) அவர்களிடமிருந்து கற்றவை. மேலும் இமாம் மஹ்தி (அலை) அவர்களிடமிருந்தும் நம் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள் பெற்ற அறிவும் ஞானமும் அளப்பரியது. இவ்வாறாக மெய்ஞான வழி நடத்தும் ஆன்மீக கோன்களிடமிருந்து கற்றதுதான் கீமியா ஹீமியா ரீமியா சீமியா போன்ற பெருங்கலைகள்.

## இந்தியத் திருநாடு விஜயம்

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த இடம் வந்துவிட்டது. இதோ ... மக்கன்பூர் மகான் மதார் ஆலம் (ரலி) அவர்களின் திருப்பாதம் பட்டு இந்த இந்திய தேசம் புனிதம் பெறப்போகிறது. நாம் பெற்ற பாக்கியத்தை நமை நோக்கி வந்த இறையருளை நாம் தரிசிக்கப் போகிறோம். சம்பூரணத்துவம் பெற்ற நம் மகான் அல்லாஹ்வின் வலி முராகபாவில் இருந்து கொண்டு ஆன்ம உலகில் சஞ்சரிக்கிறார்கள். கண்மணி நாயகம் (ஸல்) கட்டளை பிறக்கிறார்கள். பதீஉத்தீன்! இந்துஸ்தான் செல்வீர்! அங்கே நீங்கள் தேவைப்படுகிறீர்கள் எங்கள் மேனி சிலிர்க்கிறது. நாயகமே! தாங்கள் எங்களுக்கும் செய்த பேருபகாரம்.... வரிசையாக வலிமார்களை அனுப்பிக் கொண்டே எங்கள் பூமியை செழிப்பாக்கி விட்டீர்கள் விழி ஆறாய் கொட்டினாலும் தீராது நாங்கள் தங்களுக்கு பட்ட நன்றிக் கடன்.

தரை மார்க்கமாக ஏமன் நாட்டை அடைந்த நம் மதார் ஆலம்



(ரஹ்) அவர்கள் ஏமனின் ஏடனிலிருந்து கடல்மார்க்கமாக பயணத்தைத் துவங்குகிறார்கள். கப்பல் முழுக்க காஃபிர்கள். சத்தியமார்க்கத்தை எத்தி வைக்க நல்ல சந்தர்ப்பம் எனக் கருதிய நம் மதார் ஆலம் அவர்கள் பிரச்சாரத்தை துவங்குகிறார்கள். ஒரே சலசலப்பு. இந்த ஆளுக்கு எவ்வளவு தைரியம்? நம்மை தம் மதத்தில் இணையச் சொல்கிறாரே! கப்பல் காஃபிர்கள் கடும் அதிருப்திப்பட்டனர். அல்லாஹ்வின் வலிக்கு துணிச்சல் இல்லாவிட்டால் தானே ஆச்சர்யம்? அல்லாஹ்வின் வலி அங்கே அவமதிக்கப்படுகிறார்கள். இறைவனின் கோபப்பார்வை அவர்கள் மீது விழுகிறது. அல்லாஹ்வின் நேசரை விரோதிப்பவர் அல்லாஹ்வையே விரோதிப்பவர். அவர் அல்லாஹ் ரசூலிடம் யுத்தம் செய்யத் தயாராகிவிட்டார் என்ற அண்ணல் நபி (ஸல்) அன்னவர்கள் எச்சரிப்பது அல்லாஹ் ரசூலை அரைகுறையாக ஈமான் கொண்ட அறிவீனர்களுக்கே படுபதில்லையே? முற்றிலும் ஈமானில்லா மக்களுக்கா புரியப் போகிறது?

சுனாமிப் பேரலையில் சிக்கிய கப்பல் சிதைகிறது. அங்கும் அல்லாஹ் தன் வலியை ஒரு பலகையில் பயமின்றி அமரச் செய்கிறான். பிறர் மூழ்கி அழிய ஒரு பத்துப் பேர் மட்டும் அப்பலகையை பிடித்து ஏறிக் கொண்டார்கள். அப்போதும் அவர்களிடம் உண்மையை உணர்ந்து ஈமான் கொள்ளுங்கள். அல்லாஹ் பாதுகாப்பான் என கூற, அவர்களின் காதில் ஏறிய வார்த்தை அறிவில் ஏறவில்லை. பலகையை பிடித்துக் கொண்டால் எப்படியும் கரை சேர்ந்துவிடலாம் என்ற சிற்றறிவு இருந்ததே தவிர, அல்லாஹ்வின் வலியைப் பற்றிக் கொண்டால் எப்படியும் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிவிடலாம் கரை சேர்ந்து விடலாம் என் பேரறிவு அவர்களுக்கு இல்லை.

நேரம் செல்லச் செல்ல பசி தாகம் ஏற்பட ஒருவர் பின் ஒருவராக செத்து மடிகின்றனர். அல்லாஹ்வின் வலி அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். தம்மை நாடி வருவோரையும் அல்லாஹ்வின் அருளில் பாதுகாப்பில் சேர்த்துக் கொள்கிறார்கள். வலி அல்லாஹ்ன் அபயம் என்பதை உணராது வழிமாறிப்போய் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானவர்களுக்கு அபயம் ஏது? அப்போது அக்கடலில் கண்ணுக்கு எட்டியவரை கடை

கண்படா கடல் நடுவே நம் மதாருல் ஆலம் (ரஹ்) மனதுருகி துஆச் செய்கிறார்கள். படைத்தவனே மகத்துவமும் நுண்ணறிவும் மிக்க இறைவா! நான் உன் ஹபீப் கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களின் கட்டளையை சிரமேற் தாங்கி அந்நிய தேசம் நோக்கி செல்கிறேன் இறைவா! என் பசி தாகம், மல ஜலம், அச்சம், பயம், இச்சை மனைவியின் தேவை போன்ற அனைத்து விதமான மனித தேவையற்று வாழச் செய்வாயாக! நான் சிரமேற்கொண்ட பணியில் மட்டும் கவனம் செலுத்தும் பொருட்டு அதற்கு இடையூறாக உள்ள அனைத்தையும் எனை விட்டு தூரமாக்குவாயாக என் வாழ்கை முழுக்க உனது ஹபீபின் உத்தரவை செயல்படுத்தவே அர்ப்பணமாக்கிட அருள்புரிவாய்! மனமுறுகி வேண்டிக் கொண்டேயிருந்து அப்பலகையும் கரை நோக்கி நகரத் துவங்கியது. கரையை நெருங்க நெருங்க ஒரு காட்சி... அத்தனித் தீவில் கரையோரம் ஆஜானு பாகுவாய் மலக்கு போல ஒருவர் ஒளிவீசும் திருமுகம், "அஸ்ஸலாமு அலைக்கும்! பதிஉத்தீன்!! வருக! வருக! உம் வரவு நல்வரவாகுக! என வரவேற்கிறார்கள். வஅலைக்குமுஸ் ஸலாம் என பதில் கூறி நான் தங்களை இதற்கு முன்பார்த்ததில்லை. தாங்களும் என்னை பார்த்திருக்க வாய்ப்பில்லை. என் பெயர் தாங்களுக்கு எப்படி தெரிந்தது? நாம் வலிய்யுல்லாஹ் அவர்களின் கேள்வி. தங்களின் திருப்பெயர் வான், பூமி அறிந்ததல்லவா? அவர்களின் மறுமொழி. மறுமொழி பகர்ந்த அம் மனிதர் எங்கள் எஜமான் தங்களை அழைத்து வரச் சொன்னார்கள் என அழைத்துச் செல்கிறார்கள்.

ஓர் அடர்ந்த காடு, உள்ளே நுழைய அழகிய மாளிகை வாசல்கள் ஒவ்வொரு வாசலிலும் அவரைப் போன்றே ஒளி வீசும் திருமுகத் தோழர்கள். அதே வரவேற்பு முகமன். வாயில்களை கடந்து உட்புக ஓர் அழகிய பூங்கா. பூங்காவின் மையத்தில் பூக்களுக்கெல்லாம் அழகும் வாசமும் தித்திக்கும் தேனும் தந்த பூமான் நபிகள் (ஸல்) அவர்கள் சொர்க்கத்தில் இருப்பதைப் போன்றுதான் இருந்தது. ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களுக்கு

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்னவர்ளை அப்பொழுது அழைத்தது அரியாசனத்தில் தம் மருகில் அமரச் செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பேசுகிறார்கள். கேளுங்கள்!



பதீஉத்தீன் உமது துஆ கபூலானது. அல்லாஹ் ரசூலிடம் அங்கீகாரம் பெறுகிற பேற்றைப் போல் அடியேனுக்கு வேறென்ன பெரும்பாக்கியம் இருக்க முடியும்? அதன்பின் ஒரு சுவன (கீர்க்கா) ஆடையைத் தந்து தம் பொற்கரத்தால் குத்புல் மதார் அவர்களின் திருவதனம் தடவி ஒளி வீசும் திருமுகத்தை மேலும் ஜொலிக்கச் செய்து தம் அரியாசனத்தையும் அன்னவர்களுக்கு வழங்கி தாங்கள் இனி அழுக்காக மாட்டீர்கள். குளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த ஆடையை உடுத்திக் கொள்ளுங்கள். மேலும் தமிழ் 9 பிடி (லுக்மா) உணவு எடுத்து திண்ணக் கொடுத்து இனி உங்களுக்கு பசி, தாகம் உறக்கம் மல ஜலத் தேவை எதுவும் இருக்காது. இவ்வரியாசனத்தில் அமர்ந்து தாங்கள் எங்கே செல்ல நினைத்தாலும் கணப் பொழுதில் சென்று சேருவீர்கள் எனக் கூறினார்கள். அந்த உணவை தின்றதின் காரணத்தால் அன்னவர்களுக்கு அர்ஷி முதல் தஹ்த்தஸ்ரா எனும் ஏழு பூமி வரையில் உள்ள அனைத்து வஸ்துக்களும் கண்ணாடியைப் போல தெரிய வந்தது. அநேக வரலாற்று ஆசிரியர்கள் மதார் ஆலம் அவர்களுக்கு உண்ணக் கொடுத்தது அரிசியில் செய்யப்படும் இனிப்பு என குறிப்பிட்டுள்ளார்கள். அதன் பின் அவர்களுக்கு வாழ்நாள் முழுக்க பசியே ஏற்படவில்லை.

கனவிலோ, முராக்கபா நிலையிலோ அல்லாமல் நேரடியாகவே பெருமானார் (ஸல்) அன்னவர்களை கண்டு அவர்களின் ஃபைஜானைப் பெற்றதால் மதார் ஆலம் (ரஹ்) அவர்கள் "உவைஸி நிஸ்பத்" உடையவர்கள் என வரலாறு பேசுகிறது. பதீஉல் அஜாயிப் என்ற புத்தகம் பக்கம் 12ல் வருகிறது. ஹஜ்ரத் சையதினா மதார் ஆலம் (ரஹ்) அவர்களைப் போல கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களை நேரடியாக அண்ணவரின்மறைவுக்குப் பிறகும் கண்டு ஃபைஜானா பெற்ற வலிமார்கள் மேலும் சிலருண்டு. ஹஜ்ரத் மஸ்தரே உவைஸ்கர்னீ, ஹஜ்ரத் நஜ்முத்தீன் குப்ரா, ஹஜ்ரத் சல்மான்பார்ஸீ ஹஜ்ரத் நிஜாமுத்தீன், ஹஜ்ரத் துன்னூன் மிஸ்ரி, ஹஜ்ரத் ஹாஃபிழ், ஷிராஜீ (ரலி) ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களால் "துஆயே பஷ் மஹீ" ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது.

மேலும் 9 லுக்மா உணவை உணவை சாப்பிட்டதினால் விண்ணுலகத்தின் அர்ஷ் மண்ணுலகத்தின் அடித்தட்டு வரையுள்ள அத்தனை தபகாத்துக்களையும் (அடுக்குகளையும்) தரிசித்த வலியுல்லாஹ் அவர்களின் சில் சிலா என்பதால் சில் சிலா மதாரிய்யா வை சில்சிலா தபகாத்தியா என்றும் கூறப்படும். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அன்னவர்கள் இவ்வாறாக தனித்துவத்தோடு விளங்குவதை அதன் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முத்தாய்ப்பாக ஹஜ்ரத் ஷாஹ் அப்துல்ஹக் முஹத்தில் தெஹ்லவி (ரஹ்) அதை உறுதிப்படுத்தி இவ்வாறு எழுதுகிறார்கள்.

ஹஸ்ரத் மதார் ஆலம் (ரவி) அவர்கள் சமதிய்யத் நிலையை எட்டியவர்கள். அக்பாருள் அக்பார் என்ற நூலில் சமதிய்யத் குறித்தும் வருகிறது. விலாயத்தில் மிக உயர்ந்த ஸ்தானம் அதை அடைந்தவர்களுக்கு பசி, தாகம், களைப்பு, உறக்கம் இச்சை எதுவுமிருக்காது. லேசான சிறு தூக்கம் கூட தோன்றாது. ஆசாபாசம், அச்சம், கவலை போன்ற மானிட உணர்விராது. அவர்களின் உடலில் ஈ அமராது. அவர்களது உடல் கணமிராது. அவர்களால் காற்றில் பறக்கவும் இயலும். உலகம் உள்ளங்கையில் இருப்பது போலிருக்கும். ஒரே வரியில் சொல்வதென்றால் சமதிய்யத் ஸ்தானத்தை அடைந்தோர் மலக்குகளை போலாகி விடுவர். ஆம் அப்படித்தான் ஆகிவிட்டார்கள்.

குலாம் அலீ நக்க்ஷபந்தீ முஜத்த-தீ (ரஹ்) தாருல் மஆரிப் 243ம் பக்கத்தில் எழுதுகிறார்கள். ஒரு முறை ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் சமதிய்யத் (தனித்துவம்) குறித்து எங்கள் உஸ்தாத் பேசினார்கள். அல்லாஹீ தஆலா ஒவ்வொரு நபிக்கும் ஒரு தனிச் சிறப்பைத் தந்துள்ளது போல ஒவ்வோர் அவுலியாவிற்கும ஒரு தனிச் சிறப்பை தந்துள்ளது போல ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களுக்கு அளித்துள்ள தனிச்சிறப்பு யாதெனில், பிரபஞ்ச இயக்கத்திற்கு அவர்களை மதார் ஆக (அடித்தளமாக) வைத்திருக்கிறான். அன்னவர்கள் துஆச் செய்ததைப் போலவே அவர்களை சமதிய்யத் ஸ்தானத்திற்கு உயர்த்தியுள்ளான். அவர்கள் வாழ்நாள் முழுக்க உண்ணவில்லை. உறங்கவில்லை. உடை அழுக்காகவில்லை. ஆடை மாற்ற



வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை. ஒரே ஆடையில் உலக ஆயுள் முழுக்க கழித்தார்கள். ஒருவர் அவர்களைப் பார்த்தாலே சுஜீதில் விழுந்து விடுமளவிற்கு ஜலாலித் எனும் மிடுக்குடைய சீதேவியாக இருக்கிறார்கள். ஃபுசூல் மஸ்வூதிய்யா தத்திரத்துல் முத்தக்கீன் போன்ற பல நூல்கள் அன்னவர்களால் வரலாறு பேசுகிறது. அதிலெல்லாம் அன்னவர்களைப் பற்றி இது போன்ற ஆச்சர்யமூட்டும் அவ்வளவு செய்திகளை காணலாம்.

மேலும் கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களை நேரடியாக கண்ட சம்பவம் எந்த இடத்தில் நடந்தது? என்பது பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கம்பாத் உடைய கடற்கரைப் பிரதேசங்கள் மலபார் கடற்கரை எனப்படும். அன்றைய காலத்தில் கடல் மார்க்கமாக இந்தியாவினுள் நுழைய கம்பாத் தான் நுழைவாயிலாக இருந்தது. இப்பகுதியில் தான் மேற்கண்ட அற்புத நிகழ்ச் நடந்துள்ளதாக தெரிகிறது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஏனெனில் அதன்பின் அதே மலபார் கடற்கரையிலிருந்து தான் அவர்களது இந்திய பயணம் துவங்குகிறது.

கர்பத்திலேயே கராமத் செய்த வலியல்லவா? கண்மணி நாயகத்தை கண்ணாரக் கண்டு சமதிய்யத் ஸ்தானம் பெற்ற வலியல்லவா? அவர்களின் இந்தியப் பயணம் இதோ துவங்கிவிட்டது. அவர்களோடு நாமும் நம் மனமும் பயணிக்கப் போகிறது. இன்னும் பற்பல அதிசயங்களைக் காணவும் மென்மேலும் வலிமார்களின் மகத்துவம் உணரவும் தயாராவோம்.

ஆள் அரவமற்ற வனாந்திரம் அங்கே அரியாசனத்தில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அதைக் கண்ட ஜின் அரசர் அமாதுக்கு ஆச்சர்யம். தன் சகாக்களை தூரத்திலேயே விட்டுவிட்டு ஜின் அரசர் அரியாசனத்தை அணுகினார். சாத்வீகமாய் வீற்றிருந்த சைய்யதினா மதாருல் ஆலமீன் (ரஹ்) அவர்கள் ஏறெடுத்துப் பார்த்ததுதான் தாமதம். அப்பார்வையில் அமாத் அடிமையாகிப் போனார். அவர் பேச ஆரம்பித்தார். நிறைய கேட்டார். அன்னவர்கள் அழகிய விடை தந்தார்கள். நிறைய கேட்டார். அன்னவர்கள் அழகிய விடை தந்தார்கள். கண்டார். கேட்டார். கரம் பிடித்தார். கலிமா சொன்னார். ஆட்சியை மகானிடம்

ஒப்படைத்துவிட்டு ஆன்மீகச் சூரியனை தஞ்சமடைந்தார்.

இந்த கம்பாத் குஜராத்தின் ஒரு பகுதி. சர்கார் மதார் ஆலம் (ரஹ்) அங்கு விஜயம் செய்தபோது ஹஜ்ரி 283, கி.பி.871. பல மலைகளில் தங்கி சில்லா (ஓரிடத்தில்40 நாட்கள் தனிமை தவத்தில் ஈடுபடுவது) இருந்திருக்கிறார்கள். நேபாளில் அவர்கள் சில்லா இருந்த மலைக்கு மதாரிய்யா மலை என இப்போதும் பெயர் உள்ளது. செல்லும் வழி எங்கெங்கும் தீன்மணம் பரப்பிச் சென்றார்கள். ஒரு மலையில் போய், சில்லா இருக்கிறார்கள் எனில் அதை அடையும் வரை வழியிலுள்ள ஊரெங்கிலும் தூய இல்வாழ்வு போதித்து விட்டுச் செல்வார்கள். மலையேறிச் சென்று மலையில் வசித்த ஜின்களிடமும் மார்க்கத்தை எடுத்தோதினார்கள். ஜின், ஷைத்தான் போன்றவை தொந்தரவு செய்தால் மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் பெயரைச் சொன்னாலே அவை தலைதெறித்து ஓடிவிடும்.

ஹரம் சானீ எனும் அவர்களின் புனித அடைக்கஸ் தலத்தின் உட்பகுதியில் பொதுவாக பெண்களுக்கு அனுமதி கிடையாது. ஆண்களும் பகலில் மட்டுமே செல்ல முடியும். இரவில் உட்புறம் அடைக்கப்பட்டு விடும். ஏனெனில் இரவில் அங்கே ஜின்கள் ஹாஜிராவார்.

யாரையாவது ஜின் ஷைத்தான் பிடித்துக் கொண்டால் அதை விரட்ட கடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அப்படி முயன்றும் சில சமயம் முடியாமல் போவதுண்டு. ஆனால் ஹஜ்ரத் மதார் ஆலம (ரஹ்) அவர்களின் திருநாமம் சொன்னதுமே அவை ஓடிவிடுகிறதென்றால் அவை எந்த அளவுக்கு வலியுல்லாஹ் அவர்களுக்கு கட்டுபட்டு அவர்களின் முரீதாகி அதோடு மட்டுமின்றி அவர்களிடமிருந்து கிலாஃபத் பெற்றிருக்கிறார்கள் என்பதும் குறிப்பித்தக்கது.

இந்த சம்பவத்தை கேட்டால் உங்களுக்கு மதார் வலியுல்லாஹ் அவர்களின் மகிமை புரியும். ஒரு நபரை ஜின் பிடித்துக் கொண்டது. ஒரு ஆலிம் சாஹிப் என்னென்னவோ செய்து ஜின்னை வெளியாக்கினார். கொஞ்சம் நாள் கழித்து மீண்டும் அந்த ஜின் அந்த நபரை பிடித்துக் கொண்டது. மீண்டும் மீண்டும் அந்த



ஜின் விடுவதும் மறுபடி மீள்வதுமாக இருந்தது. இறுதியில் அந் ஆலிம் அந்த ஜின்னை எரித்துவிட்டார். இதனால் அந்த ஜின்னின் மனைவி பழிவாங்க திட்டமிட்டு தன் மகன் ஜின்னை குராஸான் அனுப்பி நீ நன்றாக தேர்ச்சி பெற்று வா என அனுப்பினார். ஒரு வழியாக அந்த மகன் ஜின் நன்றாக பயிற்சி பெற்று திரும்பி வந்தது. தன் மகனிடம் அந்த ஆலிம் சாஹியை அழித்து உன் தந்தையின் மரணத்திற்கு பழி தீர்த்துக் கொள் என கட்டளையிட்டது. இப்போது அந்த ஆலிம் சாஹிபால் அந்த மகன் ஜின்னிடம் ஜெயிக்க முடியவில்லை. இனி மரணத்தை தவிர வேறு வழியில்லை என உணர்ந்த அந்த ஆலிம் இறுதியாக எனக்கு 2 ரக்அத் தொழுதுகொள்ள அனுமதி கேட்டதும் மகன் ஜின் ஒத்துக் கொள்ளவே, தன் முஹல்லாஹ் பள்ளிவாசலில் தொழுதார். அந்த பள்ளியில் மதாரிய்யா சில் சிலாவின் முரீத் ஒருவர் இருந்தார். அவர் அந்த ஆலிம் சாஹியின் பதட்டத்தைக் கண்டு என்ன பிரச்சினை என கேட்க அவர் முழு விபரத்தையும் சொல்லியவுடன் என்னை தங்களின் இருப்பிடம் அழைத்துச் செல்லுங்கள் என்றார். அங்கே சென்று அந்த ஜின்களிடம் நான் ஜின்அரசர் அமாதுல் மாலிக்கின் எஜமான், ஹஜ்ரத் குத்புல் மதார் (ரவி) அவர்களின் அடிமை, எதுவாயிருந்தாலும் என்னிடம் பேசுங்கள் என்றார். அந்த ஜின்கள் அவரை எதிர்கொண்டு எல்லா முயற்சிகளும் செய்தும் எதுவும் பலிக்கவில்லை. பிறகு அந்த முரீது அந்த ஆலிம் சாஹிபிடம் தாங்கள் அந்த ஜின்களிடம் மன்னிப்பு கேட்க சொல்லி மன்னிப்பும் கேட்டார். அந்த ஜின்களும் மன்னித்து விடைபெற்றது.

அதுபோன்ற எண்ணற்ற நிகழ்வுகள் காலம் காலமாக நடந்து வருகிறது. மதாரிய்யாவின் முரீதுகள் "தம் மதார் பேடா ப்பார்" என்று கர்ஜித்தால் எப்பேர்பட்ட ஜின், ஷைத்தான்களும் தலைதெறித்து ஓடிவிடும். மதாரிய்யா சில்சிலாவில் இணைந்து மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் வழிகாட்டுதல்களை முழுமையாக பேணி வரக்கூடியவர்களின் மகத்தான தரஜாவை அடைந்து கொள்கிறார்கள்.

### ஓர் முன்னோட்டம்

அசோக மன்னர் புத்தமதத்தை தழுவியபின் இந்தியா மட்டுமின்றி சீனா உட்பட அண்டை நாடுகளிலும் புத்த மதம்

வெகுவேகமாக வளர்ந்தது. ஏற்றத் தாழ்வு புகுத்தப்பட்டதால் பிற சமயங்கள் அதன் தொன்மையை இழந்து இந்தியாவிற்குள் சன்னஞ் சன்னமாக சரிய ஆரம்பித்தது. இத்தகைய கால கட்டத்தில் தான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனியின் மையமாம் மக்காவில் தோன்றி சாதி, குல, நிற ஏற்றத் தாழ்வை தவிடு பொடியாக்கினார்கள். பெருமானாரின் காலத்திலேயே சமத்துவ சன்மார்க்கம் இந்தியாவிலும் வரவேற்பை பெற்றுவிட்டது. முஹம்மது பின் காஸிம் (ரஹ்) அவர்களின் படையெடுப்புக்கு பிறகே இந்தியாவில் எல்லாம் தோன்றியது என்பது பெரிய பொய். மாறாக உண்மை யாதெனில் .. கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்கள் புவியில் அவதரிப்பதற்கு முன்பிருந்தே அரபுலகிற்கும் இந்தியாவுக்குமிடையில் வாணிபத் தொடர்பு இருந்தது என்பது மறைக்க முடியாததாக உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்திலும் சஹாபாப் பெருமக்கள் உட்பட அரேபிய வணிகர்குழு இந்தியா வந்த வண்ணம் இருந்தது. முஹம்மது (ஸல்) அவர்களின் வருகை குறித்து அப்போது இந்தியாவில் பேசப்பட்டிருக்கிறது. நாயகம் (ஸல்) அவர்களின் பேரற்புதங்களில் ஒன்றான "நிலவின் பிளவு" நடந்தபோது அது இருக்கும் பலரால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது சத்தியத் திருத்தூதரின் அற்புதமென அங்கீகரிக்கப்பட்டு அப்போதே சில அரசர்கள் உட்பட பலரும் ஈமான் கொண்டுள்ளனர். கேரள மன்னர் சேரமான் பெருமான் அல்லாஹ்வின் திருத்தூதரை ஈமான் கொண்டு அப்துல் ரஹ்மான் ஆன வரலாறெல்லாம் இப்போதும் தெளிவாக விரிவாக கிடைக்கிறது. நபித் தோழர்கள் காலத்திலும் அரேபிய இந்திய தொடர்பு தொடர்ந்துள்ளது. தென் இந்தியாவில் நபித்தோழரால் திருச்சியில் அமைக்கப்பட்ட கல் பள்ளிவாசலும், பரங்கிப் பேட்டையில் சமாதி அடைந்துள்ள நபித்தோழர் ஹஜ்ரத் உக்காஷா (ரலி) மற்றும் சென்னை கோவளத்தில் அடங்கியுள்ள ஹஜ்ரத் தமீமுல் அன்சாரி (ரலி) தர்காஷரீப் அதற்கு சான்றுகள் வழங்கப்படுகின்றது.

ஆக தீனுல் இஸ்லாம் கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்களின் காலத்திலிருந்தே இந்திய திருநாட்டில் சுடர்விடத் தொடங்கிவிட்டது. அதன் பின்பும் நபித்தோழர்களின் வருகை



நிகழ்ந்துள்ளது. பின் தாபியீன்கள், தபஉதாபியீன்கள் வருகையும் நிகழ்ந்துள்ளது. இக்கால கட்டத்தில் உள்ளவர்கள் திருச்சி நகர் வாழும் மகான் ஹஜ்ரத் சுல்தான் பாபா யே சையத் முத்தஹ்ஹிருதீன் நத்ஹர்வலி தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அதுபோல வட இந்தியாவின் வந்த ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) தபதாபியீன்களில் உள்ளவர்கள். தீன் மணம் இந்திய திருநாட்ல் வடக்கிலும் தெற்கிலும் பரவி விட்டிருந்த கால கட்டத்திற்கு பிறகுதான் முஹம்மது பின் காஸிம் படையெடுப்பெல்லாம். ஆக படையெடுப்பால் தான் இஸ்லாம் இந்தியாவில் நுழைந்தது என்பது தவறானது. மகான்களின் வருகையால் தான் இஸ்லாம் இங்கே நுழைந்தது என்பதை இனியும் விளக்க வேண்டியதில்லை. (மகான்களின் வரலாறை படித்தால் விளங்கிவிடும். அதாவது இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்தியா வரும் முன்பே இஸ்லாம் இந்தியாவில் வளர்ந்துவிட்டது. கண்மணி நாயகம் (ஸல்) அவர்களை தொடர்ந்து நபித்தோழர்கள் அவர்களுக்குப் பின் இன்றுவரை அவுலியாக்கள்தான்.

அதில் வலிமார்களின் முன்னோடியாகத் திகழக் கூடிய நமது எஜமான் ஹஜ்ரத் சையத் பதீஉத்தின் குத்புல் மதார் (ரலி) அவர்களின் வருகையால் இந்தியாவில் இஸ்லாம் வெகுவாகப் பரவிவிட்டது. இங்கே வித்தைக் காட்டக்கூடியவர்களையும் மந்திர மாயா ஜாலங்கள் தெரிந்தவர்களையும் மக்கள் போற்றிப் புகழ்ந்து வழிபட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சொல்லை நம்பி படைப்பினங்களை கடவுள் என நம்பி வழிபட்டனர். ஆக கடவுள் என்பதற்கான எந்த வரையறையும் தகுதியும்இல்லை. அவரவர் தம் மனம் போன போக்கில் எதை எதையோ கடவுள் என வழிபட்டு வந்தனர். குறிப்பாக வெகுநேரம் மூச்சை அடக்கி தியானம் செய்பவர் மிகப்பெரிய மகானாக வழிபடப்பட்டார். அதுவெல்லாம் இறைத்தன்மை இல்லை. இதை அடியவர்களால் செய்ய முடியும் என்பதை ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) தமது முரீதின்களுக்கு மூச்சை அடக்கி தியானம் செய்ய உத்தரவிட்டார்கள்.

அவ்விதம் அவர்கள் லா இலாஹ இல்லல்லாஹ் என கூறி மூச்சை உள்ளிழுத்து ஆறு மாதங்கள் கூட மூச்சைக் கட்டுப்படுத்தி பிறகு முஹம்மது ரசூலுல்லாஹ் என மூச்சு விட்டது. எளிதில்

மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஹஜ்ரத் சையதினா குத்புல் மதார் (ரலி) அவர்களின் திருவதனம் எப்போதும் ஜலாலியத்தில் சூரியனைப் போல ஒளி வீசிக் கொண்டிருக்கும். ஒரு கணமும் பிறர் நேருக்கு நேராக அவர்களின் திருமுகத்தை கண் கொண்டு காண இயலாது. அப்படி பார்த்தால் அடுத்த வினாடி என்ன நிலைமை என்பதை தம் முகத்தை ஏழு துணிகளால் மறைத்தே வைத்திருப்பார்கள்.

அன்னவர்கள் மூச்சைப் பிடித்து லாஇலாஹ இல்லல்லாஹ் சொல்லி அமர்ந்துவிட்டால் அப்படியே கல்சிலை போலாகிவிடுவார்கள். பிறமக்கள் அப்போது அவர்களைப் பார்த்தால் மிகப்பெரிய சித்தர், தவயோகி என மரியாதை செய்வதுண்டு. பொதுவாக மகான்கள் உலகில்வாழும் காலத்தலும் சரி, மறைந்த பின்பும் சரி ஜாதி, மத, இன பேதம் பாராது மக்கள் அனைவருக்கும் அருள் செய்யும் சீதேவிகளாகத்தான் திகழ்கிறார்கள். அல்லாஹ் ரப்புல் ஆலமின் அவ்லியாக்களுக்கு அருளிய கராமத் எனும் அற்புதம் மக்கள் பயன் பெறவே இருக்கிறது என்பது மெய், அப்படித்தான் நமது ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்களை நாடிவரும் மக்கள் அன்னவர்களின் பரக்கத்தால் தம் கவலைகள் துன்பங்கள் துயரங்கள் நீங்கி செல்வது வழக்கமாக உள்ளது. அவர்களின் அற்புதத்தால் குழந்தையற்ற தம்பதியருக்கு குழந்தை பேறுகிட்டும். பார்வையற்றோர் பார்வை பெறுவர். வலிமார்களின் கராமத் நபிமார்களின் முஃஜிஸா போல மக்கள் நேர்வழி பெற ஒரு முக்கிய காரணமாக விளங்குவதை யாரும் மறுக்க இயலாது. அவ்விதம் மக்களுக்கு நல்லுதவி புரிந்து லட்சோப லட்சம் மக்களை நேர்வழிப்படுத்தி புனித மார்க்கம் தழுவச் செய்தார்கள். நம் மதார் ஆலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி.

## குஜராத்தில் மதார் ஆலம்

இந்தியாவின் பெரும் பகுதி மண்ணிலும் தடம் பதித்து சன்மார்க்கத்தை ஏற்றி வைத்தார்கள். எனவே அவர்கள் ஒரே ஊரில் முழுமையாக தங்கிவிடவில்லை. ஊர் ஊராக பயணித்துக் கொண்டே இருந்தார்கள்.

குஜராத்தின் பிரபல சூரத் நகர் விஜயம் செய்தார்கள்.



இன்று பெரிய நகரமாக இருந்தாலும் அன்று அதுவும் சிறிய ஊர்தான். எனினும் சூரத் பசுமை மிகு ஊராக இருந்தது. முன்பே ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருந்த சூரத் மக்கள் அவர்கள் சூரத் வருவதை அறிந்து ஆனந்தப் பெருக்குடன் வரவேற்க நூற்றுக்கணக்கான மக்கள் ஊர் எல்லையில் காத்துக் கிடந்தனர். காண தவம் கிடந்த கண்கள் ஹஜ்ரத் அவர்களை கண்டு ஆனந்தம் கொண்டது. அக்கூட்டத்தில் கண் கொண்டு காண இயலாத பார்வையற்றவர் ஏக்கத்தோடு தடுமாறிக் கொண்டிருந்தார்.

ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்கள் உளு செய்து எஞ்சிய நீரை அவரது முகத்தில் தடவினார்கள். அவரும் கண் கொண்டு கண்டு ஆனந்தப் பரவசம் அடைந்தார். அல்லாஹ்வின் வலியவர்களின் கராமத்தால் அவர் பார்வை பெற்றார். அது போன்ற எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்திவருகிறார்கள்

## என்னை தவாஃப் செய்யுங்கள்

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் சூரத்தில் தங்குகிறார்கள். வழமை போலவே மக்களுக்கு நல் ஆசி புரிந்தவாறே மக்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய பாகிஸ்தானின் லாகூர் நகரிலிருந்து ஹஜ் செய்வதற்காக கிளம்புகிறார்கள் ஹஜ்ரத் ஷைக் முஹம்மது லாகூரி (ரஹ்) அவர்கள். வழி நெடுகிலும் குத்புல் மதார் அவர்களின் மகிமையை கேள்விப்பட்ட அவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் தரிசனம் செய்துவிட்டு செல்ல முடிவெடுக்கிறார்கள். ஆர்வமாய் வந்த ஹஜ்ரத் ஷைக் முஹம்மது லாகூரி (ரஹ்) அவர்கள், வழி நெடுகிலும் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் மகிமையைக் கேள்விப்பட்ட அவர்கள் ஹஜ்ரத் மதாருல் ஆலமின் (ரஹ்) அவர்கள் தரிசனம் செய்துவிட்டு செல்ல முடிவெடுக்கிறார்கள். ஆர்வமாய் வந்த ஹஜ்ரத் ஷைக் முஹம்து லாகூரி (ரஹ்) அவர்களின் தரிசனத்திற்காக தம் முகத் திரைகளைத் திறக்கிறார்கள் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்கள், உடனே மெய்கண்டு, ஊர் உலகம் மறந்து உள்ள யாவும் மறந்து தன்னையும் மறந்து பரவசத்தில் மூழ்கிப் போகிறார்கள். ஹஜ்ரத் ஷைக் முஹம்மது

லாகூரி (ரஹ்) அவர்கள் எதற்கு வந்தோம். எங்கே உள்ளோம் என்பதையெல்லாம் மறந்து தான் ஹக்காவில் காணாமல் போய்விட்டார்கள்.

இப்பரவச நிலையே பல நாட்கள் நீடிக்கிறது. ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் ஞானப் பாட்டைக்குள் முழுவதுமாக பிரவேசித்து ஞான மோட்சம் பெறுகிறார்கள். ஹஜ்ரத் லாகூரி அவர்கள் பிறகு திடீரென ஒரு நாள் அன்னவர்களுக்கு சுயநினைவு வந்தபோது ஹஜ்ஜிடைய நாள் ஆரம்பித்து விட்டிருந்தது. ஹஜ்ஜுக்காக புறப்பட்டு ஹஜ் செய்ய முடியாமல் போய் விட்டதே. கண்மணி நாயகம்(ஸல்) அன்னவர்களின் புனித ரவ்லா ஷரீஃபை ஜியாரத் செய்ய முடியாமல் போனதே! இனி அப்போது கிட்டுமா என கவலைப்பட்டு புலம்பினார்கள்.

அவர்களை அழைத்த நம் மதார் ஆலம் (ரஹ்) கவலை வேண்டாம். தங்களுக்கு ஹஜ் செய்யும் பாக்கியம் உண்டு என்று கூறி தாங்கள் என்னை தவாஃப் செய்யுங்கள். ஹஜ் செல்வீர்கள் என்றார்கள். தம் ஆன்மீக குருவின் உத்தரவுப் படி தம் ஆன்மீக சூரியனை தவாஃப் செய்ய துவங்கினார்கள். தவாஃப் செய்ய ஆரம்பித்ததும் ஷைக் லாகூரி அவர்களுக்கு முன் ஹஜ்ரத் மதார் ஆலம் இல்லை அங்கு இருந்தது இறையில்லமாம் புனித கஃபதுல்லாஹ்.

தவாஃப் செய்து, ஹஜ் கிரியைகளை நிறைவேற்றி ரவ்லா ஷரீஃபை ஜியாரத் செய்து கிட்டத்தட்ட 5 மாதங்கள் அங்கே தங்கி விட்டு தாயகம் திரும்பினார்கள். ஹஜ்ரத் ஷைக் லாகூரி (ரஹ்) அவர்கள் இருந்த போதும்தாம் நிஜ உலகில் இருந்துதான் ஹஜ் செய்தோமோ? என ஹஜ்ரத் ஷைக் லாகூரி (ரஹ்) தோன்றவே அதை தம் ஞானத்தால் உணர்ந்த நம் மதார்ஆலம் (ரஹ்) அவர்கள், அவர்களின் கரத்தை தடவ ஹஜ்ரத் ஷைக் லாகூரி அவர்கள் தாம் நிஜ உலகில் இருப்பதை உணர்ந்தார்கள். ஹஜ் செய்து விட்டு தாயம் திரும்பிய பலரும் ஹஜ்ரத் ஷைக் முஹம்மது லாகூரி (ரஹ்) அவர்கள் ஹஜ் செய்ததை உறுதிப்படுத்தினார்கள்.



## சூரத்தில் வேகமாகப் பரவிய இஸ்லாம்

சூரத்தில் தங்கியிருந்தபோதும் வீரியம் மிக்க தம் சொல்லாலும், செயலாலும் அல்லாஹ் சுப்ஹான தஆலா நம் குத்புல் மதார் அவர்களுக்கு அருளிய மகத்தான அற்புதத்தாலும் நூற்றுக்கணக்கான நபர்கள் இஸ்லாத்தை தழுவினர். முஸ்லீம்களின் வணக்க முறைகள், சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை மற்ற சமயத்தார்களை பெரிதும் ஈர்த்தது. அது பலரிடையே நல்ல மாற்றத்தை உண்டாக்கினாலும் ஜாதியத்தில் ஊறிப்போயிருந்த சிலருக்கு இந்த சமத்துவ சன்மார்க்கத்தின் செயல்பாடுகள் எரிச்சலை உண்டாக்கிறது. இருப்பினும் யாராக இருந்தாலும் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் திருமுகம் கண்டு, அப்பேரொளியில் லயித்துவிட்டால் அப்படியே அன்னவர்களுக்கு வழிபட்டுவிடும் அதிசயம் நிகழ்வது நிச்சயம். பின் அவர்களின சொல்கேட்டு திருக்கலிமாவை சொல்லி முஸ்லீமாகி முரீதாகி விடுவார்கள். அது மட்டுமின்றி அல்லாஹ்வின் நேசர்களின் அற்புதத்தால் திருமணம் நடக்காதவர்களுக்கு திருமணம் கூடிவருவதும், குழந்தைப்பேறு பெறுவதும், நோயாளிகள் நலம் பெறுவதும், வேறுவேறு இன்னல்களில் அகப்பட்டோர் இன்னல் நீங்கி செல்வதும் வழமையாக இருந்தது.

சூரத்தில் அன்னவர்கள் தங்கியிருந்த 3 இடங்களும் இன்னும் அன்னவர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது. பின் குத்புல் மதார் அவர்கள் சூரத்திலிருந்து கிளம்ப முடிவு எடுத்துவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத்தீ போல பரவ மக்கள் சொல்லொனா துயருக்கு ஆளாயினர். ஏக்கத்துடன் அவர்களை நெருங்கியதும், ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் நாம் இந்தியத் திருநாடெங்கும் தீன் மணம் பரப்ப அனுப்பப்பட்டுள்ளோம். தம்மால் ஒரே இடத்தில் தங்க இயலாது. நாம் இங்கிருந்து சென்றாலும் நம் பிரதிநிதி ஒருவரை நியமித்துவிட்டு தான் செல்வோம். அவர் சொல்படி நடந்து கொள்ளுங்கள் என அறிவுரை கூறி, நாம் உங்களுக்கு அளித்துள்ள சன்மார்க்கம் ஹஜ்ரத் முஹம்மது ரசூல் (ஸல்) அன்னவர்களிடமிருந்து நம்மை வந்தடைந்ததாகும். ஆகவே குர்ஆன், சுன்னத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என கூறினார்கள். இவ்வாறாக மேலும்பல உபதசங்களை வழாங்கிவிட்டு

சூரத்திலிருந்து விடைபெற்று கம்பாத் வந்தடைந்தார்கள். கம்பாத்தின் அரசர் ஜஸ்வந்த் சிங், ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் கீர்த்தி அறிந்து அவர்களை நாடிவந்து இஸ்லாத்தில் இணைந்தார்கள். அவர்களுக்கு மதாருல் ஆலம்அவர்கள் ஜாஃபர்கான் என பெயரிட்டார்கள். ஹஜ்ரத் ஜாஃபர்கான் அவர்கள் நிறைய பள்ளிவாசல்களை நிர்மானித்து உள்ளதை இன்றைய வரலாறுகள் பேசுகிறது.

**பரோன்ச் எனும் ஊர் வருகை :**

பின் பல ஊர்களை கடந்து பரோன்ச் வந்து சேர்கிறார்கள். அங்கு சுமார் 36,000 நபர்கள் முஸ்லிமானதாக வரலாறு கூறுகிறது. ஒரு ஊரில் தங்கியிருந்து தீன் மணம் பரப்பி பின் அங்கிருந்து விடைபெறும் போது தமது கலீஃபா ஒருவரை அங்கே தம் பிரதிநிதியாக நியமித்துவிட்டு வருவார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் அப்படி கலீஃபாவாக நியமிக்கும் நபரை “ஷாஹ்” என அழைப்பார்கள்.

குஜராத்தில் பசுமை மிகு ஊராகத் திகழ்ந்த பரோன்ச்சிலும் அன்னவர்கள் சில்லாஹ் இருந்த பல இடங்கள் என்றும் நினைவு சின்னங்களாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. பின் அங்கிருந்து பாத்ரா வருகிறார்கள். அங்கும் ஹஜ்ரத் அவர்கள் சில்லாஹ் இருந்த இடம் அடையாள சின்னமாக இன்றும் உள்ளது. பின்பு அங்கிருந்து படோதா வருகிறார்கள்.

அடுத்த ஹஜ் : படோதாவிலிருந்து கம்பாத் வந்து கடல் மார்க்கமாக ஹஜ்ஜுக்குப் புறப்படுகிறார்கள். ஏமன் வழியாக மக்கா முகர்ரமா வந்தடைகிறார்கள். ஹஜ் கிரியைகளை நிறைவேற்றியபின் ஹரம் ஷரீஃபில் இந்தியாவில் சன்மார்க்கம் பிரச்சாரம் செய்வது பற்றி மக்களிடையே பயான் செய்கிறார்கள். பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த ஹாஜிகளின் ஒரே கூட்டம் அப்படியே அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களுடன் இந்தியா வர ஆயத்தமாகிறது.

வரும்போது தரைமார்க்கமாக இந்தியா புறப்படுகிறார்கள். இராக்கின் பாக்தாத், புகாரா வந்தடைகிறார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களுடன் ஹஜ்ரத் சையத் தாஹிர் (ரஹ்) எப்போதும்



உடனிருப்பார்கள். எல்லா பயணத்திலும் உடன் வருவார்கள். அப்படி புகாரா வரும்போதும் உடன் இருந்தார்கள். குத்புல் மதார் அவர்கள் ஹஜ்ரத் சையத் தாஹிர் (ரஹ்) அவர்களிடம் புகாராவின் குத்பு அவர்களின் மரண வேளை நெருங்கிவிட்டது. தங்கள் விரும்பினால் தங்களை அடுத்த குத்பாக நியமிப்போம் என்றார்கள். அதற்கு அவர்களோ நான் அப்பதவியைப் பெற்றால் தங்களைப்பிரிய வேண்டி வரும். தங்களைப் பிரிந்து முழு அகிலத்தின் குத்பு பதவி கிடைத்தாலும் நான் அதை விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஹஜ்ரத் சையத் தாஹிர் (ரஹ்) அவர்கள்.

பின்னர் புகாராவிலிருந்து குராஸான் பயணம் செய்கிறார்கள். புகாராவிலிருந்து குராஸான் வரையுமே ஹஜ்ரத் சையத் தாஹீர் (ரஹ்) உண்பதற்கு என ஒரு ஆரஞ்சுப் பழத்தை தவிர வேறொன்றையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆனபோதும் குராஸான் வந்ததும் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்கள்சையத் தாஹிர்(ரஹ்) அவர்களிடம் நீண்ட நேரமாக இந்த ஆரஞ்சு பழ வாடை வருவது எனக்கு வெறுப்பாக உள்ளது என்றதுமே அதன்பின் அவர்கள் உண்பதற்கு அதையும் வைத்துக் கொள்ளவில்லை. வேறு எதையும் வைத்துக் கொள்ளவில்லை.

**ஹகீம் திர்மிதீ (ரஹ்) :**

கஷ்ஃபுல் ஹுஜீப் என்ற புத்தகம் 326ம் பக்கத்தில் தாத்தா கன்ஜ் பக்ஷ் லாகூரி (ரஹ்) அவர்கள் எழுதுகிறார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் வர்ராக் (ரஹ்) கூறுகிறார்கள். ஒரு நாள் ஹகீம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் என்னிடம் நாம் ஓரிடத்திற்கு போக உள்ளோம் என்று கூறி என்னை அழைத்து சென்றார்கள். சிறிது தூரம் தான் நடந்து சென்றது போலிருந்து ஆனால் அதற்குள் ஓர் காட்டுக்குள் வந்துவிட்டோம். நாட்டின் நடுவில் பசுமையான மரம் அதன் கீழ் கம்பீரமான ஓர் ஆசனம். அதில் உயர்தரமான ஆடை அணிந்து கம்பீரமாக ஒருவர் வீற்றிருந்தார்கள். நாங்கள் அவர்களை நெருங்கினோம். பார்த்தால் எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. 40 நபர்கள் அவர்கள் அருகில் ஒன்று கூடியுள்ளனர். அந்த அரியாசனத்தில் இருந்தவர்கள் வான் நோக்கி சமிக்ஞை செய்தார்கள். வானிலிருந்து உணவுப் பதார்த்தங்கள்

இறங்கிற்று. நாங்கள் யாவரும் உண்டோம் பிறகு ஹகீம் திர்மிதி அவர்கள் வினா எழுப்ப அதற்கு அவர்கள் நீண்ட விளக்கமளித்தார்கள். எனக்கு அவர்கள் பேசியது ஒன்றுமே புரியவில்லை. பின் நாங்கள் விடை பெற்றோம்.

பிறகு அவர்கள் யார்? அது எந்த இடம் என நான் கேட்டதற்கு, அது பனு இஸ்ராயில் (வாழ்ந்து வந்த) காடு. அந்த மகான் ஹஜ்ரத் சையத் பதீஉத்ததீன் குத்புல் மதார் (ரஹ்) என்றார்கள்.

## ஹலப் நகருக்கு வருகை :

குராஸானிலிருந்து ஷாம் (சிரியா) வருகை தந்து வழியெல்லாம் தூய சன்மார்க்கத்தை எடுத்தோதியவாறு தாம் பிறந்த ஹலப் வந்து சேர்கிறார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள். தம் குடும்பத்தார்கள் சொந்த பந்தங்களோடு சில நாட்கள் ஹலபில் தங்கியிருந்து விட்டு பிறகு இந்தியா கிளம்புகிறார்கள்

## ஹஜ்ரத் ஷாஹ் ஜாஃபர்கான் அவர்களின் இஃதிகாஃப்

ஹஜ்ரத் 12 ஆண்டுகள் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள். “அல் ஆயாத்து லில் அன்பியஸயி வல் கராமாத்துலில் அவ்லியாயி ஹக்குன்” நபிமார்கள் வலிமார்களின் அற்புதங்கள் சத்தியம் என்ற நபி (ஸல்) அன்னவர்களின் பொன் மொழியை இமாம் பைளாவீ (ரஹ்) தமது தபீரில் பதிவு செய்கிறார்கள். ஏற்றுக் கொண்டுள்ள முஃமின்களுக்கு வியாக்கியானம் தேவையில்லை தானே?

ஹக்களவில் மூழ்கிப் போய் கிடந்த ஹஜ்ரத் அவர்கள் 12 ஆண்டு காலமும் இவ்வுலகில் நிகழ்ந்த எதையும் உணரவில்லை. எனவே, மழை, வெயில், காற்று என்று மாறிமாறி நிகழ்ந்த இயற்கை நிகழ்வுகளால் அன்னவர்களின் மேனி என்ன நிலைக்கு ஆகியிருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். இஃதிகாஃபிலிருந்து விடை பெற்றதுமே ஹஜ்ரத் சையதினா மதார் ஆலம் (ரஹ்) அன்னவர்களைக் கண்டு ஆனந்தம் அடைகிறார்கள்.

பொதுவாக யாரிடமும் பேரன்போடு பேசக்கூடியவர்கள் நம் இறைநேசச் செம்மல் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அன்னவர்களின் பேச்சு மனதுக்கு அவ்வளவு இதமாக ஆறுதலாக இருக்கும். மனதில்



உள்ள பாரமெல்லாம் காணாமல் போய்விடும். அவ்வாறுதான் 12 ஆண்டுகால தவத்திலிருந்து வந்து ஹஜ்ரத் ஷாஹ் ஜாஃபர்(ரலி) அவர்கள் உடல் தளர்ந்து போயிருந்தார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் வார்த்தைகள் அவர்களுக்கு உற்சாகத்தையும் புதுதெம்பையும் கொடுத்தது.

## குத்புல் மதார் அஹமதாபாத்தில் :

ஹஜ்ரத் குத்புல்மதார் (ரஹ்) அவர்களின் பயணம் வழக்கம் போல தொடர்ந்தது. பல ஊர்களில் சன்மார்க்க மணம் பரப்பியவாறு குஜராத் தலைநகர் அஹமதாபாத் வந்தடைந்தார்கள். அஹமதாபாத்தில் அன்னவர்கள் தங்கியிருந்த பல இடங்களை இன்றும் காண முடிகிறது. இந்தியா எங்கும் அவர்களின் மகிமை உணரப்பட்டது. ஆகவே அன்னவர்கள் எந்த ஊர் போய் தங்கினாலும் பல ஊர் மக்கள் கூட்டம் கூட்டமாக அன்னவர்களை வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர்.

ஹஜ்ரத் மிர் ஷம்சுத்தீன் (ரஹ்) கூறுகிறார்கள். அஹமதாபாத்தில் தங்கியிருந்த கொஞ்ச நாட்களிலேயே அன்னவர்களின் தூய பிரச்சாரத்தால் 34,000 பேர் முஸ்லீமாகிவிட்டார்கள். அங்கும் சில பள்ளிவாசல்கள், நிறைய கிணறுகள் ஹஜ்ரத் அவர்களின் ஆணைப்படி உண்டாக்கப்பட்டன. பிறகு ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) பாலன்பூர் கிளம்பினார்கள். பாலன்பூர் அரசர் பல்வான்சிங் ஹஜ்ரத் அவர்களின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். ஹஜ்ரத் மதார் ஆலம் அவர்கள் வந்தபின் அன்னவர்களின் மெய்வாக்கைக் கேட்டு சத்தியம் உணர்ந்து முஸ்லிமானார். அவருக்கு ஜோர் ஆஷிக் கான் என பெயர் வைத்தார்கள் குத்புல் மதார்அவர்கள். அன்னவர்களின் ஆணையை ஏற்று ராஜா ஜோர் ஆஷிக் கான் பல பள்ளிவாசல்களையும் பல கிணறுகளையும் நிர்மாணித்தார்கள். மதார் சில்லாஹ் என்ற பெயர்களில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் பாலன்பூரில் தங்கி இருந்த இடங்கள் நினைவு கூறுபடுகின்றன. ஜோர் ஆவர் பேலஸ் என்ற பெயரில் அங்கே அரண்மனை இருப்பது முக்கிய சான்றாகும்.

குஜராத்தில் பல ஊர்களில் இருந்து சன்மார்க்கப்பணி

இறங்கிற்று. நாங்கள் யாவரும் உண்டோம் பிறகு ஹகீம் திர்மிதி அவர்கள் வினா எழுப்ப அதற்கு அவர்கள் நீண்ட விளக்கமளித்தார்கள். எனக்கு அவர்கள் பேசியது ஒன்றுமே புரியவில்லை. பின் நாங்கள் விடை பெற்றோம்.

பிறகு அவர்கள் யார்? அது எந்த இடம் என நான் கேட்டதற்கு, அது பனு இஸ்ராயில் (வாழ்ந்து வந்த) காடு. அந்த மகான் ஹஜ்ரத் சையத் பதீஉத்ததீன் குத்புல் மதார் (ரஹ்) என்றார்கள்.

**ஹலப் நகருக்கு வருகை :**

குராஸானிலிருந்து ஷாம் (சிரியா) வருகை தந்து வழியெல்லாம் தூய சன்மார்க்கத்தை எடுத்தோதியவாறு தாம் பிறந்த ஹலப் வந்து சேர்கிறார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள். தம் குடும்பத்தார்கள் சொந்த பந்தங்களோடு சில நாட்கள் ஹலபில் தங்கியிருந்து விட்டு பிறகு இந்தியா கிளம்புகிறார்கள்

**ஹஜ்ரத் ஷாஹ் ஜாஃபர்கான் அவர்களின் இஃதிகாஃப்**

ஹஜ்ரத் 12 ஆண்டுகள் இஃதிகாஃப் இருந்துள்ளார்கள். "அல் ஆயாத்து லில் அன்பியஸயி வல் கராமாத்துலில் அவ்லியாயி ஹக்குன்" நபிமார்கள் வலிமார்களின் அற்புதங்கள் சத்தியம் என்ற நபி (ஸல்) அன்னவர்களின் பொன் மொழியை இமாம் பைளாவீ (ரஹ்) தமது தபீரில் பதிவு செய்கிறார்கள். ஏற்றுக் கொண்டுள்ள முஃமின்களுக்கு வியாக்கியானம் தேவையில்லை தானே?

ஹக்களவில் மூழ்கிப் போய் கிடந்த ஹஜ்ரத் அவர்கள் 12 ஆண்டு காலமும் இவ்வுலகில் நிகழ்ந்த எதையும் உணரவில்லை. எனவே, மழை, வெயில், காற்று என்று மாறிமாறி நிகழ்ந்த இயற்கை நிகழ்வுகளால் அன்னவர்களின் மேனி என்ன நிலைக்கு ஆகியிருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். இஃஃதிகாஃபிலிருந்து விடை பெற்றதுமே ஹஜ்ரத் சையதினா மதார் ஆலம் (ரஹ்) அன்னவர்களைக் கண்டு ஆனந்தம் அடைகிறார்கள்.

பொதுவாக யாரிடமும் பேரன்போடு பேசக்கூடியவர்கள் நம் இறைநேசச் செம்மல் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அன்னவர்களின் பேச்சு மனதுக்கு அவ்வளவு இதமாக ஆறுதலாக இருக்கும். மனதில்



உள்ள பாரமெல்லாம் காணாமல் போய்விடும். அவ்வாறுதான் 12 ஆண்டுகால தவத்திலிருந்து வந்து ஹஜ்ரத் ஷாஹ் ஜாஃபர்(ரலி) அவர்கள் உடல் தளர்ந்து போயிருந்தார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் வார்த்தைகள் அவர்களுக்கு உற்சாகத்தையும் புதுதெம்பையும் கொடுத்தது.

**குத்புல் மதார் அஹமதாபாத்தில் :**

ஹஜ்ரத் குத்புல்மதார் (ரஹ்) அவர்களின் பயணம் வழக்கம் போல தொடர்ந்தது. பல ஊர்களில் சன்மார்க்க மணம் பரப்பியவாறு குஜராத் தலைநகர் அஹமதாபாத் வந்தடைந்தார்கள். அஹமதாபாத்தில் அன்னவர்கள் தங்கியிருந்த பல இடங்களை இன்றும் காண முடிகிறது. இந்தியா எங்கும் அவர்களின் மகிமை உணரப்பட்டது. ஆகவே அன்னவர்கள் எந்த ஊர் போய் தங்கினாலும் பல ஊர் மக்கள் கூட்டம் கூட்டமாக அன்னவர்களை வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர்.

ஹஜ்ரத் மிர் ஷம்சுத்தீன் (ரஹ்) கூறுகிறார்கள். அஹமதாபாத்தில் தங்கியிருந்த கொஞ்ச நாட்களிலேயே அன்னவர்களின் தூய பிரச்சாரத்தால் 34,000 பேர் முஸ்லீமாகிவிட்டார்கள். அங்கும் சில பள்ளிவாசல்கள், நிறைய கிணறுகள் ஹஜ்ரத் அவர்களின் ஆணைப்படி உண்டாக்கப்பட்டன. பிறகு ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) பாலன்பூர் கிளம்பினார்கள். பாலன்பூர் அரசர் பல்வான்சிங் ஹஜ்ரத் அவர்களின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். ஹஜ்ரத் மதார் ஆலம் அவர்கள் வந்தபின் அன்னவர்களின் மெய்வாக்கைக் கேட்டு சத்தியம் உணர்ந்து முஸ்லிமானார். அவருக்கு ஜோர் ஆஷிக் கான் என பெயர் வைத்தார்கள் குத்புல் மதார்அவர்கள். அன்னவர்களின் ஆணையை ஏற்று ராஜா ஜோர் ஆஷிக் கான் பல பள்ளிவாசல்களையும் பல கிணறுகளையும் நிர்மாணித்தார்கள். மதார் சில்லாஹ் என்ற பெயர்களில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் பாலன்பூரில் தங்கி இருந்த இடங்கள் நினைவு கூறுபடுகின்றன. ஜோர் ஆவர் பேலஸ் என்ற பெயரில் அங்கே அரண்மனை இருப்பது முக்கிய சான்றாகும்.

குஜராத்தில் பல ஊர்களில் இருந்து சன்மார்க்கப்பணி

செய்தவாறே கம்பாத் வந்தடைந்தார்கள். கம்பாத்தின் அரசர் ஜஸ்வந்த் சிங் ஹஜ்ரத் அவர்களுக்கு உரிய வரவேற்பளித்தார். ஒவ்வொரு நாளும் பலமணி நேரங்கள் ஹஜ்ரத் அவர்களின் சன்னிதானத்தில் இருந்து ஹஜ்ரத் அவர்களின் வார்த்தைகளை கேட்டு மெய்யுணர்ந்து அவரும் இஸ்லாத்தில் இணைந்தார். அவருடன் பல முக்கியஸ்தர்களும் இஸ்லாத்தில் இணைந்து சிறப்படைந்தனர். பிறகு ஹஜ்ஜீக்கு கிளம்பிய ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் ஹஜ்ஜை நிறைவு செய்து பின் மதினா ஷரீபில் பல நாட்கள் தங்கியிருந்து ரவ்லா ஷரீஃபை ஜியாரத் செய்தார்கள். அதன்பின் ஈராக் வந்து நஜஃப் கர்பலா வழியாக பாக்தாத் ஷரிப் வந்தடைகிறார்கள்.

## கௌதுல் அஃலம் அவர்களுடன்

ஹஜ்ரத் ஸைதினா குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யீத்தின் அப்துல்காதர் ஜிலானி (ரஹ்) அவர்கள் பிறப்பதற்கு பல ஆண்டுகள் முன்பே பிறந்திருந்த போதிலும் பல நூறு ஆண்டுகள் பூமியொளியில் வாழ்ந்தபடியால் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தமது புற உலக ஜீவிய காலத்தில் பாக்தாதில் ஹஜ்ரத் முஹ்யீத்தின் ஆண்டகை அவர்களை சந்திக்கிறார்கள்.

அச்சமயம் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்கள் விலாயத்தின் சம்பூரணத்துவ ஜலாலிய்யத் நிலையில் இருந்தார்கள் அச்சமயத்தில் அவர்களை வானில் பறக்கும் பறவையைக் கண்டால் உடனே கீழே விழுந்து விடும். எந்த ஒரு மனிதராலும் அவர்களுக்கு முன் நிற்கவும் முடியாது. அப்படி ஓர் ஜலாலிய்யத்தின் உச்சத்தில் இருந்து கொண்டு இருந்தார்கள். அப்போது ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களின் அருகில் சென்று ஹஜ்ரத் குத்புல் மதார்(ரலி) அவர்கள் பேசுகிறார்கள். சகோதரரே! எமக்கும் பாட்டனார் அகிலத்தாரின் அருட்கொடையான அண்ணல் பெருமானார் (ஸல்) அன்னவர்கள் ஆவார்கள். இதைச் சொன்னதுதான் தாமதம் உடனே ஜலாலிய்யத் நிலையிலிருந்த ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள் ஜமாலிய்யத் என்னும் சாந்த நிலைக்கு மாறினார்கள். ரஹ்மத்துல்லில் ஆலமீன் அகிலத்தாரின் அருட்கொடை என்ற சொல் சாத்வீகத் தன்மை



கொண்டது. அதாவது ஜமாலிய்யத்தானது அதுவும் அற்புதமான அல்லாஹ்வின் சொல் அற்புதம் மிக்க அல்லாஹ்வின் நேசர்களின் திருவாயிலிருந்து வெளிவரும்போது அதன் வீரியம் அற்புதம் மிக்கதாக இருப்பதில் ஆட்சேபிக்க இடமில்லை. ஆன்மீகத்தின் உச்ச ஸ்தானங்களில் உள்ள இரு ஆன்மீகச் சூரியன்களும் சந்தித்துக் கொண்டது என்பதே அற்புதமான நிகழ்வு. இந்த அற்புதத்தைக் கண்ட கண்கள் பெரும் பாக்கியமுடையது. பிறகு பல நாடுகள் கடந்து பதக்ஷான் வந்து சேர்கிறார்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள்.

## "பதக்க்ஷானில் மவ்லானா ஹுசைன் :"

பதக்ஷானில் பல நபர்களுக்கு சன்மார்க்கம் போதித்து நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கையில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் அல்லாஹு அக்பர் என்றதும் மல்லானா ஹீசைன் (ரஹ்) எனும் ஆலிம் அவர்கள் ஜதபு நிலைக்கு (பரவச நிலைக்கு) உந்தப்பட்டார்கள். மயங்கிச் சரிந்தார்கள். பிறகு அவர்களை சிலர் நமது ஆன்மீக சூரியன் மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் தக்வாவின் நிலை அறிந்து அவர்களுக்கு பைஅத் வழங்கி சிறப்பித்ததோடு கிலாபத் தந்து கௌரவப் படுத்தினார்கள்.

அவ்வாறே ஹஜ்ரத் ஃபழ்லுல்லாஹ் பதக்ஷானீ (ரஹ்) அவர்களுக்கும் பைஅத்தும், கிலாஃபத்தும் தந்து சிறப்பித்தார்கள. அதன்பின் இவர்களும் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் ஃபைஜான் அருள் மூலம் உயர்ந்த ஸ்னனம் பெற்ற கராமத் உடைய இறை நேசராகத் திகழ்கிறார்கள். "அல்லாஹு அக்பர்" என்ற ஜலாலிய்யத்தான் சொல்லுக்கு மிகப்பெரிய சக்தி உள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. எனினும் அல்லாஹ்வின் வார்த்தையாகட்டும் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய நபிமார்கள். வலிமார்களை போன்றவர்களாகட்டும் மகத்தான அல்லாஹ்வின் ஆற்றல் உள்ளவர்களே. ஆனபோதும் அதன்மூலம் அவர்களின் மூலம் யாருக்கு என்ன பயன் தரவேண்டும் என அல்லாஹ் நாடுகிறானோ அவருக்கே பயன் கிட்டும் அன்னவர்களின் "அல்லாஹு அக்பர்" மல்லானா ஹீசைன் (ரஹ்) அவர்களை பரவசத்தில் ஆழ்த்த வேண்டும் என்பது அவன் நாட்டம். அதே போல

தன் நேசர்களாம் வலிமார்களில் அருளாசியையும் துஆ பரக்கத்தையும் தன் அடியார்களில் யார் பெற்று சிறப்புடைய வேண்டும் என அல்லாஹ் ரப்புல் ஆலமீன் நாட்டத்தில் உள்ளதோ அத்தகையோர் பாக்கியசாலிகளாக இருக்கிறோம்.

அல்லாஹ்வின் அருளுக்குரியோராம், நபிமார்கள், வலிமார்களின் சந்நிதானத்தைச் சேராது அல்லாஹ்வின் அருளிலிருந்து தூரப்பட்ட அபாக்யசாலிகள் நமைத் தூற்றுவதால் நமக்கு ஒன்றும் கஷ்டமில்லை ஆம்! அல்லாஹ்வின் அருளில் அபயம் புகுந்தோருக்கு ஈருலகிலும் நஷ்டமில்லை.

## எகிப்து மிஸ்ரில் குத்புல் மதார்

பதக்ஷானிலிருந்து மீண்டும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் பயணம் தொடர்ந்தது. மிஸ்ர் (எகிப்து) வந்து சேர்கிறார்கள். வழியெங்கும் அன்னவர்களின் சத்தியப் பிரச்சாரத்தால் அநேக நபர்கள் பயன்பெறுவதும் வழமையான ஒன்று. மிஸ்ரில் அஹ்மது எனும் புகழ்பெற்ற மருத்துவர் தம் மாணவரோடு கப்பல் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவரது மாணவர், காற்றின் தன்மையில் ஏதோ மாற்றம் தெரிகிறதா? தாங்கள் உணர்கிறீர்களா? என கேட்டார். ஆம் என டாக்டர் அஹமது கூறினார். பிறகு கரையை அடைகிறார்கள். அப்போது பயங்கர புயல். இது நிகழ்ந்த மறுகணம் முதலே நாட்டில் காலரா பரவ ஆரம்பித்துவிட்டது. நாட்டிலுள்ள கைதேர்ந்த மருத்துவர்களோடு சேர்ந்து எவ்வளவோ முயன்றும் டாக்டர் அஹமதுவால் காலராவை தடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட அசாதாரண சூழலில்தான் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் மிஸ்ருக்குள் காலடி எடுத்து வைக்கிறார்கள்.

டாக்டர் அஹ்மது மிஸ்ரீ ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களை சந்திக்க வருகிறார்கள். அப்போது நாயகம் அவர்கள் ஹகீம் சாஹிப் தாங்களால் அல்லாஹ்வின் வேதனையை தடுத்து நிறுத்த முடியாது. இந்தக் காலரா அதாபாக (வேதனையாக) இறங்கியுள்ளது. அல்லாஹ்வின் அதாபு நீங்க வேண்டுமெனில் மக்கள் பாவங்களை விடுத்து தவ்பா செய்தல் வேண்டும். இங்கு பலர் அநாதைகளின் சொத்துக்களை அபகரித்துள்ளனர். அதை



உரியவர்களிடம் முறையாக ஒப்படைக்க வேண்டும். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் கூறியபடியே மக்கள் தவ்பா செய்து அநாதைகளின் சொத்துக்களை அதற்குரியவர்களிடம் முறையாக ஒப்படைக்க வேண்டும். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் கூறியபடியே மக்கள் தவ்பா செய்து அநாதைகளின் சொத்துக்களை அதற்குரியவர்களிடம் முறையாக ஒப்படைத்தனர். அதாபு நீங்கி மிஸ்ர் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

அதன்பின் மிஸ்ரிலிருந்து புறப்பட்டு நீம் ரோஜ் என்ற ஊரை வந்து சேர்கிறார்கள். அந்த ஊரில் இருந்த ஹஜ்ரத் ஷாஹ் லுத்ஃபுல்லாஹ் (ரஹ்) அவர்களுக்கு கனவில் ஓர் உத்தரவு வருகிறது. அதாவது ஹஜ்ரத் ஷாஹ் மதார் அவர்களை சந்தித்து ஈருலக நற்பாக்கியம் பெறுவீர். அதன்பின் ஹஜ்ரத் ஷாஹ் லுத்ஃபுல்லாஹ் (ரஹி) நேராக ஹஜ்ரத் குத்புல் (ரவி) அவர்களின் சந்நிதானத்திற்கு வந்து அவரிடம் எதுவும் பேசாமல் அமைதியாக அடக்கமாக சபையில் அமர்கிறார்கள். நாட்கள் ஓடுகிறது. அவர்கள் வாய் திறக்கவே இல்லை. ஒரு நாள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) தம் முகத்திரையை நீக்கி ஹஜ்ரத் ஷாஹ் லுத்ஃபுல்லாஹ் (ரஹ்) அவர்களை அருள்கூர்ந்து நோக்குகிறார்கள். அவ்வளவுதான் ஹஜ்ரத் ஷாஹ் லுத்ஃபுல்லாஹ் (ரஹ்) அவர்களின் நிலையே மாறிப்போகிறது. அதன்பின் பசி எடுக்கவில்லை. தாகம் எடுக்கவில்லை. ஆடை அழுக்கானால் தீயில் போட்டு எடுப்பார்களாம். அப்படியே பளிச்சென்று ஆகிவிடுமாம்.

வலிமார்களின் பார்வை எதையும் மாற்ற வல்லது. ஏனெனில் ஹதீஸ் குத்ஸியில் வருவதைப் போல வலிமார்களின் பார்க்கும் பார்வையாய் கேட்கும் செவிப்புலனாய், பேசும் திறனாக, கரத்தின் பிடியாக கால்களின் நடையாக அதாவது முழுக்க முழுக்க வலிமார்களிடத்தில் அல்லாஹ்வின் ஆற்றல் நிறைந்து விடுகிறது. நிரப்பான அல்லாஹ்வின் ஆற்றலாகவே இருப்பதால் நபிமார்கள், வலிமார்களிடம் இதுபோன்ற அற்புதங்கள் நிகழ்வது எதார்த்தனமானதுதான்.

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரவி) அவர்கள் ஹஜ்ரத் லுத்ஃபுல்லாஹ் மதார் அவர்களை அழைத்து சீரிய உபதேசங்கள் செய்து மெய்ஞ்ஞானப் பாட்டையில் உயர்மதிப்பளித்து நஜ்ஃப் என்ற

ஊரில் போய் சன்மார்க்கப் பணி செய்ய அனுப்பி வைத்தார்கள். இதுபோல பல நாடுகளைக் கடந்து மீண்டும் இந்தியத் திருநாடு விஜயம் செய்தார்கள்.

தற்போதைய பங்களாதேஷ், பிஹார், ஒரிசா, பஞ்சாப், சிந்து, குஜராத், மத்தியப் பிரதேசம், கேரளா, மஹாராஷ்டிரா, ஹரியானா, உத்திரப்பிரதேசம், அந்தமான, கர்நாடகா, காஷ்மீர், பாகிஸ்தான், ஆப்கான், ஸ்ரீலங்கா என அப்போதைய இந்தியாவின் அநேக பகுதிகள் சென்று சன்மார்க்கத்தை பரப்புரை செய்தார்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள்.

**"அஜ்மீர் ஷெரீப் வருகை":**

இவ்வாறாக பல மாழலங்களில் சன்மார்க்க மணம் பரப்பிய மதார் ஆலம் அவர்கள் இராஜஸ்தான் மாநிலம் வந்து பல பகுதிகளில் தங்கி தீன் மணம் பரப்பினார்கள். அஜ்மீர் ஷெரீயும் வந்தார்கள்.

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் வருகைக்கு முன்பே சில வலிமார்கள் அஜ்மீர் ஷரீப் வந்து தாராகட் எனும் மலையில் தங்கியிருந்து இஸ்லாமிய சன்மார்க்கத்தை பரப்புரை செய்திருந்தார்கள். எனினும் அதை வெறுத்த பல காஃபிர்கள் அவர்களோடு யுத்தம் செய்து முஸ்லீம்கள் அனைவரையும் ஷஹீதாக்கி விட்டிருந்தார்கள்.

ஆனால் அந்த காஃபிர்களால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவர்களால் ஷஹீதாக்கப்பட சடலங்களிலிருந்து பெரும் சப்தத்தோடு "அல்லாஹீ அக்பர்" என்ற முழக்கம் இரவெல்லாம் அப்பகுதியை அதிரவைத்தது. அந்த சப்தத்தின் காரணத்தால் கர்ப்பஸ்தரிகளின் கர்ப்பம் கூட கலைந்து விடும்படியான அசாதாரண சூழல் நீடித்தது. விடிந்ததும் சப்தம் அடங்கிவிடும். இரவானதும் மீண்டும் "அல்லாஹீ அக்பர்" என்ற முழக்கத்தால் விண் அதிரும். அஜ்மீர் வாழ் காஃபிர்கள் என்னென்னவோ செய்து பார்த்தும் அவர்களால் அந்த சப்தத்தை நிறுத்த முடியவில்லை. ஊரை காலி செய்து விட்டு போவதை தவிர வேறு வழியில்லை என்ற உச்சகட்ட விரக்தியில் அம்மக்கள்



இருந்தபோதுதான் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அங்கு விஜயம் செய்தார்கள். அங்குள்ள கோகலா மலையில் தங்கினார்கள்.

மீண்டும் ஒரு முஸ்லீம்களின் கூட்டம் அங்கு வந்திருப்பதை அறிந்த ஊர் மக்கள் மேலும் கலக்கத்திற்கு ஆளாயினர். எல்லோரும் கூடி ஆலோசித்து இனியும் முஸ்லீம்களுக்கு எதிராக எதுவும் செய்து மென்மேலும் சிக்கலில் மாட்டிக் கொள்ளக்கூடாது. நாம் அனைவரும் அவர்களிடமே சென்று நம் பிரச்சினையை சொல்லி அதற்கான தீர்வை தேடுவதே சரி என முடிவெடுத்து ஹஜ்ரத குத்புல் மதார் (ரலி) அவர்களை அணுகி பணிவுடன் தம் பிரச்சினையை சொல்லி அதற்கான தீர்வை தேடுவதே சரி என முடிவெடுத்து ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களை அணுகி பணிவுடன் தம் பிரச்சினையை விளக்கி கூறினார்கள்.

அஜ்மீர் வாழ் மக்களுக்கு ஆறுதல் மொழி பகர்ந்த மதார் நாயகம் (ரலி) அவர்கள் அப்பிரச்சனை தீர வழிவகை செய்வதாகவும் வாக்களித்தார்கள். பிறகு தம் சீடர்களை தாராகோட் மலைக்கு அனுப்பி அங்கு நடக்கும் ஷஹீதான முஸ்லீம்களின் சடலங்களை முறைப்படி கஃபன், தஃபன் செய்து அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்ள். அவ்வாறே செய்தவுடன் அந்த சப்தம் வருவது நின்றுவிட்டது. ஆனால் நிம்மதி பெருமூச்சு விட்ட அஜ்மீர் மக்கள் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்களின் மெய் விசுவாசிகளாகி பலரும் இஸ்லாத்தில் இணைந்தார்கள்.

**மந்திரவாதி அதர்நாத்**

அஜ்மீரில் அதர்நாத் என்றொரு மந்திரவாதி இருந்தார். பலரும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சீடர்களாகி முஸ்லீமானது அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களுக்கே சூனியம் செய்து வைத்தார். ஆனால் அது அல்லாஹ்வின் அருளால் பலிக்கவில்லை. பின் மந்திர மாயங்கள் செய்து இரும்பாலான சுண்டல் பயிர்களை உண்டாக்கி அதை ஹஜ்ரத் பெருந்தகையவர்களிடம் கொண்டு சென்றார். தாங்கள் ஃபக்கீர் என்றால் தங்களால் இதை சாப்பிட முடியும் தானே? என கேட்டார். அதற்கவர்கள் நான் ஃபக்கீர்தான் ஆனாலும் நான் நிரந்தர

நோன்பாளி இதை என் முரிதுக்களுக்கு கொடு. அவர்கள் உண்பார்கள் என்று கூறினார்கள். அவனும் கொடுத்தார். அவர்களும் உணடார்கள்.

அந்த இரும்பு சுண்டல் பயிர் ஒன்றை அந்த மலையில் புதைத்து வைத்தார்கள் மதார் ஆலம் (ரலி) அவர்கள். அவ்விதை ஒரு ஆள் உயரத்தை விட பெரிய மரமாக முளைத்து நின்றது. இந்த வரலாறை உர்தூ மொழியில் தொகுத்துள்ள ஹஜ்ரத் சையத் மஹ்ஜர் அலிவகாரீ மதாரீ அவர்கள் அந்த மரத்தை தம் கண்ணால் கண்டு தரிசித்ததாக எழுதுகிறார்கள். அந்த உர்தூ நூல் ஹிஜ்ரி 1423 அதாவது 2002ல் எழுதப்பட்டது. அப்படி எனில் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அந்த மரம் அல்லாஹ்வின் நேசரின் கராமத்தை பறைசாற்றி வருவதை அறிந்து கொள்ளலாம்.

பிரபஞ்சம் முழுக்க அல்லாஹ்வின் ஆற்றலால்தான் இயங்குகிறது. அல்லாஹ்வின் ஆற்றல் மட்டுமே உள்ளது. வேறு எவருக்கும் எதற்கும் சுய சக்தி இல்லை என்பதை நாம் அறிவோம். எனினும் அல்லாஹ்வின் பேராற்றல் என்பது அல்லாஹ்வின் நேசர்களாக நபிமார்கள், வலிமார்களிடத்தே வெளிப்படுகிறது. அவர்களே அதற்கு தகுதிமிக்க பாத்திரங்களாக இருக்கிறார்கள் என்பதால் சாமணியர்களுக்கு சாத்தியமில்லாத பலவும் அல்லாஹ்வின் நேசர்களுக்கு சாத்தியப்பட்டவையாக இருக்கிறது. இந்த உண்மை உணராமல் நபிமார்கள், வலிமார்கள் நிகழ்த்தும் அற்புதங்களை சந்தேகக் கண்ணோடு பார்ப்பது காஃபிர்களின் தன்மையாகவே காலங்காலமாக இருந்து வருகிறது. நபிமார்கள் பலரின் அற்புதங்களையும் ஹஜ்ரத் மர்யம் (அலை) ஹஜ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் அவையிலே இருந்த ஹஜ்ரத் ஆஸிப் பின் பர்கயா போன்ற வலிமார்களின் கராமத்துக்களையும் திருமுறை குர்ஆன் உறுதிப்படுத்தி உள்ளது. எனவே குர் ஆணை நிராகரிக்கிற காஃபிர்களாக மட்டுமே நபிமார்களின் அற்புதங்களை நிராகரிக்க முடியும் என்பது தெளிவாகிறதல்லவா? ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சத்திய நிலை உணர்ந்த அதர்நாத் மனம் திருந்தி அன்னவர்களில் கரம் பற்றி முஸ்லீமாகி அவர்களின் சீடரானார்கள். அந்த கோகலா மலையை மதார் டேகரீ என்றும் அழைக்கப்படுகிறது. அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு ஒரு



நதிக்கரையில் தங்குகிறார்கள்.

## ஹஜ்ரத் சாஹீசாலருக்கு சோபனம்

ஹஜ்ரத் முல்லா மஹ்மூத் ஙஜ்ணவீ (ரஹ்) தமது தாரீக் ஙஜ்னவீயில் எழுதுகிறார்கள். ஹஜ்ரத் சாஹீசாலர் (ரஹ்) அஜ்மீருக்கு அருகில் ஆற்றங்கரையோரம் முகாமிட்டு முஜப்பர்கான் அஜ்மீரியின் உதவிக்காக காத்திருந்தார்கள். அச்சமயம் ஹஜ்ரத் சையத் பதீஉத்தீன் குத்புல் மதார் (ரஹ்) அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் ஹஜ்ரத் சாஹீ சாலார் (ரஹ்) அவர்களிடம் தங்களுக்கு சாலார் மஸ் ஊத் என்ற மகன் பிறப்பார். அவர் ஓர் பெரிய போர் வீரராக (ஙாஜியாக) இருப்பார் என சுபச் செய்தி கூறினார்கள்.

நாளை என்ன நடக்கும் என்பது ரகசியம் தான். அதை அறியக் கூடிய அற்புத அறிவை அல்லாஹ் தனது நேசம் மிக்க நபிமார்கள் வலிமார்களுக்கு அருளுகிறோம். குறிப்பாக இது நபிமார்களின் சிறப்பியல்புகளில் ஒன்று நபி என்ற அரபிச் சொல் சும்மா செய்தி வாசித்துவிட்டு போகிறவனுக்கு சொல்லப்படாது. முக்காலமும் அறிந்து சொல்கிற விசேஷத்தையே அது குறிக்கும். எனவே நபிமார்கள் பிற்கால செய்திகளை நாளை நடக்கப் போவதை அறியாமல் இருக்க முடியாது. எனினும் தெரிந்த அணைத்தையும் சொல்ல வேண்டுமென்பது அவர்களுக்கு கட்டாயமில்லை. குறிப்பாக கியாமத் நாள் எப்போது? என்பதை போன்ற இறை ரகசியங்களை சொல்ல அனுமதியும் இல்லை. மக்கள் அனைவரிடமும் சொல்லக்கூடாத பல ரகசியங்கள் என்றும் பல வரையறுக்கப்பட்டுள்ளது.

நபிமார்கள் மக்களின் ஆசான்கள் "இண்ணாம பு கிஸ்த்து மு அல்லிமா" நான் நல்லாசானாய் அனுப்பப்பட்டுள்ளேன் என்று தம்மை குறித்து கண்மணி நாயகம் (ரஹ்) கூறுகிறார்கள். ஒரு ஆசிரியர் மாணவர்களின் நிலைக்குத் தக்கவே பாடம் வாங்கித் தர முடியும். தமக்கு எல்லாம் தெரியும் என்பதற்காக அனைத்தையும் சொல்லித் தந்துவிட முடியாது.

அப்படித்தான் பொதுவாக மக்களிடம் ஆயிரம் ஆயிரம் பாடம் சொன்ன கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்கள் தமக்கு மிக நெருக்கமான தோழர்களிடம் மட்டும் கூறிய விஷயங்கள் அநேகம். ரசூல் (ஸல்) அன்னவர்கள் என்னிடம் கூறியதில் ஒரு பகுதியை தான் நான் மக்களிடம் சொல்லியிருக்கிறேன். மறுபகுதியை சொன்னால் மக்கள் என்னை கல்லாலடித்துக் கொன்றுவிடுவார்கள் என ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஆக மக்களுக்கு எது, எது அவசியமோ அதை நிரப்பமாக சொல்லி வழிநடத்தச் சொல்கிறார்கள். நபிமார்கள் அதற்காக அவர்கள் சொன்னது மட்டுமே அவர்களுக்கு தெரியும் என்ற தவறான முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

ஆக இதுபோல வலிமார்களும் அல்லாஹ் அற்புதங்கள் வெளியாகும் தகுதிமிக்க ஸ்தானத்தில் இருப்பதால் வலிமார்களிடமும் நாளை பற்றிய அறிவு இருப்பதில் வியப்பில்லை. கர்ப்ப ஸ்திரீயாக இருந்த தன் மனைவியிடம் தனக்கு பெண் குழந்தை பிறக்கும் என உறுதிபடச் சொன்னார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி). அவ்வாறே நடந்தது. அதுபோல ஹஜ்ரத் சாஹீ சாலருக்கு சாலார் மஹ்மூத் ஙாஜி பிறப்பதை சொல்கிறார்கள் ஹஜ்ரத குத்புல் மதார் (ரலி) அவர்கள்.

அதோடு அல்லாஹ்வின் உத்தரவுப்படி மலக்குமார்கள் ஏழுவானத்திலும் எனை அழைக்கும் ஏழு பெயர்களை சொல்லித் தருகிறேன். அதை உச்சரிக்க ஜெயமும் கீர்த்தியும் உண்டாகும். துன்பம் அகளும் என கூறி அவற்றையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

### மீண்டும் ஹஜ்

அடுத்த ஹஜ் பயணத்திற்கு தயாராகி விட்டார்கள். இந்த முறை ஆன்மீகச் சூரியன் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தரைமார்க்கமாக ஹஜ் பயணம் மேற்கொள்கிறார்கள்.

இம்முறை பக்தாத் ஷரீபில் நடக்கப்போகிற ஒரு பெரும் கராமத்தையும் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். அதற்கு முன்பு ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டு மதினா தய்யிபாவில் (ஸல்)



அவர்களை ஜியாரத் செய்துவிட்டு நேராக தமது ஷைக் முர்ஷித் ஹஜ்ரத் சுல்தானில் ஆரிபீன் பாயஜித் பிஸ்தாமி தைஃபூர் ஷாமீ (ரலி) அவர்களின் புனித அடக்கஸ்தலத்திற்கு சென்று ஜியாரத் செய்கிறார்கள். அங்கு தங்கி மஸ்ஜித்களை நிர்மானித்தல், கிணறுகளை வெட்டுதல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்கிறார்கள். பிறகு மேலும் சில முரீதுகள், கலீஃபாக்களுடன் காழிமைன் ஷரீஃபைன் அடைகிறார்கள். பிறகு பாக்தாத் ஷரீப் வந்து தங்குகிறார்கள்.

### பாக்தாத் - கராமத்

பாக்தாத் ஷரீஃபில் தங்கியிருந்த காலை ஒரு பெண்மணி கண்ணீருடன் அன்னவர்களை தேடிவந்து, என் துன்பம் போக்குங்கள் எஜமானரே! என வேண்டி நிற்கிறார். கருணைக் கடலாம் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தாங்கள் யார்? என்ன பிரச்சினை என கேட்க, அந்த அம்மையார் என் பெயர் சய்யிதா பீபீ நஸீபா. என் தந்தை ஹஜ்ரத் அபூசாலிஹ் (ரஹ்) என்று கூறி ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜிலானி (ரஹ்) அவர்களின் சகோதரி என கூறிவிட்டு, என் சகோதரர் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அப்துல் காதிர் (ரலி) உலகறிந்த விலாயத் வேந்தர். என் சகோதரிடம் சென்று என் பிரச்சினையை முறையிட்டேன். அல்லாஹ்வின் நாட்டப்படி அவனருளால் ஆலமெல்லாம் அருள் பாலிக்கிறீர்களே, என் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்க அருள் பாலிக்க கூடாதா? என கேட்டேன். ஆண்டவனின் விதிப்பேழையில் இருப்பதைச் சொல்கிறேன் சகோதரி... உமக்கு குழந்தை பாக்யமுண்டு. ஆனால், அது அற்புதங்கள் செய்யும் சையத் பதிஉத்தின் எனும் திருநாமமுடைய அல்லாஹ்வின் நேசரின் துஆவினால் கிடைக்க வேண்டுமென்பது விதி. அன்னவர்கள் வெகுவிரைவில் நமதூர் வர உள்ளார்கள் என சோபனம் சொன்னார்கள். தாங்களும் வந்துவிட்டீர்கள். தங்களின் அருள் பெற நானும் வந்துவிட்டேன்.

அவனிக்கே அருள் செய்யும் ஆண்டகை ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களின் சகோதரி அவர்களுக்கு விலாயத்தின் அச்சாணியாகத் திகழும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின்

துஆ மூலம் மழைலப் பேறு கிட்ட வேண்டும் என்பது அல்லாஹ் ரப்பில் ஆலமீனின் நாட்டம்.

ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள், தூய அம்மையே! ஒன்றல்ல, அல்லாஹ் தங்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளை தருவான். அவர்களில் ஒருவர் சன்மார்க்கத்தை பரப்பவே வருவார். அவரை என் வசம் ஒப்படைக்க வேண்டும் இதுதான் நியதி.

நிச்சயமாக நான் ஒரு மகனை தங்களிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதி அளிக்கிறேன் என்கிறார் ஹஜ்ரத் பீபீ நஸீபா அவர்கள். பின் பல நாட்கள் பாக்தாத் ஷரீஃபில் தங்கியிருந்து விட்டு மீண்டும் இந்தியத் திருநாடு திரும்புகிறார்கள்.

ஹஜ்ரத் சையதினா கௌதுல் அஃலம் (ரலி) அன்னவர்களின் சகோதரிகள் யார் யார் என்பது பற்றி பல வரலாற்று குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. இது குறித்து இதன் உர்து மூல நூலாசிரியர் ஹஜ்ரத் சையத் மஹ்ஜர் அலி வகாரீ மதாரி அவர்கள் ஒரு பெரிய வரலாற்றையே ஆய்வு நடத்தியுள்ளார்கள். அதாவது ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களுக்கு ஹஜ்ரத் ஆயிஷா என்று ஒரு சகோதரியே என சிலரும். ஹஜ்ரத் பீபீ நஸீபா, ஹஜ்ரத் பீபீ ஜைனப் என இரு சகோதரிகள் இருந்ததாக சிலரும் குறிப்பிட்டுள்ளனர். இரு சகோதரிகளின் பெயரும் ஜலிய்யா, ருகைய்யா எனவும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆக, பல சகோதரிகள் இருந்திருக்கவும் வாய்ப்புண்டு. சிலரே பல பெயர்களில் குறிப்பிடப்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. மேற்கண்ட சம்பவம் நடந்தது பீபீ நஸீபா அவர்கள் விடயத்தில் என்பதை பல்வேறு ஆதாரங்களுடன் உர்து மூல நூலாசிரியர்கள் நிரூபணம் செய்துள்ளார்கள்.

### ஹஜ்ரத் பீபீ நஸீபாவின் இரு மகன்கள் :

மௌலானா ஃபஸீஹ் அக்மல் காதிரி தமது 'சீரத் குத்பே ஆலம்' எனும் நூலில் எழுதுகிறார்கள். ஹஜ்ரத் பீபீ நஸீபா (ரஹ்) தமது சகோதரர் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களிடம் குழந்தைப்பேறு வேண்டி துஆ செய்யுங்கள் என முறையிட, அன்னவர்கள் அப்போது ஹஜ்ரத் ஷாஹ் மதார் ஆலம் (ரலி) அவர்களின் துஆ பரக்கத்தினால் கிடைக்கும் என கூற பிறகவர்கள்



ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் துஆ பரக்கத்தினால் சையத் முஹம்மது, சையத் அஹ்மத் ஆகிய இரு ஆண் மக்களைப் பெற்றார்கள்.

'குலாசத்துல் மதாரிய்யா' எனும் நூலில் வருகிறது: ஹஜ்ரத் ஷாஹ் குத்புல் மதார் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டு காலத்தில் அரபுலகத்தில் பயணித்தவாறு பாக்தாத் ஷரீப் வருகை புரிந்தார்கள். அப்போது ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களும் ஹஜ்ரத் ஷாஹ் குத்புல் மதார் (ரலி) அவர்களும் (இரண்டு ஆன்மீகச் சூரியன்களும்) சந்தித்துக் கொள்கிறார்கள். எனினும் அவ்விருவரும் என்னவெல்லாம் பேசிக் கொண்டார்கள் என்பது பற்றி கூறப்படவில்லை. ஆனால், இருவரும் சந்தித்துக் கொண்டபோது ஒருவிதமான இனம்புரியாத நிலை இருந்தது என குறிப்பிடப்படுகிறது. அல்லாஹ்வின் நேசர்களிடமிருந்து நாம் அறிய வேண்டியவற்றைவிட உணர வேண்டியதுதான் அதிகம். அத்தகைய மெய்ஞ்ஞான உணர்வுகளால்தான் அல்லாஹ்வின் நேசர்களின் மகத்துவத்தை உணர முடியும். உணர்வற்ற அறிவாளிகளிடம் நாம் பேச ஒன்றுமில்லை.

'சமரத்துல் குத்ஸி' எனும் நூலில் வருகிறது: பிறகு மற்றொரு முறை ஹஜ் பயணத்தை முடித்து ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் மீண்டும் பாக்தாத் செல்ல ஹஜ்ரத் பீபீ நஸீபா அவர்கள் குழந்தைகளின் மீதுள்ள பாசத்தால் வாக்குறுதி தவறி அதன்பின் சில நிகழ்வுகள் நடந்தேறி தம் மகனாரை ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். பிறகு அவர்களை அழைத்துக்கொண்டு இஸ்தான்புல் சென்றார்கள். அவர்களை மார்க்கம் பயில ஹஜ்ரத் அப்துல்லாஹ் ரூமி (ரஹ்) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அதன்பின் அவர்களும் அங்கு சில காலம் தங்கி பிறகு குராஸான் வந்தடைந்தார்கள்.

ஹஜ்ரத் பீபீ நஸீபா அவர்களின் மகனார் சையத் முஹம்மது அவர்கள் சையத் முஹம்மது ஜமாலுத்தீன் ஜானே மன் ஜன்னத்தீ எனப்படுவார்கள். மற்றொரு மகனார் சையத் அஹமது அவர்கள் சையத் அஹ்மது பாதியா(ப்)பா எனப்படுகிறார்கள். இந்த இரண்டாமவரின் தர்கா ஷரீப் மேவ் மாவட்டத்தில் கல்வாபன் எனும்

ஊரில் மிகப் பிரபலம் வாய்ந்தது. ஷேர் ஷாஹ் சூரி எனப்படும் ஃபரீத்கான் எனும் இந்திய மன்னர் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அன்னவர்களின் தர்கா ஷரீபை அழகுற வடிவமைத்தார். அம்மன்னரின் மகளார் மாபானு அவர்கள் தம் வாழ்நாள் முழுக்க ஹஜ்ரத் சையத் அஹமத் பாதியாபா (ரஹ்) அவர்களின் சிஷ்யையாகவே காலம் கழித்தார். அவர்களின் அடக்கஸ்தலமும் அங்கேயே உள்ளது.

தத்கிரா சையத் அஹ்மத் பாதியாயி எனும் பாரசீக கிரந்தத்தில் வருவதாவது:- ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள் ஹஜ்ரத் சையத் அஹமத் பாதியாபா (ரலி) அவர்களின் கையைப் பிடித்து சையத் ஷாஹ் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கிறார்கள். சமர்கந்த் வழியாக அன்னவர்கள் இந்தியா திரும்பும் போது அவர்களிடம் உண்ணவோ குடிக்கவோ எதுவும் இல்லை. இரு வாரங்கள் இப்படியே கடக்கிறது. ஹஜ்ரத் பாதியாபா (ரலி) அவர்களுக்கு கடும் பசி. துவண்டு போகிறார்கள். அதைக் கண்ணுற்ற குத்புல் மதார் அவர்கள் ஹஜ்ரத் பாதியாபா அவர்களிடம்... மேற்கு நோக்கி நடப்பீர், அங்கு ஓர் ஆறு வரும். அதன்கீழ் ஒருவர் நம் நண்பர்களுக்காக உணவோடு காத்திருப்பார். அவரிடம் செல்வீர். அந்த உணவில் உம் பெயர் உள்ளது. அவர் உமக்கு உணவு வழங்குவார். பிஸ்மி கூறி உண்பீர். அல்லாஹ்வுக்கு நன்றி கூறுவீர். உம் கரத்தால் உம் முகம் தடவுவீர். பிறகு அவரிடம் நீர் எனக்கு ஏழு நபர்களின் உணவை அளித்தாய். அதற்கு பகரமாக அல்லாஹ் உமக்கு ஏழு பிராந்தியங்களின் இராஜ்ஜியத்தை தருவான். அதேபோல சென்றார்கள். இவர்களை கண்ட அவன்... இவர் பல நாள் பட்டினி கிடப்பது போல் தெரிகிறது. இவருக்கு உணவளித்து விட்டு நாம் ஒரு நேரம் பட்டினி கிடப்பதால் ஒன்றும் நேர்ந்து விடாது என நினைத்து உணவளித்தார். அவர்களும் சாப்பிட்டுவிட்டு தம் முர்ஷித் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் சொன்னதைச் சொன்னார்கள்.

**மண்ணில் புதைந்த சிலை :**

பாக்தாத் ஷரீபிலிருந்து இந்தியா திரும்பிய ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அன்னவர்கள் நைஷாபூரில் தங்குகிறார்கள். அங்கு ஒரு காஃபிர் சிலை செய்து அதற்கு விலை உயர்ந்த ஆடை,



ஆபரணங்கள் அணிவித்து மக்கள் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அச்சிலை மீது ஒரு முள்ளை எடுத்து குத்தும்படி ஹஜ்ரத் அப்துல்லாஹ் மிஸ்ரீ (ரஹ்) அவர்களிடம் ரகசியமாக கூறினார்கள். அவர்களும் யாருக்கும் தெரியாமல் ஒரு முள்ளை எடுத்து குத்திவிட்டு நகர்ந்து கொண்டார்கள்.

அச்சிலை பயங்கரமாக ஓலமிட்டவாறு அப்படியே மண்ணில் புதைந்துபோனது. காஃபிர்கள் பயங்கரமாக கூச்சல் போட்டனர். அந்த முஸ்லீம், சிலை அருகில் போய் வந்தார். அதன்பிறகு தான் சிலை பூமிக்குள் புதைந்து போனது அவரை சும்மா விடக்கூடாது என ஒரு பெருங்கூட்டமே கிளம்பி ஹஜ்ரத் பெருந்தகையிடம் வந்து அந்த ஆளை எங்களிடம் ஒப்படையுங்கள். அவர் தான் ஏதோ சூனியம் செய்து எங்கள் கடவுளை மறைத்துவிட்டார். அவரை நாங்கள் சும்மா விடமாட்டோம் என கூச்சலிட்டனர்.

அதற்கவர்கள் அமைதியாக, தன்னைக்கூட காப்பாற்றிக் கொள்ள இயலாத கற்சிலை உங்களைக் காப்பாற்றும் என நம்புகிறீர்களா? என கேட்டார்கள். இக்கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. ஆனால், அவர்களின் சினம் மேலும் அதிகமாயிற்று. அவர்களின் மனம் கல்லாகிப் போனதை உணர்ந்த ஹஜ்ரத் குத்புல்மதார் (ரலி) அக்கல்மனங்களைக் கரைக்க தம் முகத்திரையை நீக்கினார்கள். என் இறைவன் பிறரால் உருவாக்கப்பட்டவனல்ல. பிற யாவற்றையும் படைப்பவன். அவனுடைய சாதாரண அடியான் நான். நீங்கள் காண்பது அவனுடைய சக்திதான் என்றார்கள். கண்டு கட்டுண்டு போனார்கள் காஃபிர்கள். தம் சீடர்களிடம் தக்பீர் சொல்ல சொன்னவுடன் அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் செவியறைகளைத் தட்ட உணர்வு பெற்றனர் காஃபிர்கள். அனைவரும் "லாயிலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமாவை சொல்லி ஈமான் கொண்டார்கள்.

ஒருமுறை கடலோரம் குத்புல் மதார் அவர்கள் தங்கியிருந்த போது இச்சம்பவம் நடக்கிறது. ஒருபெரும் வணிகரின் சரக்கேற்றி வந்த கப்பல் கடலில் மூழ்கியது. அவர் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் வந்து மன்றாடி நிற்கிறார். அன்னவர்கள் தம் திருக்கரத்தால் ஒரு பிடி மண் எடுத்து இதை கடலில் கொண்டு போய்

போடுவீர் எனக் கொடுத்தனுப்பினார்கள். அவரும் அவ்வாறு செய்தார். மூழ்கிய கப்பல் அப்படியே மேலே வந்தது. அதிலிருந்து சரக்குகளும் சேதாரமின்றி கரை சேர்ந்தது. இதில் துணுக்குற்ற அவர் தம் சொந்த பந்தங்களோடு வந்து ஹஜ்ரத் ஷாஹ் மதார் ஆலம் (ரலி) அவர்களின் திருச்சந்நிதானத்தில் யாவரும் இஸ்லாத்தை ஏற்று சிறப்புற்றனர்.

### காபூல் நகரில்:

இவ்வாறு அன்று மக்கள் வாழ்ந்த பெரும் பகுதிக்கும் பயணம் செய்து தூய சன்மார்க்கத்தைப் பரப்பிய ஹஜ்ரத் ஷாஹ் மதார் ஆலம் (ரலி) அன்னவர்கள் ஒருமுறை ஹஜ்ஜிலிருந்து திரும்பி வரும்போது ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலிலும் கொஞ்ச காலம் தங்கியருந்தார்கள்.

வலியுல்லாஹ் அவர்களுடன் இருந்த சீடர்கள் தம் தேவைக்காக அங்குள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்க செல்லும்போது அங்குள்ள மக்களால் தடுக்கப்படுகிறார்கள். சீடர்கள் ஹஜ்ரத் ஷாஹ் மதார் (ரலி) அவர்களிடம் வந்து அம்மக்கள் நடந்து கொண்ட கீழ்த்தரமான நடைமுறைகளையெல்லாம் எடுத்துச் சொல்கிறார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் ஜலாலிய்யத் நிலையில் ... "கிணறருகே போய் தண்ணீரே! உன்னை ஹஜ்ரத் ஹுசைன் (ரலி) அவர்களின் தருப்போர் ஹஜ்ரத் பதிஉத்தீன் அழைக்கிறார் என கூறுங்கள் " என சொல்லி அனுப்புகிறார்கள். சீடர்கள் கிணறருகே சென்று இதைச் சொன்னதும் கிணற்றிலிருந்து நீர் பொங்கி பிரவாகமெடுத்து காட்டாற்று வெள்ளம்போல ஹஜ்ரத் பெருந்தகை அவர்கள் இருக்கும் இடம் நோக்கிச் செல்கிறது. இதைக் கண்ட அம்மக்கள் மிரண்டு போய் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் முன் கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்கிறார்கள். கருணைக் கடல் அல்லவா குத்புல் மதார் (ரலி). தம்மை துன்புறுத்தியவர்களையும் மன்னிக்கும கண்மணி நாயகம்(ஸல்) அவர்களின் திருப்பேரரல்லவா? மன்னிக்கிறார்கள். மனந்திருந்திய மக்கள் முஸ்லீமாகிறார்கள். நீரும் கிணறு திரும்பியது.

### நேபாளம் :



ஆப்கானிஸ்தான்காபூலில் சிறிது காலம்இருந்துவிட்டு இந்தியா திரும்பி நேபாளம் வருகிறார்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி). நேபாளத்தில் அன்னவர்கள் தங்கியிருந்த மலை இன்றும் மதாரிய்யா மலை என அழைக்கப்படுகிறது. அங்கிருந்து சிறிது தொலைவில் சீன தேச எல்லை உள்ளது. அங்கிருந்து சீன தேசம் சென்று சன்மார்க்க அழைப்புப் பணி செய்துள்ளார்கள்.

அதன்பின் இந்தியா வந்த குத்புல் மதார் அவர்கள் பேலிபட், ராம்பூர், பரேலவி, முராதாபாத் போன்ற ஊர்களுக்கு பயணம் செய்து காஃபிர்களை இஸ்லாத்தின்பால் அழைக்கின்ற பணியினை தொடர்ந்து மேற்கொள்கிறார்கள். பிறகு குஜராத் வந்தடைந்து அங்கிருந்து அடுத்த ஹஜ் பயணம் கிளம்புகிறார்கள். ஜித்தாவிலும் ஹஜ்ரத் ஷாஹ் மதார் ஆலம் (ரலி) அவர்கள் சில்லாஹ் இருந்த இடம் தற்போதும் காண முடியும்.

### மீண்டும் பாக்தாத்தில் ஓர் அற்புதம்

மதினா ஜியாரத் முடித்து மீண்டும் ஈராக் வந்தடைகிறார்கள். பாக்தாதில் தங்கியிருந்த நேரம் ஒருநாள் ஹஜ்ரத் சய்யிதா பீபீ நஸீபா அவர்கள் தம் மகனார் சையது முஹம்து அவர்களின் சடலத்தோடு ஹஜ்ரத் அவர்களின் முன் பெருந்துயருடன் கண்ணீர் மல்க வந்து நிற்கிறார்கள். ஆம்... விளையாடிக் கொண்டிருந்த ஹஜ்ரத் சையது முஹம்மது திடீரென மயங்கி விழுந்தார். அதன்பின் அவர் உடலில் உயிரில்லை. அன்னவர்களின் சடலத்தை அருகே கொண்டு வரச் சொல்லி, "முஹம்மது ஜமாலுத்தீன் ஜானே மன் ஜன்னத்தீ! அல்லாஹ்வின் கட்டளை! எழுவாய்!!" என்கிறார்கள். "அஷ்ஹது அன்லாயிலாஹ" கலிமாவை கூறியபடி எழுந்தமர்ந்தார்கள். பிறகு ஹஜ்ரத் பீபீ நஸீபா (ரலி) தம் இரு மகன்களையும் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடமே சன்மார்க்க சேவைக்காக ஒப்புவித்தார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு இஸ்தான்புல் சென்றார்கள் என்பதையும் முன்பே பார்த்தோம்.

இவர்களில் ஹஜ்ரத் சையத் அஹமது பாதியாபா அவர்கள் குறித்து நாம் முன்பே குறிப்பிட்டோம். ஹஜ்ரத் சையத் முஹம்மது அவர்கள் ஜமாலுத்தீன் ஜானே மன் ஜன்னத்தீ ஜமீல் ஷாஹ் தாதா

எனும் பெயரில் இந்தியாவில் மிகப் பிரபலமாக அறியப்பட்ட வலியுல்லாஹ். அவர்கள் சில்லாஹ் இருந்த இடங்களையும் இன்னும் பல ஊர்களில் பார்க்கலாம். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் ஹஜ்ரத் முஹம்மது, ஹஜ்ரத் சையத் அஹமது இவர்களுடன் மேலும் இருவர்கள் ஹஜ்ரத் சையத் ருக்னுத்தீன், சையத் ஷம்சுத்தீன் சகோதரர்கள் ஆகியோரையும் அழைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் ஹஜ்ரத் பீபீ நஸீபா அவர்களின் சகோதரர் பிள்ளைகள் எனப்படுகிறது. இச்சகோதரர்கள் ஹஸன் அரப் எனும் பெயரில் குறிப்பிடப்படுவதுண்டு. இவர்களின் தர்கா ஷரீப் கான்பூர் மாவட்டத்தில் கோஜேபூரில் உள்ளது. இது மக்கன்பூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பதீஉல் அஜாயிப் எனும் நூலில் இச்சகோதரர்களின் தந்தை பெயர் ஹஜ்ரத் சையத் முஹம்மது எஹ்யா என உள்ளது.

**மேவாத்தில் திருப்பணி :**

மேவாத்தில் பல மாதங்கள் தங்கி தீன்பணி செய்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் முஸ்லீம்களானார்கள். இன்று வரையும் மேவாத் முஸ்லீம்கள் சில்சிலா மதாரிய்யாவில் பைஅத் பெறுவதைக் காண முடியும். அத்தோடு தம் பல நேர்ச்சைகள் போன்ற காரியங்களை மக்கன்பூரில் நிறைவேற்றுவதை பார்க்க முடியும். மேவாத்தில் ஹஜ்ரத் பெருந்தகை குத்புல் மதார் (ரலி) அவர்கள் சில்லா இருந்த 10 இடங்களை இன்றும் காணலாம்.

துல்ஃபிகார் பதீஊ எனும் நூலில் வருகிறது. மேவாத் ராஜாஸ்ரீயின் வம்சத்தின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. நமது குத்புல் மதார் அவர்கள் பலமுறை மேவாத் சென்றிருக்கிறார்கள்.

**ஹஜ்ரத் பாபா ரத்தன் பின் சாஹுக் (ரலி)**

ஒருமுறை மேவாத்தில் இருந்து பட்டன்டா வந்தபோது ஹஜ்ரத் பாபா ரத்தன் பின் சாஹுக் (ரலி) அவர்கள் வருகை புரிவதை அறிந்து அவர்களை குத்புல் மதார் அவர்கள் சந்தித்தார்கள். ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்கள் குறித்து மாறுபட்ட சில தகவல்கள் உள்ளன. எனினும் அவர்கள் பெருமானார் (ஸல்) அன்னவர்களை அன்னவர்களின் உலக வாழ்வின்போதே கண்டு



ஈமான் கொண்ட ஸஹாபி எனப்படுகிறது. ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) கிட்டத்தட் 600 வயது வரை வாழ்ந்துள்ளார்கள்.

மதார் அஃஜமி எனும் நூலில் ஹஜ்ரத் ஹகீம் ஃபரீத் அஹ்மத் அப்பாஸி நக்ஷபந்தீ முஜத்ததீ எழுதியிருக்கிறார்கள். ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்கள் சிகந்தர் என்பவர்களின் மகனாவார். சிலர் அவர்களின்தந்தை பெயர் நஸ்ர், பாட்டனார் பெயர் கிர்பால் என்றும் கூறியுள்ளனர். இவர்கள் நீண்ட காலமாக தனிமையில் யாருக்கும் தெரியாமல் இருந்துள்ளனர். ஹிஜ்ரி 6ம் நூற்றாண்டில் தான் வெளி உலகிற்கு வந்தார்கள். அவர்கள் சஹாபி என அவர்களின் மக்கள் மஹ்மூத் மற்றும் அப்துல்லாஹ் கூறியுள்ளார்கள். எனினும் மக்கள் பலர்அதை ஏற்கவில்லை.

**முஅர்சிக் ஷம்சுத்தீன் முஹம்மத் பின் இப்ராஹிம் ஜஸ்தீயின் வரலாற்று நூலில் வருகிறது:** நான் நஜீப் அப்துல் வாஹித் பின் இஸ்மாயில் ஃபார்ஸி சூஃபி அவர்கள் மிஸ்ரிலிருந்தபோது கூறக் கேட்டேன். ஹிஜ்ரி 675ல் ஷேரோஜில் ஒரு முதியவர் இருந்தார். அவர் பெயர் மஹ்மூத். அவரது தந்தை பாபா ரத்தன். தன் தந்தை அவர்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய அற்புதமான நிலவின் பிளவை பார்த்தார்கள். எனவே அரபு நாடு பயணித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்து இஞ்சியைஅன்பளிப்பாக அளித்தார்கள். பெருமானார் (ஸல்) அன்னவர்களை கண்டு ரத்தன் பாபா ஈமான் கொண்டார்கள். அன்னவர்களின் முதுகில் தம் பொற்கரம் வைத்து நீண்ட ஆயுளுக்காக துஆ செய்தார்கள். அப்போது ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்களின் வயது 100. பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து விடைபெற்று இந்தியா திரும்பினார்கள். ஹிஜ்ரி 632 வரை வாழ்ந்தார்ள். (மதாரே ஆஜம் பக்கம் 107).

**மதாரே ஆஜம் நூலாசிரியர் கூறுகிறார்கள் :** தமக்கு காஜி முஈனுத்தீன் அப்துல்முஹ்லான் பின் காஜி ஜலாலுதீன் அப்துல்லாஹ் பின் ஷாம் ஹிஜ்ரி 737ல் இச்செய்தியை காஜி நூருத்தீன் கூறியதாக சொல்கிறார்கள். தம் பாட்டனார் ஹுசைன் பின் முஹம்மது அவர்கள் கூறியதாக காஜி நூருத்தீன் கூறுகிறார்கள். எனக்கு அப்போது 17 வயது. நான் என் தந்தை மற்றும் சிறிய தந்தையோடு வியாபார நிமித்தமாக இந்தியா

சென்றோம். நாங்கள் ஓர் ஊரை அடைந்தபோது அங்கு ஹஜ்ரத் ஷைக் ரத்தன் இருப்பதாக சொன்னார்கள். அங்கு ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் நிழலில் பலர் அமர்ந்திருந்தனர். நாங்கள் அங்கு சென்றபோது எங்களை வரவேற்று அமரச் செய்தனர். அம்மரத்தில் ஓர் கூடை தொங்கிக் கொண்டிருந்தது. அதில் என்ன உள்ளது? எனக் கேட்டோம். ஹஜ்ரத் ஷைக் ரத்தன் அதில் இருப்பதாக கூறினார்கள். அவர்கள் கண்மணி நாயகம் ரசூல் (ஸல்) அன்னவர்களைக் கண்டு ஈமான் கொண்டவர்கள். அவர்களின் நீண்ட ஆயுளுக்காக 6 முறை துஆ செய்ததினால் 600 ஆண்டுகள் வாழ்ந்திருப்பதை புரிந்து கொள்ளலாம்.

அவர்களை நாங்கள் தரிசிக்க வேண்டுமே! என எங்கள் அவாவை வெளிப்படுத்தினோம். அப்போது ஓர் வயோதிகர் எழுந்து அக்கூடையை இறக்கினார். அக்கூடை பஞ்சால் நிரப்பப்பட்டிருந்தது. நடுவில் ஹஜ்ரத் ஷைக் ரத்தன் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் அப்பெரியவர் "தாதா இவர்கள் குராஸினிலிருந்து வந்துள்ளார்கள். இவர்கள் பெருமானாரின் வம்சத்தினர். தங்களிடம் பேச விரும்புகின்றார்" என காதில் சொன்னார். நீண்ட பெருமூச்சுவிட்ட ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) பாரசீக மொழியில் பேசலானார்கள். மிக மெல்லியதாக கீச் கீச் சென்று குரல் கேட்டது. எனினும் எங்களுக்கு தெளிவாக புரிந்தது. ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள், "நான் என் தந்தையுடன் அரபு நாடு பயணித்தேன். அப்போது நான் இளைஞன். நாங்கள் மக்கா அடைந்தபோது நல்ல மழை பெய்து எங்கும் நீர் நிரம்பி பாலை முழுதும் நீர் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது அங்கு ஓர் அழகிய சிறுவயது திருஉரு உடைய சீதேவியை கண்டோம். அவர்கள் ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் ஒட்டகம் ஒரு புறத்தில் இருந்தது. இடையில் நீர் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. நான் அவர்கள் அருகில் வந்து அவர்களை என் தோளில் சுமந்து அவர்களின் ஒட்டகத்தின் அருகில் விட்டேன். அவர்கள் யாரென்று அப்போது எனக்கு தெரியாது. ஓர் மனிதருக்கு உதவி செய்யக்கூடிய எண்ணத்தில்தான் அதை செய்தேன் அவர்கள் அரபி மொழியில், "பாரக்கல்லாஹு ஃபீஉமரிக" (அல்லாஹ் உம் ஆயுளில் பரக்கத்



செய்வானாக!) என 3 முறை கூறினார்கள். பிறகு நாங்கள் எங்கள் வியாபாரத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினோம். நீண்ட நாட்களுக்குப் பின் ஓர்நாள் இரவு நாங்கள் வெளிமுற்றத்தில் அமர்ந்திருந்தபோது, முழு நிலா விண்ணில் ஒளி வீசிக் கொண்டிருக்க கண்டோம். திடீரென சந்திரன் இரண்டாகப் பிளந்து ஒரு பகுதி கிழக்கில், மறு பகுதி மேற்கில் போனது. பிறகு இரண்டும் ஒன்றானது. எங்களுக்கு பயங்கர அதிசயம். ஏன் இப்படி நடந்தது? என ஒன்றும் புரியவில்லை. பிறகு நாங்கள் வெளியூரிலிருந்து வரும் பயணிகளிடம் விசாரிக்கலானோம். கடைசியாக ஒரு சிலர் அதுபற்றி தெரிவித்தனர். மக்காவில் ஹாஷிம் கிளையில் தோன்றிய ஒருவர் தான் நபி என்கிறார்கள் நான் முழு உலக வழிகாட்டியாக அனுப்பப்பட்டுள்ளேன் என்கிறார்கள். நீங்கள் நிலவைப் பிளந்து காட்டினால் நாங்கள் உங்களை நம்புகிறோம் என மக்காவாசிகள் கூறவே அவர்கள் அவ்வாறு அற்புதம் நிகழ்த்தி உள்ளார்கள் என கூறினார்கள்.

இதைக் கேட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அன்னவர்களை காண வேண்டுமெனறு அவா உண்டாகி நாங்கள் மக்கா பயணித்தோம். அன்னவர்களின் இல்லத்தில் சந்தித்தபோது முகம் ஜொலித்துக் கொண்டிருந்தது. நாங்கள் சலாம் கூறினோம். அன்னவர்கள் பதில் சொல்லி புன்னகை தவழ வரவேற்றார்கள். அன்னவர்களின் தோழர்களும் மரியாதையுடன் அமர்ந்திருந்ததைக் கண்டு எங்களுக்கு அச்சமும் மதிப்பும் மரியாதையும் அன்னவர்கள் மீது உண்டானது. ஆகவே தூரமாக அமர நினைத்தேன். அன்னலார் என்னை அருகில் அமரும்டி கூறினார்கள். தம் பொற்கரத்தாலேயே பேரீத்தங் கனிகளை எடுத்து எனக்கும் பிற தோழர்களுக்கும் உண்ண கொடுத்தார்கள். பிறகு அருட்பார்வையுடன் என்னிடம், என்னைத் தெரிகிறதா? என கேட்டார்கள். இல்லை யாரசூலுல்லாஹ் என பதில் கூற, அன்றொரு மாலைப் பொழுதில் உம் தோளில் சுமந்து என் ஒட்டகத்தின் அருகில் விட்டீரே! ஞாபகம் உள்ளதா? என கேட்க நான் உற்று நோக்கினேன். நிறைய பருவ மாற்றம் எனவே என்னால் பார்த்த உடன் கண்டறிய முடியவில்லை. உற்று நோக்கிய பின்தான் தெரிந்தது.

பிறகு தம் திருக்கரங்கள் நீட்டி என் கரங்களோடு முஸாபஹா செய்து கலிமா ஷஹாதத் கூறச் சொல்லி நாங்கள் கூறினோம். பிறகு நான் கிளம்பிய போது "பாரக்கல்லாஹு ஃபீ உமரிக" என அன்று கூறியது போலவே மும்முறை கூறினார்கள். (மொத்தம் 6 முறை ஆகிவிட்டது) ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) இவ்வுலகில் 600 ஆண்டு காலம் வாழ்ந்தது, ஹஜ்ரத் (ஸல்) அன்னவர்கள் 6 முறை அல்லாஹ் உம் ஆயுளில் பரக்கத் செய்வானாக! என கூறியதால்தான் என்பது புரிகிறதா?

பிறகு நான் பெருமானார் (ஸல்) அன்னவர்களிடமிருந்து விடைபெற்றேன். அந்த ஒவ்வொரு முறை துஆவினாலும் 100 ஆண்டுகள் வாழ்ந்தேன். 600 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. இந்த ஊரில் இருக்கும் அனைவருமே என் வம்சம்தான். எனக்கு அல்லாஹ் எல்லா வளத்தையும் தந்துள்ளான். இது யாவும் அன்னலாரின் துஆவின் பரக்கத்தான். ஹஜ்ரத் காஜா பாபா ரத்தன் (ரலி) அவர்களின் தர்கா ஷரீப் பட்யாலாவிற்குட்பட்ட பட்டான்டா அருகிலுள்ள ஹாஜி ரத்தன் எனுமிடத்தில் உள்ளது. மக்கள் இன்றும் அவர்களின் பரக்கத் பெற்றுக் கொள்கிறார்கள்.

இந்தியாவுடன் தொடர்புடைய நபித்தோழர்களின் பட்டியலில் ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்களையும் குறிப்பிட்டு 28.12.2001ல் வெளியான இன்குலாப் செய்தியில் மவ்லானா கவ்சர் நியாஸி எழுதியுள்ளார்கள். ஹஜ்ரத் பதீஉத்தீன் குத்புல் மதார் (ரலி), ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்களை நேரடியாக சந்தித்துள்ளதால் அவர்களை சஹாபியைக் கண்ட தாபிஈ எனப்படுவதுண்டு.

ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்கள் 600 ஆண்டுகள் வாழ்ந்தது பெருமானார் (ஸல்) அன்னவர்களின் முஃஜிஸா எனும் அற்புதமென்றால் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் 596 வயது வரை வாழ்ந்தது கராமத் எனும் அற்புதமாகும். ஏனெனில் பெருமானார் (ஸல்) அன்னவர்களின் உம்மத்துக்கு கொடுக்கப்பட்ட ஆயுட்காலம் அதற்கு முந்தைய சமூகத்தாரை விடக் குறைவானது என்பதை நாமறிவோம். ஹஜ்ரத் ஆதம் (அலை), ஹஜ்ரத் நூஹ் (அலை) போன்ற ஆதி காலத்தவர்கள் 1000 ஆண்டுகள் உலகில்



வாழ்ந்ததையும் பிறகு அப்படியே குறைந்து ஹஜ்ரத் மூசா (அலை) கால மக்கள் 500, 600 ஆண்டுகள் வாழ்ந்ததையும் பிறகு அப்படியே குறைந்து ஹஜ்ரத் ஈசா (அலை) காலத்தார் 200, 300 ஆண்டுகள் வாழ்ந்ததையும் பிறகு அப்படியே குறைந்து இறுதிக்கால மக்களான நாம் 100 ஆண்டுகள் வாழ்வதென்பதே பெரிய விஷயம். நமக்கு 60 முதல் 70க்குள் தான் என்பதையும் நாமறிந்துள்ளோம். இதைத் தாண்டி ஹஜ்ரத் சல்மான் ஃபார்மஸி (ரலி) அவர்கள் 350 ஆண்டுகள் வரையும் ஹஜ்ரத் ஹாரிஸா பின் அப்துல் கலபீ (ரஹ்) 500 ஆண்டுகள் வரையும் வாழ்ந்ததும், கராமத்தான். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்), ஹஜ்ரத் பாபா ரத்தன் (ரலி) அவர்களுக்கு கிலாபத் வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

**மேவாத்தின் திருடர்கள் :**

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் மேவாத்தின் சியாஹ்கோஹ் (கருப்பு மலை) அருகில் தங்கினார்கள். 52 பேர் கொண்ட திருடர் கூட்டம் அவர்களையும் அவர்களது சகாக்களையும் சுற்றி வளைத்தது. அல்லாஹ்வின் வலி அவர்களிடமோ அவர்களின் சகாக்களிடமோ அல்லாஹ்வின் திக்ரை தவிர வேறெந்த செல்வமும் இருக்காது என்பது அந்த திருடர் கூட்டத்திற்கு தெரிய வாய்ப்பில்லை தானே? தேடி ஒன்றும் கிடைக்காத விரக்தியில் திருடர்கள் திரும்பவே அவர்களின் பார்வை தெரியாமல் போனது. அவர்கள் அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாயினர்.

எனக்கு எதுவும் தெரியவில்லையே என்று ஒருவருக்கொருவர் மாறி மாறிப் புலம்ப ஆரம்பித்தனர் யாவரும் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் மன்னிப்பு வேண்டி நின்றனர். நீங்கள் தவ்பா செய்து திருந்துங்கள். இனிமேல் திருடமாட்டோம் என வாக்குறுதி தாருங்கள் என்றார்கள். தவ்பா செய்து வாக்களித்தனர். பிறகு தம் புனித உமிழ்நீரை அவர்களின் கண்களில் தடவ அனைவரும் பார்வை திரும்ப பெற்றனர் அனைவரும் இஸ்லாத்தை தழுவி அன்னவர்களின் முரீதுகளாகி அன்னவர்களின் பாசறையில் பயின்று பயிற்சி பெற்று அந் 52 பேரும் அல்லாஹ்வின் பொருத்தத்தினைப் பெற்று ஹஜ்ரத் மதார்

ஆலம் (ரஹ்) அவர்கள் அவர்களில் பலருக்கு கிலாஃபத் வழங்கி சிறப்பித்தார்கள்.

அந்த கூட்டத்தல் ஒருவர்தான் சவ்ஹர் சதா. இவர்களின் பெயரை இஸ்லாம் நபி என ஹஜ்ரத் மதாரீ ஆலம் (ரஹ்) மாற்றி சூட்டினார்கள். இவர்கள் பெரிய அற்புதம் நிகழ்த்தும் வலியாக உள்ளார்கள். இன்றும் மேவாத்தில் ஆண்டுதோறும் இவர்களின் உரூஸ் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்பின் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அன்னவர்கள் ஜபல்பூரில் இருந்து அஜ்மீர் பயணமானார்கள். பின் இராஜஸ்தானிலிருந்து மத்திய பிரதேசம் சென்றார்கள். மந்த்சூரில் அவர்கள் தங்கியிருந்த இடம் இன்னும் அன்னவர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது. இராஜஸ்தானில் பிரதாப் கடா-விலும் அவர்கள் தங்கியிருந்த சில்லா ஷரீப் உள்ளது.

மத்திய பிரதேசத்திலிருந்து மஹாராஷ்டிரா வந்து அங்கும்பல ஊர்களில் தங்கி சன்மார்க்கத்தை காஃபிர்களிடம் எடுத்தோதி மெய்யான தீன் சேவையில் ஈடுபட்டார்கள். மும்பையிலும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சில்லா ஷரீப் உள்ளது. அங்கிருந்து ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு வரையும் வந்துள்ளார்கள். பங்களாதேஷ், நேபாளம் பாகிஸ்தான், சைனா உட்பட அன்றைய ஆசியாக் கண்டத்தில் அவர்கள் பயணம் செய்யாத இடமே இல்லை எனலாம். குறிப்பாக இந்தியாவில் உண்மையான தப்லீக் செய்வதற்கு அனுப்பப்பட்டதால் இந்தியாவின் பெரும்பகுதி மண்ணில் அனைவர்களின் திருப்பாதம் படாமல் இல்லை.

**மன்னர் ஃபைரோஜ் :** ரிசாலா அவ்லியாவில் வருகிறது! மன்னர் ஃபைரோஜ் ஷாஹ் அவர்களும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் பைஅத் பெற்றுள்ளார்கள். அவரோடு சேர்ந்து ஆயிரக்கணக்கான மக்களும் முரீதாகி உள்ளார்கள். தில்லியிலிருந்து அவர்கள் கிளம்பும்போது ஆயிரக்கணக்கான ஆஷிக்கீன்களும் அவர்களுடன் சன்மார்க்க பணி செய்ய தயாராக வந்துவிட்டார்கள். அதில் சிலரை மட்டும் தம்முடன் வர அனுமதித்த ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் பலரையும் வீட்டுக்கு திரும்பிச் செல்லும்படி கூற, அவர்களுக்கு மனம் வரவில்லை. உடனே தம் முகத்திரை நீக்கினார்கள். அனைவரும் தன்நிலை மறந்து போயினர். நீண்ட நேரத்திற்கு பின்னரே உணர்வுற்றனர்.



பிறகவர்களை வீட்டிற்கு திருப்பி அனுப்பினார்கள். குத்புல் மதார் அவர்கள் தம்மோடு வர சம்மதித்த சிலரில் மந்திரி இலாஹ் தாதா கானும் ஒருவர். அவர் தனது சொத்து, செல்வங்களையெல்லாம் ஏழை, எளியேஸருக்கு தந்து விட்டு ஹஜ்ரத் பெருந்தகை அவர்களோடு ஃபக்கீராக கிளம்பிவிட்டார். கடைசி வரை ஹஜ்ரத் அவர்களுடனேயே இருந்தார்கள்.

**மீர் சத்ர் ஜஹானின் கோரிக்கை :** பல ஊர்கள் கடந்து காலபீ அடைந்தார்கள். அப்போது மீர்சத்ர் ஜஹான் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. அதில் தங்களின் எண்ணற்ற அடிமைகளில் ஒருவனாகி விடவே ஆசை. ஆனால், ஜோன்பூர் மன்னர் சுல்தான் இப்ராஹீம் ஷர்கீ என்னிடம் மந்திரிப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால் என்னால் தங்களிடம் வர இயலவில்லை. தாங்கள் உத்தரவிட்டால் என் பதவியை ராஜினாமா செய்துவிட்டு உடனே புறப்பட்டு வந்துவிடுகிறேன் என எழுதியிருந்தார்கள்.

அதற்கு நம் குத்புல் மதார் (ரலி) அவர்கள், ''நம்மை இந்தியா அனுப்பும்போதே நம் முரீதுகள் யார், யார் என்ற பட்டியலும் நம்மிடம் கொடுக்கப்பட்டு விட்டது. அதில் தங்கள் பெயரும் உள்ளது. தாங்கள் நிம்மதியாக தங்கள் பணியை செய்து வாருங்கள். நாம் விரைவில் சந்திப்போம்'' என எழுதி அனுப்பினார்கள். இக்கடிதம் கண்ட ஆனந்தத்தில் ஹஜ்ரத் மீர் சத்ர் அவர்கள் அதிகமான சதகா செய்தார்கள்.

தாரீக் ஷர்கிய்யா வ சூஃபிய்யா ஜோன்பூர் எனும் நூலில் வருகிறது: ஹஜ்ரத் மீர் சத்ர் அவர்கள் செங்கிஸ்கானின் குழப்பத்தால் மனம் நொந்து பதவியை விட்டு வெளியேறி தில்லி வந்து குடியமர்ந்து விட்டார்கள். அவர்களுக்கிருந்த மெய்ஞானத் தேடல் அவர்களை ஹஜ்ரத் மக்தூம் சையத் மீர் அஷ்ரஃப் ஜஹாங்கீர் சம்னானி (ரஹ்) அவர்களிடம் கொண்டு வந்து நிறுத்தியது. அவர்களோ உம் பங்கு இங்கு இல்லை. கூடிய விரைவில் அதிசயமிகு ஒரு குத்பு இங்கு வருகை புரிவார்கள். அவர்கள்தான் உம் ஷைக். உம்மை அரபுலகில் இருந்து இந்தியா கொணரும்படி நமக்கு உத்தரவிடப்பட்டது. அதை நாம்

செய்துவிட்டோம் என்று கூறி ஹஜ்ஜுக்கு புறப்பட்டு விட்டார்கள். ஹஜ்ஜிலிருந்து திரும்பிய ஹஜ்ரத் மக்தூம் சையத் அஷ்ரப் ஜஹாங்கீர் (ரஹ்) அவர்கள் உமது ஷெய்கு காலபில் தங்கி உள்ளார்கள் என சுபச் செய்தி கூறினார்கள்.

எனினும் காலபீ காதிர்ஷாஹ் துக்ளக்கின் ஆட்சியின் கீழ் இருந்தது. அவருக்கும் ஜோன்பூர் மன்னர் இப்ராஹீம் அவர்களுக்குமிடையில் மனஸ்தாபம் இருந்ததால் நேரடியாக காலபீ செல்ல முடியாமல் கடிதம் அனுப்பினார்கள். ஹஜ்ரத் மீர சத்ர் மல்பூஜாத் ஷாஹ் மீனாவில் வருகிறது. ஹஜ்ரத் சுல்தானும் ஆரிஃபீன் சையத் பதிஉத்தீன் ஷாஹ் மதார் ஆலம் (ரஹ்) ஜோன்பூர் வந்தார்கள்.

அப்போது ஜும்ஆவில் கலந்து கொள்ளவில்லை. மன்னர் இப்ராஹீம் சில ஆலிம்களை ஹஜ்ரத் அவர்களிடம் அனுப்பி, "தாங்கள் ஜும் ஆவில் கலந்து கொண்டால் மக்கள் மிக்க பயனடைவாரே" என வேண்டிக் கொண்டார். வந்த ஆலிம் இடம் ஹஜ்ரத் அவர்கள், நான் கூறுவதை ஒரு வார்த்தையும் கூடுதல் குறைவின்றி அப்படியே அவர்களிடம் கூற வேண்டும். அவர்கள் கூறுவதையும் அவ்வாறே என்னிடம் கூற வேண்டும். கூறி பிறகு சொன்னார்கள்... ஜும்ஆ 3 நபர்கள் மீது கடமையில்லை. இதை அப்படியே மன்னரிடம் கூற அம்மூவர் யார்? என கேட்டனுப்பினார்கள். 1. முஸாஃபிர் (பயணி), 2. பெண், 3. குலாம் (அடிமை) என பதில் கூறி அனுப்பினார்கள். அம்மூவரில் தாங்கள் யார்? என மன்னர் கேட்க, நான் முஸாஃபிர் என பதில் கூறினார்கள். பின் முஸாஃபிர் யார்? எனக் கேட்க இதற்கு ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தன் முசல்லாவை விரித்து ஏறி நின்றார்கள். மின்னல் வேகத்தில் பறந்தார்கள். ஜோன்பூரிலிருந்து லக்னோவிற்குச் சென்று திரும்பினார்கள். பிறகு இவர் தான் முஸாஃபிர் என்று கூறி அனுப்பினார்கள்.

காலபீயில் ஆயிரக்கணக்கான நபர்கள் ஹஜ்ரத் அவர்களில் கரம்பிடித்து முஸ்லீம்களாக, முரீதுகளாக ஆனார்கள். அவர்களில் சிலருக்கு கிலாஃபத்தும் வழங்கினார்கள். அவர்களில் ஹஜ்ரத் சையதினா மௌலானா ஷைக் ஃபூலாத் மதாரீ (ரஹ்) அவர்களும்



ஒருவர். இவர்கள் காலபீ காரர். இவர்களின் மஜார் ஷரீப் மக்கன்பூரிலுள்ளது. ஹஜ்ரத் சைக் பக்காரீ மஜ்தூப் மதாரீ (ரஹ்) அவர்களும் ஒருவர். இவர்களின் மஜ்தூப் மதாரீ (ரஹ்) அவர்களும் ஒருவர் இவர்களின் மஜார் ஷரீப் கானுாஜில் உள்ளது. மேலும் ஹஜ்ரத் ஷைக் முஹம்மது இல்யாஸ் மதாரீ (ரஹ்) அவர்களும் ஒருவர். எந்த இடத்தில் அவர்கள் தங்க முடிவெடுக்கிறார்களோ அங்கே அவர்கள் தங்க ஒரு அறை கட்டப்படும். மேலும் அவர்களின் கலீபாக்கள் 1442 பேர் உட்பட கிட்டத்தட்ட 1,24,000 முரீதுகள் அவர்கள் உடன் தங்கி இருப்பார்கள் என ரிசாலா இல்யாவில் வருகிறது. காலபீயில் தங்கி இருந்தபோதும் தம் அறையில் சில்லா இருக்க ஆரம்பித்தார்கள். ஜின்னின் அரசர் அமாதுல் மாலிக் பணிவிடைக்காக வாசலில் நின்று கொண்டார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் காலபியில் தங்கியிருந்தார்கள். அவர்களின் வாழ்வியல் அரசர் முதல் ஆண்டிவரை அனைவரையும் கவரும் வண்ணமிருந்தது.

அப்போது காலபீயின் ஆட்சி மன்னராக இருந்த காதிர்ஷாஹ் இப்னு மஹ்மூத் இருந்தார். அவர் ஹஜ்ரத் அவர்களின் மாண்பறிந்து அவர்களை சந்திக்க வந்தார். எனினும் அவர் வந்த நேரம் குத்புல் மதார் அவரகள் தனிமையில் சில்லா இருந்த சமயம். எனவே அவர்களது முரீதுகள், தற்போது சந்திக்க இயலாது என கூற, இதைக் கேட்ட மன்னரின் ஆட்கள் மன்னரிடம் வேறு விதமாக கூற, மன்னர் கோபப்பட்டு உங்கள் பீர்சாஹிபை இங்கிருந்து உடன் கிளம்ப சொல்லுங்கள் என கூறி போய்விட்டார். இதை கேள்வியுற்ற குத்புல் மதார் அவர்கள் 3 நாட்கள் காத்திருங்கள் என கூறி பின்னர் போய் மன்னர் நிலை என்ன? என விசாரிக்க சொன்னார்கள். மன்னர் கோபமடைந்து போனதுமே அவரது உடலில் கொப்புளங்கள் உண்டாகி வலியால் மிக அவஸ்தைப்பட்டு தன் அரண்மனையில் நிலை கொள்ள முடியாமல் காடு, மலைகளில் ஓடிப்போய் மரணித்தார் என வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்.

12 ஆண்டுகள் ஜோன்பூரில் தங்கி தீன் பணி செய்துள்ளார்கள், ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள். மேலும் அன்னவர்கள் நொடிப்பொழுதில் எங்கும் ஆஜராகக் கூடிய

கராமத்துடைய வலி என பார்த்தோம். அதேபோல ஒரே நேரத்தில் பல இடங்களிலும் ஆஜராகக் கூடிய கராமத்தும் பெற்று திகழ்ந்தார்கள். எனவேதான் அவர்கள் ஒரே சமயம் பல இடங்களில் இருந்துள்ளதை அறிய வரும்போது வரலாற்று ஆசிரியர்கள் அதனை மறுக்கவில்லை. அதேபோல அவர்கள் சில்லா இருந்த இடங்களையும் இவ்வளவுதான் என கணக்கிட இயலவில்லை.

**ஹஜ்ரத் மீர் சத்ர் பைஅத் ஆகுதல் :** ஹஜ்ரத் மீர் சத்ரி (ரஹ்) ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களுக்கு கடிதம் அனுப்பியதையும் அதற்கவர்கள் பதில் அனுப்பியதையும் பார்த்தோம். இப்போது அவர்கள் பைஅத் பெறும் நிகழ்ச்சிக்கு வருவோம். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் தாம் சந்திப்பதாக சொன்னபடியே ஜோன்பூர் வந்து தங்கியருந்த நேரம் ஹஜ்ரத் மீர் சத்ர் (ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களை வந்து சந்திக்கிறார்கள். பைஅத் பெறுகிறார்கள். முரீதாகிறார்கள். "என் முரீதாவீர்" என்று கடிதம் கண்டதற்கே லட்சக்கணக்கில் தர்மம் செய்தவர்களாயிற்றே? முரீதான மகிழ்ச்சியிலும் லட்சோப லட்சம் சதகா செய்தார்கள் ஹஜ்ரத் மீர் சத்ர் மதாரீ (ரஹ்). 'முரீதான ஹஜ்ரத்' அவர்களிடம் இருந்து மென்மேலும் புடம் போட்ட பொன்னாகி அன்னவர்களின் கலீஃபாவாகவும் ஆனார்கள்.

வரலாற்றில் வருகிறது... ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அன்னவர்களை சந்திக்க ஹஜ்ரத் சையத் மீர் சத்ர் (ரஹ்) அவர்கள் நுழைந்தபோது ... வகை வகையான உணவு, இறைச்சியின் வாசனை எனக்கு ஒவ்வாமல் உள்ளது. எனினும் உம் மனதில் உள்ள முஹப்பத் என்னை ஈர்க்கிறது என குத்புல் மதார் (ரஹ்) கூறுகிறார்கள். இவ்வாறு கூறி தம் முகத்திரையை நீக்கவே கண்டு தன்நிலை மறந்து அன்னவர்களின் பாதடி விழுந்து கிடந்தார்கள். அவர்களின் நெற்றியில் அன்போடு முத்திட்டு சுயநினைவு உண்டாக்கி தன்னை சந்திக்க காத்துக் கிடந்த மக்களை சந்திக்கலானார்கள்.

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களைக் காண 1 இலட்சம் பேர் வழிமேல் விழிவைத்து காத்திருந்தனர். தம் முகத்திரையை அப்புறப்படுத்தவும் ஹஜ்ரத் குத்புல் மதார் திருமுகத்தில் ஒளிரும்



விலாயத் ஜோதிகண்டு மக்கள் யாவரும் தன்நிலை மறந்து சுஜூதில் விழுந்தனர். பொதுவாகவே யார் என்ன பிரச்சினையில் இருந்தாலும் சரி, ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களைக் கண்டால் உடனே பிரச்சினை நீங்கி மனம் நிம்மதியடைந்ததை உணர்வார்கள்.

அன்றும் அது நிகழ்ந்தது. அதன்பின் ஹஜ்ரத் மீர்சத்ர் மதாரீ அவர்கள் தம் பதவியை துறந்துவிட்டு ஹஜ்ரத் அவர்கள் கூடவே வந்துவிட நினைத்தார்கள். ஆனால் "அல்லாஹ் தங்கள் மூலம் மக்கள் பயன்பெறும் பொருட்டு இந்த மந்திரி பதவியை தங்களுக்கு அளித்துள்ளார்கள். ஆகவே தாங்கள் தங்கள் பதவியை தொடருங்கள்" எனக் கூறிவிட்டார்கள்.

சியருல் மதார் எனும் நூலில் வருகிறது. ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் ஜோன்பூரில் இருந்தபோது முந்தானவர்களில் காஜி ஷிஹாபுத்தின் குத்வாயீ (ரஹ்) அவர்களும் ஒருவர்.

**மனிதன் நாயான நிகழ்ச்சி :** ஹஜ்ரத் சையதினா மதார் ஆலம் (ரஹ்) ஜோன்பூரில் இருந்தபோது அவர்களின் சீடர் ஒருவருக்கும் அங்கிருந்த காஃபிர் ஒருவருக்கும் பிரச்சினை உண்டாகி காஃபிர் இறந்துவிட்டார். அக்காஃபிரின் சடலத்தை மன்னர் இப்ராஹிம் முன் கொண்டுபோய் வைத்து அவரது ஆட்கள் முறையிட. ஹஜ்ரத் அவர்களின் சீடரை அழைத்து மன்னர் விசாரித்தார். அதற்கவர்கள், அது வெறிபிடித்த நாய். அவ்வெறிநாயைத் தான் நான் கொன்றேன். நீங்களே பாருங்கள் என்றார்கள். பிரேதத்தை மூடியிருந்த துணியை எடுத்துப் பார்க்கும்போது அங்கே மனிதப் பிரேதம் இல்லை. ஒரு நாய் தான் செத்துக் கிடந்தது. மன்னர் அதிர்ந்தார்.

அவாரிஃபுல் மஆரிஃப் : ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் ஜோண்பூரில் தங்கியிருந்த போதும் எத்தனையோ நபர்கள் அன்னவர்களின் அருளாசி பெற்றனர். அதைக் கணக்கிட இயலாது. அதில் சிலரைத் தான் வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. அவர்களில் ஒருவர் தாம் ஹஜ்ரத் மீர் ஹுசைன் மஅஜ்பல்கீ (ரஹ்), குத்புல் மதார் (ரஹ்) அவர்களைக் காண பீகாரிலிருந்து ஜோன்பூர் வந்தபோது ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்)

அவர்கள் அறைக்குள் தனிமையில் திக்ரில் ஈடுபட்டிருந்தார்கள். ஆகவே வந்தவர்கள் வெளியில் மக்களோடு மக்களாக அமர்ந்து கொண்டார்கள். அறையிலிருந்து அழைப்பு வந்தது. நான் ஹுசைனுக்காகத்தான் காத்திருந்தேன்; அவர் உள்ளே வரட்டும். ஹுசைன் என்ற பெயரில் பலரும் இருந்தனர். அனைவரும் எழுந்தனர். உடனே ஹுசைன் மஅஜ் உள்ளே வரவும் என அழைப்பு வந்தது.

ஹஜ்ரத் மஅஜ் அறைக்குள் நுழைந்ததும் அருகில் அமரும் என்றார்கள். அமர்ந்தார்கள். தாங்கள் தவ்ஹீதின் கடல். தாங்கள் இன்னும் அருகில் அமர வேண்டும் என்றார்கள். மிக அருகில் அமர்ந்து ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் திருமுகத்தில் இலங்கும் பேரொளி கண்டு பக்திப் பிரகாசமெடுத்து பரிவசத்தில் கவிபாடத் தொடங்கினார்கள். தன்னிலை மறந்து அண்ணலின் கால்பணிந்து விழுந்தார்கள்.

பிறகு ஹஜ்ரத் குத்புல் மதார் பதிஉத்தின் (ரஹ்) அவர்களிடம் தாங்கள் எனக்கு "அவாரிஃபுல் மஆரிஃப்" கிரந்தத்தைப் படித்து கொடுக்க வேண்டும் என வேண்டி நின்றார்கள். இது அவர்களது நீண்ட நாள் கனவு. நீண்ட நாட்களுக்கு முன்பே ஹஜ்ரத் ஷர்புத்தின் யஹ்யா முனீரி (ரஹ்) அவர்களிடம் இதைக் கோரிய போது, "அதை நீர் ஹஜ்ரத் அலி (ரலி) ஹஜ்ரத் இமாம் மஹ்தி (ரலி) போன்றோரிடம் ஞானப்பயிற்சி பெற்ற ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் படிக்கப் போகிறீர்; ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று" என சுபச் செய்தி சொன்னார்கள்.

அதை ஹஜ்ரத் ஹுசைன் மஅஜ் (ரஹ்) வாசிப்பார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் விளக்கம் சொல்வார்கள். அதைக்கேட்டு ஜதபு - பரவச நிலைக்குப் போய்விடுவார்கள். ஒவ்வொரு வாசகத்தையும் படித்து அதன் விளக்கம் கேட்கும் போதெல்லாம் இப்படியே நடக்கும். இருவரும் இறை தத்துவத்தின் இன்பக் கடலில் மூழ்கி, மூழ்கி அவாரிஃபுல் மஆரிபை முடித்தார்கள்.

**ஹஜ்ரத் ஷாஹ் மீனா ரஹ்மத்துல்லாஹி அலைஹி :**

மல்பூஜாத் ஹஜ்ஷ் ஷைக் மீனா எனும் நூல், பக்கம் 213 -இல்



வருவதாவது, ஹஜ்ரத் சுல்தானுல் ஆரிபீன் பதீஉத்தீன் ஷாஹ் மதார் கத்தஸல்லாஹு அஜீஸ் அவர்கள் ஜோண்பூரிலிருந்து லக்னோ வந்தபோது ஒருவரின் மனைவி 4 மாத காலமாக நோய்ப் படுக்கையில் கிடந்துள்ளார். தன் மனைவி மீது மிகுந்த நேசமுடைய அவர் மிகுந்த துயரில் ஆழ்ந்தார். மருத்துவர்கள் கை விரித்தனர். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் லக்னோ வந்திருப்பதை அறிந்து, அன்னவர்களைத் தேடி ஓடோடி வந்தார். தன் மனைவி சுகம் பெற துஆச் செய்யும்படி வேண்டினார்.

அதற்கு குத்புல் மதார் அவர்கள் இப்பகுதியின் வலியாக நாம் ஷாஹ் மீனா அவர்களை நியமித்துள்ளோம். அவர்களிடம் செல் என்றார்கள். அப்போதெல்லாம் ஹஜ்ரத் ஷாஹ் மீனா (ரஹ்) அவ்வளவு பிரபலமில்லை. அவர்கள் யார்? எங்குள்ளார்கள்? எனக் கேட்டார். ஷைக் கவாமுத்தீன் (ரஹ்) அவர்களின் ரவ்ழாவில் உள்ளார்கள் என்று கூறி தம் தலையணை ஒன்றையும் முஸல்லா ஒன்றையும் காஜி ஷிஹாபுத்தீன் (ரஹ்) அவர்களிடம் கொடுத்து அவர்களையும் உடன் அனுப்பினார்கள்.

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) கூறிய அடையாளங்களை வைத்து ஹஜ்ரத் ஷாஹ் மீனா (ரஹ்) அவர்களை அடையாளங் கண்டு அவர்களிடம் போய் தம் ஷைகு நாயகம் கூறியதை எடுத்துரைத்து தம் ஷைகு நாயகத்தின் அன்பளிப்புகளையும் கொடுத்தார்கள். ஹஜ்ரத் ஷிஹாபுத்தீன் (ரஹ்) தாங்கள் இருக்க நான் எப்படி துஆச் செய்ய? தாங்கள் துஆச் செய்யுங்கள். நான் ஆமீன் கூறுகிறேன் என்றார்கள். இல்லையில்லை, அப்பெண் நலம் பெறுவது தங்கள் துஆவின் பொருட்டால்தான் என ஷைகு நாயகம் சொல்லியுள்ளார்கள். தாங்கள் துஆக் கேளுங்கள். நான் ஆமீன கூறுகிறேன் என்றார்கள் அவர்கள்.

பிறகு உளு செய்து ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் கொடுத்தனுப்பிய முஸல்லாவை விவரித்து மரியாதை நிமித்தமாக அதில் பாதம் வைக்காமல் வெளியே பாதம் வைத்து தொழ முற்பட தாங்கள் அல்லாஹ்வின் நெருக்கம் பெற்ற சீதேவி. தாங்கள் முசல்லாவில் தங்கள் திருப்பாதம் வைத்தே தொழுங்கள் என ஹஜ்ரத் ஷிஹாபுத்தீன் (ரஹ்) கூற, பிறகு அவ்விதமே தொழுது துஆ செய்தார்கள். அப்பெண்மணி பூரண நலம் பெற்றார்.

அப்பொழுது ஹஜ்ரத் காஜி ஷிஹாபுத்தீன் (ரஹ்) கைதட்டி மக்களை அழைத்து கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலுமுள்ள யாவரும் வாரீர். ஹஜ்ரத் ஷாஹ் மீனா (ரஹ்) திருப்பாதம் தொட்டு முத்தமிடுவீர். இப்பகுதியின் விலாயத் வேந்தர் இவர்கள்தான் கேளீர் என்றார்கள். அன்றுமுதல் அப்பகுதி மக்கள் குத்பே ஆலம் ஹஜ்ரத் மீனா (ரஹ்) அவர்களை பின்பற்றி வருகிறார்கள்.

**குத்புடைய தரஜா குறித்து குத்புல் அக்தாப் சையதினா முஹ்யித்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :** குத்பாகிறவர் 16 ஆலத்தில் சஞ்சரிக்கும் வல்லமை மிக்கவர். அதின் ஒரு ஆலம் (பிரபஞ்சம்) ஏழு வானம், ஏழு பூமியைவிட மிகப்பெரியது. அதுவே குத்புல் அக்தாவின் தகுதி யாதெனில் அவர்கள் தாம் நினைப்பவரை விலாயத்தின் எந்த ஸ்தானத்திலும் உயர்த்தவும் முடியும்; இறக்கவும் முடியும். இது அல்லாஹ் ரப்புல் ஆலமின் தன் வலிமார்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்து, அதிகாரம். இத்தகைய அந்தஸ்தில் உள்ளவர்கள் தான் ஹஜ்ரத் சையதினா முஹ்யித்தின் ஆண்டகை, ஹஜ்ரத் சையதினா மதார் ஆலம் போன்றோர்.

பதிஉல் அஜாயில் எனும் நூலில் வருகிறது. ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) தம் கலிஃபாக்களுடன் குராஸான் சென்றிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் கலிஃபா ஜானே மன்ஜன்னத்தி எனப்படும் ஹஜ்ரத் சையத் ஜமாலுத்தீன் (ரஹ்) ஊருக்குள் போயிருந்த போது குராஸானின் குத்பாக இருந்த ஹஜ்ரத் நசீருத்தீன் அவர்களைச் சந்தித்தனர்.

அப்போது தாங்கள் இவ்வூரின் குத்பாகத் திகழ்கிறீர்கள். குத்புகளுக்கெல்லாம் குத்பாகத் திகழும் ஹஜ்ரத் ஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்கள் ஊருக்கு விஜயம் செய்ததை அறியவில்லையா? தாங்கள் அவர்களை வந்து சந்திக்க செல்லுங்கள் என்றார்கள். அதற்கவரோ... நான் உன்னைப் போல் பல பைத்தியங்களைப் பார்த்திருக்கிறேன். போய் உன் வேலையைப் பார் என கோபத்தோடு சொல்லிவிட்டார். அவர் சொன்னதை அப்படியே தம் குருநாதர் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் கூறிவிட்டார்கள்.



நஸீருத்தீன் பேசிய வார்த்தைக்காக நான் அவரது கராமத்தை (தகுதியை) பறித்துவிட்டேன் என்றார்கள்.

தாம் தகுதி இழந்ததை உணர்ந்த ஹஜ்ரத் நஸீருத்தீன், ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் ஓடோடி வந்து மன்னிப்பு கேட்டார். நீர் ஹஜ்ரத் ஜானே மன்ஜன்னத்தீ அவர்களிடம் மன்னிப்புக்கேளும். அவர்கள் மன்னித்தால் தான் உன் தகுதியை திரும்பப் பெறுவீர் என்றார்கள். இவர்களும் மன்னிப்பு கேட்டார்கள். அவர்களும் மன்னித்துவிட்டார்கள். ஹஜ்ரத் நஸீருத்தீன் (ரஹ்) இழந்த குத்பு பதவியை மீண்டும் பெற்றார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் பைஅத் பெற்று மேன்மேலும் அந்தஸ்து பெற்றார்கள். லக்னோவிலிருந்து கத்வர் வந்தடைந்தார்கள்.

**ஹஜ்ரத் காஜி மஹ்மூத் மதாரி கன்தூரி :** மதார் ஆஜம் எனும் நூலில் வருகிறது. ஒருமுறை ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் கத்வரின் மஸ்ஜிதில் தங்கியிருந்தபோது தொழுகை நேரம் வந்தவுடன் தம் சீடர்களோடு ஜமாஅத்தாக தொழுதுவிட்டார்கள். இரண்டாவதாக ஜமாஅத் நடத்துவது மக்ரூஹ் என்பது அவர்களின் கொள்கை. அவர்கள் வரும்முன் ஜமாஅத் நடந்துவிட்டதைக் கண்டு கோபம் வந்தது. தாங்கள் ஏன் நாங்கள் (ஊர் ஜமாஅத்) வரும் முன் தொழ வைத்தீர்கள்? எனக் கேட்டார்கள். தொழுகையை ஆரம்ப வக்திலேயே தொழுவது தானே சிறந்தது என ஹதீஸில் வந்துள்ளது. ஏன் தாமதமாக வந்தீர்கள் என திரும்பிக் கேட்டார்கள். ஆனபோதும் அவர் கேட்கத் தயாராக இல்லை. தாங்கள் கூறுவது குர்ஆனுக்கே முரண் என பேச ஆரம்பித்தார். சரி குர்ஆன் ஷரீபை எடுத்து வந்து உமது ஆதார வசனத்தைக் காட்டும் என்றார்கள். காஜி மஹ்மூத் குர்ஆன் ஷரீபை எடுத்து வந்து ஆதாரம் காட்டத் திறந்தார்கள். வெறும் காகிதங்கள் தான் இருந்தது. எழுத்துக்களைக் காணவில்லை. திகைத்தார்கள். தங்களின் பெயரென்ன? என அடக்கத்தோடு பவ்யமாக கேட்டார்கள். இந்த ஃபக்கீரை பதீஉத்தின் என்பார்கள் என்றார்கள்.

மற்றொரு ரிவாயத்தில் காஜி சாஹிப் பெரிய வலியுல்லாஹ் அவர்கள் வந்திருப்பதாக கேள்விப்பட்டு அவர்களிடம் தம் மாணாக்கர்களோடு வந்து சோதிக்கும் பொருட்டு சில கேள்விகள்

கேட்டதாகவும் இதற்கெல்லாம் பதில் குர்ஆன் ஷரீபில் உள்ளதே. தாங்கள் பாருங்கள் என ஹஜ்ரத் அவர்கள் கூறியதாகவும் காஜி சாஹிப் குர்ஆனைத் திறந்து பார்க்க எல்லாம் வெள்ளைக் காகிதங்களாக மட்டும் தென்பட, அவர் திகைத்துப் போகவே ஹஜ்ரத் அவர்கள் தம் முகத்திரை நீக்க அப்போரொளியைக் கண்டு காஜி சாஹிப் அவர்களும் அவர்களது மாணவர்களும் தம் சுயநிலை இழந்து போய் பிறகு சுயநிலைக்கு வந்தபோது தங்களின் திருப்பெயர் என்ன என கேட்டதாகவும் வந்துள்ளது. ஹஜ்ரத் அவர்களின் திருப்பெயரைக் கேட்டதும் தான் காஜி சாஹிப் அவர்களுக்கு ஷைக் அபுல்ஃபதஹ் ஷத்தாரி ஜோன்பூரி (ரஹ்) அவர்கள் செய்த உபதேசம் நினைவுக்கு வந்தது. அதாவது காஜி மஹ்மூத் சாஹிப் சிறுபிள்ளையாய் இருந்தபோது அவரது தந்தை ஷைக் ஹமீது அவர்கள் ஷைக் அபுல்ஃபதஹ் தம் தொப்பியை காஜி மஹ்மூத் சாஹிபின் தலையில் வைக்க அவர்கள் எடுத்துவிட மீண்டும் வைக்க, மீண்டும் எடுத்துவிட, மீண்டும் வைக்க என் மும்முறை இவ்வாறு நிகழ்ந்தது. அப்போது ஷைக் அபுல் ஃபதஹ் முன் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தோன்றி திருக்காட்சி வழங்கினார்கள்.

இதன் தாத்பரியம் யாதெனில் இவர் நம் மூலம் முரீதாகி தம் காலத்தின் குத்பாக மிளிர்வார் என்று சோபனம் கூறி மறைந்தார்கள். இதனை ஷைக் அபுல் ஃபதஹ் காஜி மஹ்மூத் அவர்களின் தந்தையார் கூற... அந்த ஷைகு நாயகத்தின் பெயரென்ன? என கேட்டார்கள். அவர்கள் தான் ஹஜ்ரத் சையத் பதிஉத்தீன் என்றார்கள்.

இந்நிகழ்ச்சி நினைவுக்கு வரவே... ஷைகு நாயகமே! எனக்கு பைஅத் - தீட்சை அருளுங்கள் என்று வேண்டி நின்றார்கள். காஜி மஹ்மூத் சாஹிப் அப்போது ஹஜ்ரத் ஷைக் குத்புல் மதார் (ரலி) கூறினார்கள். உமது வெளியரங்க அறிவு, அந்தரங்க ஞானம் பெற தடையாக உள்ளது. முதலில் அதை இழந்து வாரும் என்றார்கள். ஷைகு நாயகமே! அதை எப்படி இழப்பது? எனக் கேட்டார்கள்.



ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) தம் புனித உமிழ்நீரை காஜி சாஹிபின் உதட்டில் தடவினார்கள். அது தொண்டைக்குள் இறங்கியபோது புறம் இருண்டு அகம் ஒளிர்ந்தது. பிறகு 3ஆம் நாள் அவர்களுக்கு பைஅத் எனும் ஞானதீட்சை வழங்கினார்கள். தம் ஷைகு நாயகத்தின் அருளைப் பெறப் பெற சிறிது நாட்களிலேயே ஆன்மிகப் பாட்டையில் மகத்தான ஸ்தானத்தைப் பெற்றார்கள். சில்சிலா மதாரிய்யாவின் மாணாக்கள் வழிப்பாட்டை ஹஜ்ரத் ஷைக் காஜி மஹ்மூத் (ரஹ்) அவர்களிடமிருந்து துவங்குகிறது.

நாம் சில்சிலா மதாரிய்யாவின் ஷைக்மார்கள் குறித்து பேசி வருகையில் ஒரு விஷயத்தை சொல்ல வேண்டியது அவசியம் என தோன்றுகிறது. அதாவது சிலர் த்ரீக்கா அதாவது ஞான வழிபாட்டை அடிப்படையில் காதிரிய்யா, சிஷ்திய்யா, நக்ஷபந்தியா, தப்காத்தியா, சுஹரவர்த்தியா ஆகிய ஐந்து தான். மற்றவை இதன் கிளைகளே என நினைக்கின்றனர். அப்படியல்ல, 4 பீர் 14 கான்வாதாக்கள் உள்ளன. மேலும் ஷத்தாரிய்யா தரீக்காவை உருவாக்கிய ஹஜ்ரத் அப்துல்லாஹ் ஷத்தாரீ (ரஹ்) அவர்களும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களும் ஹஜ்ரத் பாயஜீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் ஞானப்பாட்டையில் இணைகிறார்கள். வித்தியாசம் என்னவெனில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் நேரடியாக ஹஜ்ரத் பாயஜீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிடம் பைஅத் பெற்றவர்கள். ஹஜ்ரத் பாயஜீத் (ரஹ்) அவர்களுக்கும் ஹஜ்ரத் அப்துல்லாஹ் ஷத்தாரீ (ரஹ்) அவர்களுக்கும் இடையில் ஏழு ஷைகுமார்கள் உள்ளார்கள்.

## காட்டம்பூரில்

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் பல பிரதேசங்கள், காடு, மலை, வனாந்திரங்களில் தங்கியவாறு காட்டாம்பூர் என்ற ஊருக்கு விஜயம் செய்கிறார்கள். காட்டாம்பூரின் ராஜா ஹஜ்ரத் அவர்களின் அற்புதங்கள் கண்டு அன்னவர்களின் அபிமானி ஆனார். தனக்கு குழந்தை பாக்கியமில்லை என முறையிட்டார். அல்லாஹுத் ஆலா உமக்கு இரு குழந்தைகளைத் தருவான் என சோபனம் சொன்னார்கள். அதேசமயம் இருவரில் ஒருவரை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார்கள். ராஜா

ஒப்புக்கொண்டார். ராஜாவின் இரு மனைவிகளும் கர்ப்பமுற்றனர். மறுமுறை ஹஜ்ரத் அவர்கள் காட்டாம்பூர் வந்தபோது, வாக்களித்தபடியே தம்மிரு புதல்வர்களில் ஒருவரை ராஜா ஒப்படைத்தார். அப்புதல்வருக்குப் பத்து வயதானபோது திடீரென அவர் அழ ஆரம்பித்தார். அழுதுகொண்டே இருந்தார். தம் பெற்றோர் ஞாபகமாக அழுகிறாரோ என பலரும் நினைத்தனர். ஆனால் அவரோ, என் தந்தை முஸ்லீமாக ஆகி இருந்தால் இந்த ராஜ்ஜியமே பலனடைந்திருக்குமே என வருந்தி அழுதார். கவலைப்படாதே அடுத்த ராஜா நீ தான் என்று அவருக்கும் சோபனம் கூறினார்கள். ஹஜ்ரத் அவர்கள் சொன்னபடியே அடுத்து அவர் ராஜாவின் வாரிசாக ராஜ மகுடம் சூட்டப்பட்டார்.

## குஜராத்தில் ஷைக் இல்யாஸ் :

காட்டாம்பூரில் இருந்து பல ஊர் பிரதேசங்கள் கடந்து ஹஜ்ரத் குத்புல் மதார் குஜராத் வந்தடைந்தார்கள். ஹஜ்ரத் அவர்களிடம் ஷைக் இல்யாஸ் (ரஹ்) அவர்கள் பைஅத் பெற்றார்கள்.

குல்ஜார் மதார் எனும் நூலில் வருகிறது. ஷைக் இல்யாஸ் குஜராத்தில் மிகப் பிரபலமான பெரிய வியாபாரி. ஒருமுறை அவர்கள் ஹஜ்ரத் கிள்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்திக்கிறார்கள். ஷைக் இல்யாஸ் எனக்கு 'இல்முல்லதுன்னீ' கற்றுத்தாருங்கள் என்கிறார்கள். (ஹஜ்ரத் கிளர் (அலை) அவர்களிடம் ஹஜ்ரத் மூசா (அலை) அவர்கள் கற்ற ஞானக் கல்வியை குர்ஆன் விளக்கத்தில் படித்திருப்பீர்கள். அதுதான் இல்முல்லதுன்னீ. அதற்கு ஹஜ்ரத் கிள்ர் (அலை) குஜராத்திற்கு ஒரு சம்பூரணத்துவம் மிக்க வலிய்யுல்லாஹ் வருவார்கள்; உமக்கு கற்றுக்கொடுப்பார்கள் என்று சுபச்செய்தி கூறியதோடு அதை கற்கும் முன் வெளியரங்க இல்மான ஷரீஅத்தை கற்றுத் தேர வேண்டும். நீர் முதலில் ஷரீஅத்தை கற்பீராக என கூறிச் சென்றார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஒரே வருடத்தில் ஷரீஅத் கல்வி கற்று மக்கள் ஷைகுல் இஸ்லாம் என மதிக்கப்படும் அளவுக்கு உயர்ந்தார்கள். அதன்பின் ஐந்து ஆண்டுகள் உருண்டோடின. பின் குஜராத்தில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் வந்ததை



அறிந்ததை ஹஜ்ரத் கிள்ர் (அலை) சொன்னதை அடையாளங்களை வைத்து தம் குருநாதர் இவர்கள்தான் எனக் கண்டுகொண்டார்கள். பெரும்பாலும் தம் ஷைகு நாயகத்தின் தர்பாரில் இருப்பார்கள். ஒருநாள் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் இந்த துன்யா அழியக்கூடாது. இந்த துன்யாவை விட்டுவிடுங்கள் என்றார்கள். சரி என்று கூறி வீட்டிற்கு போனபின் நாம் ஏன் உலக வருமானத்தை விடவேண்டும்? என்று நினைத்து ஹஜ்ரத் அவர்களின் தர்பாருக்கு வருவதையே நிறுத்திவிட்டார்கள்.

அவ்வளவுதான் ஷைக் இல்யாஸ் அவர்களுக்கு குஷ்ட நோய் பீடித்தது. தம் ஷைகு நாதரின் சங்கடத்தால்தான் இது நேர்ந்திருக்க வேண்டும். தாம் தம் ஷைகுவிடம் சரி எனக் கூறிவிட்டு, அதற்கு மாற்றம் புரிந்ததால் ஏற்பட்ட விளைவுதான் இது என்பதை புரிந்து கொண்டு ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடம் வந்து மன்னிப்பு கேட்டார்கள். ஹஜ்ரத் அவர்கள் மன்னித்தார்கள். குஷ்டம் நீங்கியது. பிறகு உலகப் பொருளீட்டலைத் துறந்துவிட்டு ஹஜ்ரத் அவர்களின் நிழலில் முழு தஞ்சமடைந்தார்கள். கடைசி வரை ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) உடனேயே இருந்து வஃபாத்தானார்கள். அவர்களின் மண்ணறையும் மக்கன்பூரிலேயே உள்ளது.

## ஏழாவது ஹஜ்

குஜராத்தின் பல பகுதிகளிலும் தங்கி மெய்தீன் பணி செய்து பல மலைகளில் சில்லாஹ் இருந்து பிறகு கம்பாத் வந்து சேர்ந்தார்கள். கம்பாத்தில் தங்கிய பின் ஏழாவது முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் பலமுறை கடல் மார்க்கமாகவும், பலமுறை தரை மார்க்கமாகவும் ஹஜ் செய்துள்ளது தெரிய வந்தாலும், எந்தெந்த ஆண்டுகளில் ஹஜ் செய்துள்ளார்கள் என்பேதா, மொத்தம் எத்தனை முறை ஹஜ் செய்துள்ளார்கள் என்பதோ உறுதியாகத் தெரிய வரவில்லை. ஏழு முறை ஹஜ் செய்திருப்பதை உறுதிசெய்ய முடிகிறது.

ஹஜ்ரத் குத்புல் ஹிந்த் கரீபே நாவாஸ், ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரலி) அன்னவர்கள் சிந்து நதியைக் கடந்து சென்றபோது உன்னை எத்தனை முஃபின்கள் இதுவரை

கடந்து சென்றுள்ளார்கள் என்று கேட்டதற்கு, சிந்து நதி கூறியதாம், (சிந்து நதி பேசியதா? என ஆச்சர்யப்படாதீர்கள். வலிமார்களுக்கு அல்லாஹ் அருளியுள்ள கராமத்தில் இதுவெல்லாம் சாதாரணம்) இதுவரை இரண்டு முஃமின்கள் என்னைக் கடந்து சென்றுள்ளனர். அதில் முதலாமவர் ஹஜ்ரத் சையத் பதீஉத்தீன் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி). அடுத்ததாக ஹஜ்ரத் ஜகரிய்யா முல்தானீ (ரஹ்). இப்போது மூன்றாவதாக என்னைக் கடக்கும் மூன்றாம் நபர் தாங்கள்தான் என்றதாம்.

ஹஜ்ரத் சையத் பதீஉத்தின் மதார் ஆலம் (ரஹ்) சிந்து நதி வழியாகவும் ஹஜ் பயணம் மேற்கொண்டுள்ளார்கள் என்பது தெரிய வருவதோடு, இங்கே இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும்.

சிந்து நதியை அதுவரை எத்தனையோ பல முஸ்லீம்கள் கடந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அனைவரையும் முஃமின் என சிந்து நதி கூறவில்லை. வலிமார்கள் மூவரை மட்டுமே முஃமின் என சிந்து அங்கீகரித்துள்ளது. ஆம் அல்லாஹ்வின் நேசர்கள்தான் சம்பூரணத்துவ ஈமானுடைய சீதேவிகள். அன்றி ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) தரை மார்க்கமாக பயணித்த பகுதிகளில் எல்லாம் அவர்கள் தங்கி (சில்லாஹ்) இருந்ததற்கான தடயங்கள், நினைவுச் சின்னங்கள் இன்றுவரை இருக்கத்தான் செய்கின்றன. ஏழாம் முறை ஹஜ் சென்றுவிட்டு ஈராக், ஈரான் வழியாக இந்தியா வந்தடைந்தார்கள்.

## ஈரானில் நடந்த நிகழ்ச்சி

ஒருமுறை ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தம் சீடர்களோடு ஈரான் நாட்டில் ஓர் வனாந்திரத்தில் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் ஓர் மனித மண்டை ஓடு கிடந்தது. அதைப் பார்த்து நீ யார்? எனக் கேட்டார்கள். அல்லாஹ் அதற்கு பேசும் ஆற்றலை தந்தான். அது தன்னை பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லி தான் இறந்து 12 வருடங்களாக வேதனை அனுபவித்துக் கொண்டிருப்பதாக கூறியது. இதைக்கேட்டு மனவேதனை அடைந்த குத்புல் மதார் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் இதற்கு உயிர் கொடுப்பாயாக என மன்றாடி



நின்றார்கள். உடன் அது உயிரும் பெற்றது. அதன்பின் ஹஜ்ரத் அவர்களின் சீடராகி சிறப்புற்றார். அதன்பிறகு 12 ஆண்டுகள் வாழ்ந்து மரணித்த அவருடைய தர்கா ஷரீப் ஈரானில் உள்ளது. இந்நிகழ்ச்சியின் காரணமாக ஜம்ஜமா உடைய தர்கா என்றே அது வழங்கப்படுகிறது. ஜம்ஜமா எனில் மண்டை ஓடு என பொருள்.

இந்நிகழ்ச்சி ஹஜ்ரத் அவர்கள் இறுதியாக ஹஜ்ஜுக்கு சென்ற போது நடந்தது. தொடர்ந்து பயணித்து மக்கா அடைந்து ஹஜ் செய்து விட்டு புனித ரவ்லா ஷரீபில் ஜியாரத் செய்த போதுதான் குத்புல் மதார் அவர்கள் கடைசியாகக் குடிகொண்டு கியாம நாள் வரை மக்களுக்கு அருள்பாலிக்கப் போகிற அந்த இடத்தை கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்கள் அறிவித்தார்கள்.

"தாங்கள் இந்தியா திரும்பி கனூஜை அடையுங்கள். கனூஜிலிருந்து தென்புறமாக சென்றால் ஒரு குளம் இருக்கும். நீர் நிரம்பி உள்ள குளத்திலிருந்து யாஅஜீஸ், யாஅஜீஸ் என சப்தம் வரும். தாங்கள் குளத்தை நெருங்கியதும், அதன் நீர் வற்றிவிடும். அதுதான் தாங்கள் இறுதியாக ஓய்வெடுக்கக் கூடிய இடம்" என அறிவித்தார்கள்.

## காஜி மஸ்ஊத்

அதன்பின் நஜஃப் வந்தார்கள். அதுகுறித்து காஜி மஸ்ஊத் தமது கஜினத்துல் அப்ரார் எனும் நூலில் எழுதுகிறார்கள். நான் சிறுவயதில் ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தேன். திடீரென கால் வழுக்கி ஆற்றுக்குள் விழுந்தேன். ஒளிவீசும் திருமுகம் உடைய ஓர் ஷைக் வந்து என்னைக் காப்பாற்றி கரை சேர்த்தார்கள். அது வேறு யாருமல்ல. என் ஷைகு ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களே. பிறகு நான் மௌலானா யஹ்யா (ரஹ்) அவர்களுடன் நஜஃப் வந்தடைந்தேன். நாங்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களை சந்தித்தோம். அப்போதுதான் என்னை சிறுவயதில் காப்பாற்றி கரைசேர்த்தவர்கள் தான் இனியும் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து காப்பாற்றி அல்லாஹ்வின் அருளில் சேர்க்க வந்த என் ஷைகு நாயகம் என்பதை புரிந்து கொண்டேன்.

எனக்கு பைஅத் - தீட்சை வழங்கினார்கள். 40 ஆண்டு காலம்

நான் அவர்களோடு இருந்தேன். எனக்கு கிலாஃபத்தும் தந்து சிறப்பித்தார்கள்.

## ஹஜ்ரத் அஹ்மத் அஃரஜ்

ஹஜ்ரத் அஹ்மத் அஃரஜ் (ரஹ்) அவர்கள் சவாரி செய்வதில் வல்லவர்கள். ஒருநாள் குதிரையின் கால் இடறி, கீழே விழுந்து மயக்கமுற்றார்கள். அதேநேரம் அங்குவந்த ஹஜ்ரத் ஷைகு மதார் (ரலி) அவர்கள் அஹ்மதே! இன்னும் எத்தனை நாள் உலக மயக்கத்திலேயே கிடப்பீர்? எழும்! என்றார்கள். உடனே எழுந்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் முரீதாகி சிறப்படைந்தார்கள் (மதார் ஆஜம்).

## ஹர்ஸா காஜ்கான்

ஹஜ் ஜியாரத் முடித்து நஜஃப்லிருந்து மீண்டும் பயணம் துவங்கி, தாம் பிறந்த ஹலப் நகரம் வந்து சேர்ந்தார்கள். ஹலப் அருகில் தம் சகோதரரின் பிள்ளைகளோடு சனார் என்ற ஊரில் சில நாள்கள் தங்கினார்கள். பிறகு தம் சகோதரின் கொள்ளுப் பேரன்களான ஹஜ்ரத் சையத் அபூமுஹம்மது, அர்கூன், ஹஜ்ரத் சையத் அபூதுராப்ஃபன்சூர், ஹஜ்ரத் சையைத் அபுல் ஹஸன் தைஃபூர் ஆகியோரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்கள். பின் ஆப்கன் தலைநகரம் காபூல் வந்தார்கள். பல நாள்கள் அங்கு தங்கியிருந்தார்கள்.

அங்கிருந்த போது ஒருவர் தம் பார்வையற்ற மகளைத் தூக்கிக் கொண்டு என் மகளுக்குப் பார்வை கிடைக்க செய்யுங்கள் என கண்ணீர் மல்க வேண்டி நின்றார். துஆ செய்தார்கள். உடன் அப்பெண் குழந்தை பார்வை திரும்பப் பெற்றது. இந்த விஷயம் அப்பகுதி முழுவதும் பரவ பலரும் வந்து தம் குறை தீர்த்துச் சென்றனர். ஹஜ்ரத் அவர்களின் வழிகாட்டுதல் பெற்று பலரும் முஸ்லீமானார்கள். பலரும் சீர்பெற்றனர்.

## ஷைக் ஈசாவின் வினா :

ஆப்கானிலிருந்து தற்போதைய பாகிஸ்தான் வழியாக மீண்டும் இந்தியத் திருநாட்டை அடைந்த சர்கார் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) பல இடங்களில் தங்கி மீண்டும் ஜோன்பூர் வந்து



சேர்ந்தார்கள். ஜோன்பூரிலிருந்து ஓர் நாள் ஹஜ்ரத் அவர்களின் தர்பாரில் ஆஜரானார்கள். ஷைக் ஈசா (ஹஜ்ரத் ஷிஹாபுத்தீன் முல்குல் உலமா அவர்களின் மாணவர்)

ஷைக் ஈசா, ஹஸ்ரத் அவர்களிடம், தாங்கள் ஏன் உணவு உண்பதோ, குடிப்பதோ இல்லை? எனக் கேட்டார்கள். இதற்கு ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள் : மிஸ்ரில் (எகிப்து) பஞ்சம் ஏற்பட்ட போது, ஹஜ்ரத் யூசுப் அவர்களைப் பார்த்தாலே மிஸ்ர் மக்களுக்குப் பசியும் தாகமும் தீர்ந்துவிடுமாம். அதுபோல அல்லாஹ் யாருக்குத் தன் தஜல்லியாத்தைப் பார்க்கக் கூடிய, உணரக் கூடிய பாக்கியத்தைக் கொடுக்கிறானோ, அவர்களுக்குப் பசி, தாகம் போன்றவற்றின் உணர்வே இருப்பதில்லை. இதில் அதிசயிக்க என்ன இருக்கிறது?

## பூக்கள் பேசின :

ஒருமுறை ஷைக் ஈசா (ரஹ்), ஹஜ்ரத் மதாருல் ஆலமீன் (ரஹ்) அன்னவர்க்கு பூக்களை அன்பளிப்பாகக் கொண்டு வந்தார்கள். அதனை அவர்கள் ஏற்கவில்லை. பூவாசம் கூடாதா? என ஷைக் ஈசா கேட்டார்கள். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் கூடும் சந்தேகத்திற்கு இடம் இல்லாவிட்டால், ஷைக் ஈசா (ரஹ்) ஏதோ கூற முற்பட்டார்கள். ஆனால் அதற்குள் பூக்கள் பேசின. நாங்கள் ஹராமைத் தின்பவனின் வீட்டிலிருந்து பறிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளோம். இதைக் கேட்ட ஷைக் ஈசா மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

## தொழுகையின்போது...

ஒரு நாள் ஜோன்பூரின் ஒரு பள்ளிவாசலுக்கு தொழச் சென்றார்கள். இமாம் தொழ வைக்கலானார். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் ஜமாஅத்தோடு கலந்து கொண்டார்கள். இன்னும் ஒரு ரக்அத் கூட முடியவில்லை. ஜமாஅத்தலிருந்து பிரிந்துவிட்டார்கள். பிறகு தாங்கள் ஏன் இவ்வாறு செய்தீர்கள்?என மலிகுல் உலமா (ரஹ்) கேட்டதற்கு லா சலாத்த இல்லா பிஹீமூரில் கல்ப் மன ஓர்மையில்லையேல் தொழுகை இல்லை) என பதில் கூறினார்கள். இமாம் தொழுகையில் தன் கன்றுக்குட்டியை நினைத்துக் கொண்டிருந்தார். எனவே நான் அவரைப் பின்தொடராது

தனித்துவிட்டேன் என விளக்கம் சொன்னார்கள் பிறகு அந்த இமாமிடம் விசாரித்த போது ஆம் என பதில் கூறினார்.

## மலிகுல் உலமாவின் கேள்வி :

ஆரம்பத்தில் மலிகுல் உலமா ஷிஹாபுத்தின் அவர்களுக்கு ஹஜ்ரத் ஷரஹ் மதார் (ரலி) அவர்களைப் பிடிக்கவில்லை. அரசர் இப்ராஹீம் ஷர்கி சர்க்கார் அவர்களை மதித்துப் போற்றுவதையும் அவர் விரும்பவில்லை. இத்தனைக்கும் அரசர் மலிகுல் உலமாவிற்கு கொடுத்த அரசவையின் மூத்த ஆலோசகர் பதவியையோ அவர் மீது வைத்திருந்த மரியாதையையோ கொஞ்சமும் குறைக்கவில்லை.

அரசர் மலிகுல் உலமா மீது எவ்வளவு நேசமும் மரியாதையும் கொண்டிருந்தார் என்றால் அவருக்காக அரசவையில் வெள்ளி இருக்கையை தயார் செய்து இருந்தார். ஒருமுறை மலிகுல் உலமா அவர்களுக்கு கால் வீக்கம் ஏற்பட்டு, அரசவைக்கு வராமல் இருந்தபோது, அரசரே நேரில் சென்று நலம் விசாரித்து நீர் எடுத்து தம் கையாலேயே மலிகுல் உலமாவின் கால்களில் தடவி விட்டு, யா அல்லாஹ்! மலிகுல் உலமா அவர்களுக்கு வராமல் இந்த வீக்கம் எனக்கு வந்திருக்கக் கூடாதா? என்றார். எனில் அவர் மலிகுல் உலமா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தார் என பாருங்கள்.

இருந்தபோதும் அரசர் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின்அபிமானியாக இருப்பது பிடிக்கவில்லை. அரசர் மனதிலிருந்து ஹஜ்ரத் அவர்களின் மதிப்பை எடுத்துவிட வேண்டுமென நினைத்து சர்கார் அவர்களிடம் கேள்வி கேட்டு கடிதம் எழுதி அனுப்பினார்.

எப்படியும் சரியாக பதில் தெரியாமல் மாட்டிக் கொள்வார்கள் என நினைத்தார். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் அனுப்பிய பதிலைக் கண்டு அவர்களின் மாபெரும் ஞானம் கண்டு தவ்பா செய்து ஹஜ்ரத் அவர்களின் தர்பாரில் வந்து மன்னிப்பு வேண்டி அன்னவர்களின் முரீதானார்கள்.



## ஹஜ்ரத் மலிகுல் உலமா (ரஹ்) அவர்கள் கேட்ட அந்த இரு கேள்விகள் :

1. மனிதர், கஃபா இதில் எது மிகச் சிறந்தது?
2. ஆலிம்கள் நபிமார்களின் வாரிசுகள் என ஹதீஸின் வருகிறது.

**இங்கே எந்த இல்ம் பெற்றவர்களை ஆலிம்கள் எனப்படுகிறது?**

இதற்கு ஹஜ்ரத் ஞானச் சூரியன் குத்புல் மதார் (ரஹ்) அவர்கள் அளித்த விளக்கத்தை பாமரர்கள் மட்டுமல்ல,

இந்த ஹதீஸின் சரியான விளக்கமே தெரியாமல் ஆலிம்கள் நபிமார்கள் வாரிசுகள் என சொல்லிக் கொண்டிருக்கும் நபர்களும் நிச்சயமாக கவனமாகப் படித்து மனதில் வாங்க வேண்டும்.

**பதில் :** கஃபாவில் அல்லாஹ்வின் சிஃபத் பொதிந்துள்ளது. மனிதருக்குள் அல்லாஹ்வின் தாத் பொதிந்துள்ளது. சிஃபத்தைவிட தாத்தே மேல். ஆகவே கஃபாவை விட மனிதரே மிகச் சிறந்தவர்.

இரண்டவாது கேள்விக்குப் பதில் யாதெனில், இல்ம் என்றால் மஃரிபாவுடைய அறிவு, அதாவது ஞானம், ஆன்மீக அறிவு, நபிமார்கள் பிற சாமான்ய மக்களிடமிருந்து வேறுபடுவதற்குக் காரணம் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள இல்முல்கைப் எனும் அந்தரங்க ஞானம். அந்தரங்கமான மறைவானதை அறியக்கூடிய இல்முல்கைப் நபிமார்களுக்கு அத்தியாவசியமாக உள்ளபோது நபிமார்களுக்கு வாரிசாக இருப்பவர்களுக்கும் அவசியம். இல்லையெனில் வாரிசு என்பதில் அர்த்தமுமில்லை, நிஜமுமில்லை ஆக யார் ஆரிப் பில்லாவாக மஃரிஃபத் எனும் அக ஞானம் மிக்க அல்லாஹ்வின் வலியாக இருக்கிறாரோ, அவருக்குதான் அல்லாஹ்விடமிருந்து கஷ்ஃப், கராமத் உண்டாகும்.

எனினும் வெளியரங்க இல்ம் (அறிவு) இன்றி, அந்தரங்க ஞானமும் பூர்த்தியடையாது, எனவே யாரிடம் அக, புற இரு அறிவும் ஞானமும் உண்டோ, அவர்தான் ஆலிம் நபிமார்களின் வாரிசு.

ஆக வெளியரங்க ஷரீஅத் அறிவுடைய ஆலிம் அந்தரங்க மஃரிஃபா எனும் ஞானம் பெற்றதால் அவர் நபிமார்களின் வாரிசாக முடியும். இல்லையெனில் முடியாது.

இப்படியே இன்னும் விரிவாகப் பதில் கூறுகிறார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் ஞானப் பூந்தோட்டத்தில் ஒரு மலரை இல்லையில்லை, அந்த மலரில் இருந்து ஒரே ஒரு இதழை மட்டுமே காட்டக்கூட இந்த ஒரு நூல் போதாது. இது அவர்களின் வரலாற்றுச் சுருக்கமே தவிர, விரிவுரை அல்ல.

## ஜோன்பூரிலிருந்து :

ஹஜ்ரத் சையதினா குத்புல் மதார் (ரலி) அவர்கள் தொடர்ந்து 12 வருடங்கள் ஜோன்பூரில் தங்கியிருந்த போதும், பல பயணங்களுக்கிடையே ஜோன்பூரில் தங்கியிருந்ததுதான் 12 வருடங்கள் தங்கியிருந்த கணக்கு வருகிறது. எனவே எங்கு போயினும் அன்னவர்கள் கடைசி வரை ஜோன்பூரில் தான் இருப்பார்கள் என்றே அரசர் இப்ராஹீம் உட்பட யாவரும் கருதினர். அத்தோடு தம்மோடு இத்தனை ஆண்டுகள் இருந்ததால் ஜோன்பூர் அரசர் உட்பட மக்கள் யாவரும் ஹஜ்ரத் பெருந்தகை அவர்கள் மீது அளவற்ற நேசம் கொண்டிருந்தனர்.

இவ்வாறு இருக்கையில் தான் ஒரு நாள் தம் கலீபாக்கள் உட்பட தம் சீடர்கள் அனைவரையும் அழைத்து யாவரும் கிளம்பத் தயாராகுங்கள் என்றார்கள். இதையறிந்த அரசர் இப்ராஹீம் தம் அரசவை மந்திரிகள், முக்கியஸ்தர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு வந்து. எங்களால் ஏதும் குறையேதும் ஏற்பட்டுவிட்டதா? தாங்கள் ஜோன்பூரிலிருந்து யாவரையும் அழைத்துக் கொண்டு விடை பெறுவதாக அறிந்தோமே! என கவலையுடன் கேட்டார். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் மிகப் பொறுமையாகப் பதில் கூறினார்கள். நாம் நம் இஷ்டப்படி எதுவும் செய்வதில்லை. நாயகனின் கட்டளையே நம் போக்கு நான் இறுதியாக ஓய்வெடுக்கப் போகிற இடம் இன்ன இடமென்று நம் கண்மணி நாயகம்(ஸல்) கூறியிருக்கிறார்கள் என முழு விவரத்தையும் கூறினார்கள்.



இச்செய்தி ஜோன்பூர் முழுக்க மின்னல் போல் பரவியது. மிகக் கவலையுடன் அனைவரும் திரண்டு அழலாயினர். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் மீண்டும் ஓர்முறை ஜோன்பூர் வருகை புரிவேன் என கூறவே மக்கள் சற்று ஆறுதல் அடைந்தனர். பிறகு அரசர் உட்பட அதுவரை அன்னவர்களின் முரீதாகாமல் இருந்த அனைவரும் பைஅத் பெற்றனர். பிறகு கனூஜ் பயணமானார்கள்.

## மக்கன்பூர் வருகை :

ஹிஜ்ரி 8 ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் கண்மணி நாயகம் ரசூல் (ஸல்) அவர்கள் சொன்னபடி கனூஜ் வந்து அங்கிருந்து தெற்கே சென்று அக்குளத்தை அடைந்தார்கள். அக்குளம் யாஅஜீஸ், யாஅஜீஸ் என திக்ர் செய்து கொண்டிருந்தது. சர்க்கார் வந்ததைக் கண்டதும் நீர் வற்றியது. திக்ர் சப்தமும் நின்றது. அங்கு தாம் தங்க ஒரு அறையைக் கட்டச் சொன்னார்கள். அதில் தங்கினார்கள்.

ஜோன்பூரில் ஹஜ்ரத் அவர்களைப் பிரிந்து அரசர் இப்ராஹீமால் இருக்க முடியவில்லை. ஹஜ்ரத் அவர்களைக் காண ஆர்வமாக இருப்பதாகவும். அனுமதி தந்தால் மக்கன்பூர் வருவதாகக் கடிதம் எழுதினார்கள். தாங்கள் வரவேண்டாம். நானே வருகிறேன் என பதில் அனுப்பினார்கள்.

ஹஜ்ரத் செயதினா குத்புல் மதார் பதீஉத்தின் (ரலி) அன்னவர்கள் இறுதியாய் ஓய்வெடுக்கப் போகிற புனித ஸ்தலம் மக்கன்பூர்தன் என்பதை அறிந்து மக்கள் பலரும் தூரமான ஊர்களிலிருந்தும் மக்கன்பூர் வந்து குடியே ஆரம்பித்தார்கள். அதுவரை வெறும் வனாந்திரமாக இருந்த மக்கன்பூர் மக்கன்பூராக மாறியது.

## கனூஜில் நிகழ்ந்த அற்புதம் :

அன்றைய காலத்தில் கனூஜ் ஒரு பட்டணமாக விளங்கியது. திடீரென ஒரு சமயம் கனூஜில் காலரா போன்ற வியாதி பரவ ஆரம்பித்தது. மக்கள் கொத்துக் கொத்தாக மடியலாயினர். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் வந்து முறையிட்டார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் தங்களின் சீடர் காஜி ஷிஹாபுத்தீன் கத்வாயி அவர்களை அழைத்து, தாங்கள் கனூஜ் சென்று அந்த மக்களுக்காக துஆ செய்யுங்கள். தங்களின் துஆ பரக்கத்தால் நிலைமை சீராகும் என்றார்கள். கனூஜ் வந்த காஜி ஷிஹாபுத்தீன் மக்கள் யாவரையும் ஓரிடத்தில் ஒன்றுகூட்டி நான் துஆச் செய்கிறேன். உங்கள் பிரச்சனை சரியாகிவிடும் உங்கள் பிரச்சனை சரியாகாவிட்டால், நீங்கள் யாவரும் லாயிலாஹ் இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் கலிமா சொல்லி முஸ்லிம்களாகிவிட வேண்டும் என்றார்கள்.

40 நாட்கள் எங்கள் ஊரில் யாருமே மரணிக்காவிட்டால் தாங்கள் சொல்வதைக் கேட்கிறோம் என யாவரும் வாக்குறுதி அளித்தனர். காஜி ஷிஹாபுத்தீன் (ரஹ்) துஆச் செய்தார்கள். அப்போது மின்னல் போல் ஏதோ ஓர் ஒளிக்கீற்று அவர்களின் இதழைப் பிரித்துக் கொண்டு உட்புகுந்தது. நாட்கள் நகர்ந்தன. 39 நாட்கள் நிறைவடைந்தன. எவரும் மரணிக்கவில்லை. மக்கள் கூடி என்ன செய்வது? நாளை 1 நாள் தான் உள்ளது. நாளையும் யாருமே மரணிக்காவிட்டால் நாம் கொடுத்த வாக்கைப் காப்பாற்ற வேண்டிவரும், என்ன செய்யலாம்? என யோசித்த போது, பேகா, கோபால் என்ற இரு பெரிய மனிதர்களிடம் ஆலோசனை கேட்கலாம் என முடிவெடுத்து சிலர் சென்று அவர்களிடம் நடந்த நிகழ்வுகளையெல்லாம் கூறினர். அவர்கள் இருவரும் உங்கள் யோசனை என்ன? என கேட்டனர். அதற்கு அவர்கள் நாளை ஒருநாள் உள்ளது. அதற்குள் யாராவது வயதான முதியவரைக் கொன்றுவிடலாம் என நினைக்கிறோம் என்றார்கள். பேகா என்பவர். நீங்களே உங்கள் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ள நினைக்கிறீர்களா? நாங்களிருவரும் லாஇலாஹ எனும் கலிமாவின் தத்துவத்தைப் படித்துள்ளோம். அது உங்களுக்கு நல்லதே.

வாக்களித்தபடி மறுநாள் கனூஜ் மக்கள் யாவரும் மக்கன்பூர் வந்து, ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் முன்பாக திருக்கலிமா கூறி, முஸ்லிமாகி நேர்வழி பெற்றனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்கன்பூரில் இருந்த ஹஜ்ரத் அவர்கள் தாம் வாக்களித்தபடி மீண்டும் ஜோன்பூர் கிளம்பினார்கள்.



## மீர் அஷ்ரஃப் சம்னானீ :

ஹஜ்ரத் மீர் அஷ்ரஃப் சம்னானீ (கத்தஸல்) அனைவரும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களுடன் ஒரு குறிப்பிட்ட காலம் உடன் இருந்தார்கள். ஹஜ் பயணங்களின் போதும் உடன் இருந்தார்கள். இறுதியாக ஹஜ் செய்தபின் ரோம் சென்றார்கள். அப்போது ஹஜ்ரத் சம்னானீ(ரஹ்) அவர்களுக்கு கிலாஃபத் வழங்கி ரோமில் விட்டுவிட்டு ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் இந்தியா திரும்பினார்கள்.

ஹஜ்ரத் சம்னானீ (ரஹ்) அவர்களுக்கு உவைசிய்யாவின் நிஸ்பத்தில் தொடர்பை உண்டாக்கினார்கள். அன்றி மேலும் ஹஜ்ரத் சம்னானீ (ரஹ்), ஹஜ்ரத் மக்தூம் ஜஹாங்கஷ்த் (ரஹ்) அவர்களாலும் கலீஃபாவாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஹஜ்ரத் மக்தூம் ஜஹாங்கஷ்த் அவர்கள் கனூஜில் ஹஜ்ரத் அவர்களிடமும் கிலாஃபத் பெற்றது குறிப்படத்தக்கது. இவர்களின் புனித தர்கா ஷரீப் தற்போதைய பாகிஸ்தானில் ஓச் எனுமிடத்தில் உள்ளது.

இஸ்லாமிய சன்மார்க்கத்தை தாம் வந்த இந்திய தேசமெங்கும் பரப்புவதே அன்னவர்களின் பணியாக இருந்ததினால் ஹஜ்ரத் அவர்கள் அதிகம் அதிகம் பயணம் செய்தார்கள். பயணிப்பதை விரும்பினார்கள். ஜோன்பூருக்கு நானே வருவேன் என அரசர் இப்ராஹீம் அவர்களுக்கு பதில் அனுப்பியதும் கூட அடுத்தடுத்து அவர்கள் பயணிக்க விரும்பியதால் தான் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

## ராஜ்கீரில்...

சிஹுருல் மதார் எனும் நூலில் வருகிறது. ஷஹின்ஷாயே அவ்லியா ஹஜ்ரத் சையத் பதீஉத்தின் (ரஹ்) அவர்கள் தூய தீன் பணிக்காக தம் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு ஆகாயத்தில் பறந்தவாறு ராஜ்கீரைக் கடந்து செல்லும் போது ஹஜ்ரத் மக்தூம் (ரஹ்) ஒரு மண் சுவரருகில் வந்து கொண்டிருந்தார்கள். அன்னவர்களின் சிம்மாசனம் தம்மை நோக்கி வரக் கண்டு அவர்களை வரவேற்கும் பொருட்டு, சுவரே! பத்தடி முன்னால் போ என்றார்கள். அவர்களோடு சுவர் முன்னால் வரவும், ஹஜ்ரத் குத்புல் மதார் ( ரலி ) அவர்களின் சிம்மாசனம் அங்கு வந்து இறங்கவும்

சரியாக இருந்தது. இது நொடிப் பொழுதில் நடந்தது. இவர்கள் ஒரு சொம்பு நிறைய தண்ணீர் கொடுக்கவும் அவர்களின் சிம்மாசனம் பூமியில் நிலைபெறவும் அச்சமயம் ஒரு ரோஜாப்பூ ஒன்று அந்நீரில் விழுந்தது. ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) தம் மீது அளப்பறிய நேசம் கொண்டுள்ளதை உணர்ந்து ஹஜ்ரத் மக்தூம் (ரலி) அவர்கள் அகமகிழ்ந்தார்கள். பிறகு காலபீ பயணமானார்கள்.

காலபீயை ஆட்சி செய்த காதிர்ஷாவின் கதை ஏற்கனவெ முடிந்து விட்டதைப் பார்த்திருப்பீர்கள். இப்போது அங்கே ஹோஷங்காபாத் ஆட்சியில் இருந்தார்.

ஹஜ்ரத் அவர்களின் வருகையை அறிந்து பல்லாயிர மக்கள் ஆஜராயினர். தம் அறையில் இருந்து வந்த ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தம் முத்திரையை நீக்கினார்கள். அப்பேரொளி கண்டு தம்மை மறந்தனர். அல்லாஹ்வின் வலி அவர்களின் அருள்பெற்றுச் சென்றனர் அம்மக்கள்.

(குறிப்பு : பாத்திரம் உலகையும், நீர் வலிமாக்களையும் குறிக்கும். அதில் தாங்கள் ரோஜாவைப் போலத் திகழ்வீர்கள் என்பதை உணர்த்தும் பொருட்டு அதில் ரோஜாவை விழச் செய்தார்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள்).

காஜீ சையத் சத்ருத்தீன் : ஹஜ்ரத் காஜி சையத் சத்ருதீன் (ரஹ்) அவர்கள் ஜோன்பூரில் சிறப்பிற்குரியவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களது தந்தையார் ஹஜ்ரத் சையத் ருக்னுத்தீன் (ரஹ்) அவர்கள் தில்லியிலிருந்து ஜோன்பூர் வந்து குடியேறி மார்க்கக் கல்வி போதித்து வந்தார்கள். தில்லியில் தமது கல்வியை முடித்து ஜோன்பூர் திரும்பிய ஹஜ்ரத் சத்ருத்தீன் (ரஹ்) தமது தந்தையாரின் பணியை தொடர்ந்து வந்தார்கள்.

தஸவ்வுஃப் எனும் சூஃபியிசத்தில் நாட்டம் கொண்ட அவர்கள் நிறைய சூஃபித்துவ நூல்களை ஆர்வமாகப் படிக்கத் தொடங்கினார்கள். அக்காலை ஓரிரவு கனவில் தோன்றி பேரொளி வீசும் முகம் கொண்டவர்கள். அவர்கள் படித்த பாடம் நடத்தி வந்த கிதாபுகளை எல்லாம் கிழித்துப் போட்டார்கள். அவர்கள் முன் அமர்ந்து அவர்களைத் தொட ஹஜ்ரத் சத்ருத்தீன் தம் ஆடை, தொப்பி உட்பட எரிந்து சாம்பலானார்கள். இதுகண்டு திடுக்கிட்டு



விழித்த அவர்கள் அன்று ஜோன்பூரில் பிரபல சூஃபியாகத் திகழ்ந்த ஹஜ்ரத் காலுஷா (ரஹ்) அவர்களிடம் சென்று விளக்கம் கேட்டார்கள். அதற்கு அவர்கள்... ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) உமக்காக காலபீயில் காத்திருக்கிறார்கள். செல், நீர் கண்ட கனா அவர்களின் ஏற்பாடுதான் என்றார்கள்.

முன்பே ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சிறப்பை அறிந்திருந்த ஹஜ்ரத் காஜீ சத்ருத்தீன் (ரஹ்) உடனே காலபீ கிளம்பினார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் ( ரலி) தம் முகத்திரை நீக்க கண்டு மெய் மறந்து விழுந்தார்கள். உணர்வு பெற்ற பின் தமக்கு தீட்சை வழங்கும்படி கோரினார்கள். முதலில் நீர் கற்ற புறக் கல்வியை மறந்துவிடு என்றார்கள். அதற்கவர்கள் அது எப்படி முடியும்? எனக் கேட்க... திருக்கலிமாலில் “லா” கொண்டு இருக்கும் யாவும் இல்லாமல் போகட்டும் என்று கூறி திருக்கலிமாவை திக்ர் செய்ய கூறினார்கள். திக்ர் செய்து, செய்து அவர்கள் தம்மை வெறுமையில் உணர்ந்தார்கள். பிறகொருநாள் அவர்களுக்குத் தீட்சை வழங்கி அவர்களின் கல்பில் ஞானத்தை இட்டார்கள். இறைத்துவ தத்துவம் உள்ளத்தில் வெளியானது. பிறகு 40 நாட்கள் சில்லாஹ் இருக்க வைத்தார்கள். 40 நாட்களுக்குப் பின் ஹஜ்ரத் காஜீ சத்ருத்தீன் (ரஹ்) எனும் இறைசேர் வெளிவந்தார்கள்.

## காலபீயிலிருந்து ஜோன்பூருக்கு...

காலபீயில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் சில்லாஹ் இருந்த இடங்களை இப்போதும் காணலாம், காலபீயில் பல நாட்கள் தங்கிய ஹஜ்ரத் அவர்கள் அங்கிருந்து ஜோன்பூர் பயணமாகிறார்கள். அன்னவர்களை வரவேற்க அரசர் இப்ராஹீம் ஷர்கீ (ரஹ்) முதல் அரசப் பிரதானிகள் உட்பட ஊர் மக்கள் யாவரும் ஊர் எல்லைக்கே வந்து வரவேற்கிறார்கள். அன்று ஜோன்பூரில் பெருநாள் போன்று மகிழ்ச்சி ஆரவாரம்.

**நூலாசிரியரின் குறிப்புரை :** கி.பி.1995 அல்லது 1996 இல் நான் ஒரு ஊரில் இந்த அதிசய நிகழ்வைக் கண்டேன். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) காலபீயில் சில்லாஹ் அமர்ந்த இடத்தில் ஒரு பாறையிலான சிங்கத்தின் சிலை இருந்தது. இது ஏன் இங்கு உள்ளது? இதை நமது கோவிலில் கொண்டுபோய்

வைத்துவிடலாம் எனக் கருதிய இந்துக்கள் சிலர் அதைக் கொண்டுபோய் செல்ல ஒரு டிராக்டர் எடுத்து வந்தனர். அச்சிங்கச் சிலை அருகில் சென்றதும் அதிர்ச்சியடைந்தனர். அது கர்ஜித்தது. திடீரென எழுந்து நின்று தன் காலை பூமியில் பிராண்டியது. வந்தவர்கள் ஓடிப்போய் விட்டனர். போய் பிறரிடம் கூற அவர்கள் கேட்டு கேலி செய்தனர். பிறகு கேலி செய்தவர்களும் வந்து அதை நெருங்க, முன்பு போலவே அச்சிங்கம் செய்ய பயந்து ஓடினர். அச்சிலை இப்போதும் அந்த இடத்தில்தான் உள்ளது. மக்கள் ஆச்சர்யத்துடன் கண்டு செல்கின்றனர். இதன் தாத்பரியத்தை அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

## ஹஜ்ரத் அஜ்மல் அஜ்மலீ :

ஜோன்பூரின் பிரபல மேதை ஹஜ்ரத் மக்தூம் சம்னானீ (ரஹ்) அவர்களின் உறவினர். இவர்கள் ஹஜ்ரத் பெருந்தகையின் கலீபாவுமாவர். அன்னவர்களிடமிருந்து அவாரிஃபுல் மஆரிஃப் ஞானக் கிரந்த விளக்கம் பெற்ற சிலரில் ஒருவர். அவாரிஃபுல் மஆரிஃபை கற்றபின் தமக்கு "ஃபுசூசுல் ஹிகமை" கற்றுத் தரும்படி கோரினார். ஞானம் வெறும் ஏட்டுக் கல்வியால் பெறுவதல்ல. ஒரு இதயத்திலிருந்து மறு இதயத்திற்கு போடப்படுவதாகும் என்று கூறி அவர்களை மதாரிய்யாவின் தரீக்காவில் இணைத்தார்கள். மிகப்பெரிய தக்வா உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அதிக நேரம் தம் அறைக் கதவை சாத்திக் கொண்டு தனிமையில் தான் இருப்பார்கள். அழுகிற சப்தம் மட்டும் கேட்கும். இவர்களது புனித தர்கா ஷரீப் ஜோன்பூரில் கிபாஹ் பகுதியில் உள்ளது.

பிறகு அங்கிருந்து ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் விடைபெற்ற போதும் அரசர் உட்பட மக்கள் யாவரும் விழிநீர் நிரம்ப வழிய வழியத் தான் விடை தந்தார்கள்.

## சூனியக்காரர்கள் :

அங்கிருந்து அவர்கள் சென்ற ஒரு ஊரில் சூனியக்காரர்கள் நிரம்பி இருந்தனர். அவர்கள் சூனியத்தில் எவ்வளவு பெரிய ஆட்கள் என்றால், சூனியம் செய்து மனிதனை குருடாக்கி



விடுவார்கள். சூனியம் செய்து மனிதனை நாயாகக்கூட மாற்றிவிடுவார்கள். அவர்கள் நேர்வழி பெற்றால் அவர்களுக்கும் நல்லது. அவர்களின் சூனித்திலிருந்து மக்களும் பாதுகாப்புப் பெறுவார்கள் என்று கருதிய ஹஜ்ரத் அவர்கள் அவர்களை இஸ்லாத்தின்பால் அழைக்கக் கிளம்பினார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களை கண்டதும். அவர்களது புத்தி தெளிந்து, ஹஜ்ரத் அவர்களிடம் வந்து மன்னிப்புக் கேட்டார்கள். நீங்கள் வந்து மன்னிப்புக் கேட்காமல் போயிருந்தால் ஒட்டுமொத்தமாக அழிந்து போயிருப்பீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கிருபை செய்தான் என்று கூறிய ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் சத்திய வாக்கையும், அற்புதங்களையும் கேட்டும் கண்டும் யாவரும் முஸ்லிம்களாயினர். சில நாள்கள் அங்கிருந்து அவர்களை தர்பியத் செய்துவிட்டு கிளம்பினார்கள்.

## முறையீடு :

தாரீக் சலாத்தீன் எனும் நூலில் வருகிறது. மேற்கண்ட இடத்தில் ஹஜ்ரத் அவர்கள் தங்கியிருந்த ஒருநாள் தம்பதியர் கண்ணீரும் கம்பலையுமாக ஓடோடி வந்தனர். ஆண்டாண்டு காலமாய் தவங்கிடந்து பெற்ற மகன் இறந்துவிட்டான். தங்கள் துஆச் செய்து, எங்கள் மகனை மீட்டுத் தாருங்கள் என கெஞ்சி நின்றனர்.

அக்குழந்தையின் கழுத்தின் அருகில் நின்று "கும் பி இத்னில்லாஹ்" அல்லாஹ்வின் உத்தரவில் எழுவாய் என்றார்கள். லாயிலாஹ இல்லல்லாஹூ முஹம்மது ரசூலுல்லாஹ் எனக் கூறியவாறே அச்சிறுவன் எழுந்து அமர்ந்தான். எழுந்து அமர்ந்த அச்சிறுவன் ஹஜ்ரத் பெருந்தகை அவர்களே இந்த துன்யா வாழ்வில் என்ன இருக்கிறது? எனக்கு துன்யாவில் வாழ விருப்பமில்லை. என்னை அங்கேயே அனுப்பிவிடுங்கள். நான் அங்கேயே நிம்மதியாக இருந்துவிடுகிறேன் என சொல்லிவிட்டார்.

இப்பயணத்தில் அநேக ஊர்களில் பல வனாந்திரங்களில் காடுமலைகளில் காடு மலைகளில் தங்கி இருக்கிறார்கள். பிறகு கானூஜ் பயணமானார்கள். கனூஜில் ஹஜ்ரத் மக்தூம்

ஜஹாங்கஷ்த் (ரஹ்) அவர்களுக்கு கிலாஃபத் அருளினார்கள். பிறகு மக்கன்பூர் பயணமானார்கள்.

ஹஜ்ரத் மக்தூம் ஜஹாங்கஷ்த் (ரஹ்) வேறு தரீக்காவில் கிலாஃபத் பெற்றிருந்த போதும், ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களிடமிருந்தும் சில்சிலா மதாரிய்யாவில் கிலாஃபத் பெற்றுள்ளார்கள் என்பதை கிதாப் ரூஹானிய்யத், தத்கிரத்துல் அவ்லியா, தாரீக் சூஃபிய்யா, தத்கிரத்துல் ஃபுகறா, துல்பிகார் பதீஃஊ ஆகிய நூல்களில் ஆதாரம் உள்ளது.

## பல்ராயே :

கனூஜ் அருகில் அமூ என்றொரு ஊர் உள்ளது. அங் பல்ராயே என்றொருவர் இருந்தார். அவருக்கு வெகுநாட்களாக பிள்ளை இல்லை. தனக்கு குழந்தைப் பேற்றுக்காக துஆச் செய்யுமாறு வேண்டினார். அதன்பின் அவருக்கு பிள்ளை பிறந்தது. ஆனால் பிள்ளையாக பிறக்கவில்லை வெறும் சதைப்பிண்டம். தூக்கிக் கொண்டு ஓடோடி வந்தார் ஹஜ்ரத் அவர்களிடம் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் அதை உற்று நோக்கினார்கள். உடனே கை, கால் முளைத்து உருப்பெற்று மூச்சுவிட்டது அப்பிண்டம்! அந்த பல்ராயே தம் மனைவியோடு முஸ்லீமானார். அக்குழந்தை பிற்காலத்தில் மாபெரும் முஸ்லீம் புலவராகத் திகழ்ந்தார். ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்கள் மீதும் நிறைய கஸீதாக்களைப் பாடினார்கள். பல்ராயே அவர்களின் குடும்பம் ஆல்ராயே எனப்பட்டது. 12 தலைமுறை வரை நீடித்த அக்குடும்பத்திற்கு அதன்பின் வாரிசில்லாமல் போகவே அக்குடும்பத்தில் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் தர்பாரில் துஆ செய்தனர். 12 ஆம் தலைமுறை வாரிசான மதாரீ ராயே அவர்களுக்கு அதன்பின் இரு பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் ஹஷ்மித் ராயே, நிஃமத் ராயே இவர்கள் அதன்பின் இன்றுவரை பல்ராயே அவர்களின் தலைமுறை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## யாசீன் நதி:

ஹஜ்ரத் ஹாஹ் யாசீன் (ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் கலீஃபா ஆவர். பெரிய கராமத் உடைய மகான்



ஆவார்கள் ஒருமுறை அவர்களிடம் தண்ணீர் கொண்டு வரும்படி அனுப்பினார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்கள் எங்கும் தண்ணீர் இல்லை. மிகுந்த வருத்தத்தோடு வந்து முறையிட்டார்கள். தம் அசாவை கொடுத்தனுப்பி பூமியில் மேற்கிலிருந்து கிழக்குப் புறமாக கோடு கிழியுங்கள் என்றார்கள். கோடு கிழித்த இடத்தில் நீரூற்று கிளம்பி நதியாக ஓடியது. அதை யாசீன் நதி என அவர்களது பெயராலேயே அழைக்கப்படுகிறது. சிலர் அதை ஏசன் நதி எனவும் கூறுகின்றனர். அந்நதியில் குடிப்பவர்களுக்கும் குளிப்பவர்களுக்கும் ஷிஃபா தருகிறது. அதைக் கொண்டுபோய் நோயாளிகளுக்குப் புகட்டி நிவாரணம் பெற்று வருகின்றனர். சில வரலாற்று ஆசிரியர்கள், ஹஜ்ரத் யசின் (ரஹ்) அவர்கள் துஆச் செய்ய அந்த நதி உண்டானது எனவும் எழுதியுள்ளார்கள்.

## மாவர் ரீஃப் :

மக்கன்பூரிலிருந்து 60 கிலோ மீட்டரில் உள்ள ஊர்தான் மாவர். அங்கு காஜி மத்ஹர்கில்லா ஷேர் எனும் மிகப்பெரிய ஆலிம் இருந்தார்கள். இவர்கள் ஈரானில் மாவரன் நகரிலிருந்து வந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் எப்போதும் அவர்களிடம் பாடம் படித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒரு கவள உணவும் உண்ணாமல் துளி நீரும் அருந்தாமல் வாழும் மகான். சூரியன் போல் போரொளி வீசும் திருமுகம் உடைய மகான். அதனாலேயே தம் முகத்தை திரை போட்டு மறைத்துக் கொண்டார்கள். அன்னவர்களின் புனித மேனியில் ஈ போன்ற அசுத்தத்தில் அமரும் பூச்சி அமருவதில்லை. அத்தகைய மகான் ஹஜ்ரத் சையத் பதீஉத்தின் குத்புல் (ரஹ்) அவர்கள் மக்கன்பூரில் தங்கயிருப்பது காஜி மத்ஹர் அவர்களுக்கும் எட்டுகிறது.

தன்னிடம் பயின்று தேர்ச்சி பெற்ற இருநூறு மாணவர்களுடன் கிளம்பினார்கள். அங்கே அவர்கள் கிளம்பியதும் இங்கே ஹஜ்ரத் குத்புல் மதார்(ரஹ்) தம் சீடர்களிடம் ஒரு மிகப்பெரிய ஆலிம் என்னைக் காண வந்து கொண்டிருக்கிறார். அவர் எது வேண்டுமானாலும் பேசட்டும் யாரும் குறுக்கிட வேண்டாம் எனச் சொல்லிவிட்டார்கள். வந்தவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுத்து

அமரச் செய்தார்கள். காஜீ மத்ஹர் வஹ்தத்துல் உஜீத் குறித்து பேசத் துவங்கினார்கள். ஒரு வாரமாக வாத விவாதம் நடக்கிறது. கடைசியில் காஜீ மத்ஹரால் பதில் கூற இயலாது ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

பிறகு சகஜமாக பேசத் துவங்கிய காஜீ மத்ஹர் அவர்கள் தாங்கள் ஏன் உண்பதோ, குடிப்பதோ இல்லை? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் இந்த துன்யாவானது வெறும் ஒருநாள்தான் எனக்கு. இருக்கிற ஒரு நாளில் நோன்பாளியாய் இருந்துவிட்டுப் போகலாம் என்றுதான் எனக்கூற அப்படி எனில் நோன்புக்கு சஹர் இப்தார் உண்டு தானே அதை எப்போது செய்வீர்கள்? எனக் கேட்டார்.

உடனே ஜலாலிய்யத் ஏற்பட்டுவிட்டது. ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களுக்கு காஜி மத்ஹரின் கழுத்தைப் பிடித்து தம் மேலங்கிக்குள் அவரது முகத்தை வைத்தார்கள். உள்ளே கண்ட காட்சியில் காஜி மத்ஹர் உறைந்தே போனார். ஆம்! அங்கே ஹஜ்ரத் குத்புல் மாதரின் உடல் தெரியவில்லை. இப்பிரபஞ்சத்தையே பார்த்தார். சூரியனும் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவரது கழுத்தைப் பிடித்து மீண்டும் வெளியே எடுத்த ஹஜ்ரத் அவர்கள் சதாவும் சூரியன் இருந்து கொண்டயேிருக்கிறது. பிறகெப்படி நான் சஹரோ இஃப்தாரோ செய்ய முடியும் என்று கேட்டார்கள்.

பிறகு தம் முகத்திரையை அகற்றினார்கள். கண்டு மதிமயங்கிய காஜி மத்ஹரும் மாணவர்களும் மூன்று நாட்களாகியும் தெளியவில்லை. பிறகு தாம் உழூச் செய்து எஞ்சிய நீரை தம் சீடர்களிடம் கொடுத்து அவர்கள் மீது தெளிக்கும்படி கூறினார்கள். அவ்வாறே செய்து அவர்களை ஹஜ்ரத் ஷாஹ் நாகூரி (ரஹ்) நம் சர்க்கார் அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். காஜி மத்ஹரையும் மற்றும் மாணவர்களையும் ஹஜ்ரத் சையத் முஹம்மது ஜமாலுத்தீன் ஹஜ்ரத் சையத் அஹமத் பாதிய்யாபா அவர்களிடம் ஒப்புவித்து ஞானப் பயிற்சி வழங்கச் சொன்னார்கள். பிறகு காஜி மத்ஹர் மற்றும் அவரது மாணவர்களுக்கு பைஅத் வழங்கினார்கள்.



மேற்கண்ட நிகழ்ச்சியில் காஜி மத்ஹர் அவர்கள் தம் 200 தேர்ச்சி பெற்ற மாணவர்களுடன் மட்டும் வரவில்லை. 200 ஒட்டகங்களில் புத்தக மூட்டைகளை நிரப்பிக் கொண்டும் வந்தார்கள். ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களிடம் செய்ய வந்த போது இருந்த காஜி மத்ஹர் அன்னவர்களிடம் பைஅத் பெற்றபின் காஜி மத்ஹரே காணமால் போய்விட்டார்கள். ஹஜ்ரத் அவர்கள் தம் வாயாலேயே ஆஷிக் (நேசர்) என அழைக்குமளவிற்கு நம் மதார் நாயகத்தின் ஆஷிக் ஆகவே முழுதும் மாறிவிட்டார்கள்.

மக்கன்பூரிலிருந்து மாவர் ரீப் கிளம்பும் போதும் கூட தன் முதுகு நாயகத்தின் முகத்திற்கு நேராக ஆகிவிடாது பார்த்துக் கொண்டார்கள். மாவர் ரீபில் இருக்கும் போதும் மக்கன்பூர் ரீபின்பால் முதுகைக் காட்டாது பேணுதலாக இருப்பார்கள். இன்றும் மாவரில் அவர்களது அபிமானிகள் இதைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது. உபி மாநிலம் கான்பூர் மாவட்டத்தில் மாவர் ஷரீஃப் எனும் ஊரில் ஹஜ்ரத் காஜி மத்ஹர் ஆஷிக் (ரஹ்) அவர்களின் தர்கா உள்ளது.

ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) அவர்களின் ஆஷிக் என்றே அழைக்கப்படும் அன்னவர்களின் சீடர்களிலும் ஹஜ்ரத் காஜி மத்ஹர், ஹஜ்ரத் அப்துல் நுஃபூர், பாபா கபூர் மஜ்தூப் குவாலிபர் போன்ற மகிப் பெரிய மாயிக்மார்களுமுண்டு. இவர்கள் குறித்து ஹஜ்ரத் அப்துல் ஹஜ் முஹத்தீஸ் தெஹலவி (ரஹ்) தமது அக்பாருல் அக்யார் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## ஹஜ்ரத் ஹிசாமுத்தீன் சலாமத்தீ :

துஹ்ஃபத்துல் அப்ரார் ஃபீ மனாகிபி குத்பில் மதார் எனும் கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது. ஹஜ்ரத் ஹிசாமுத்தீன் சலாமத்தீ ஹஜ்ரத் குத்புல் (ரலி) அவர்கள் மீது மிகுந்த பற்றுடையவர்களாக இருந்தார்கள். வெகுதூரத்திலிருந்து பயணப்பட்டு மிக ஆர்வமாக வந்த அவர்களுக்கு ஏமாற்றம். ஹஜ்ரத் அவர்களின் அறைவாசலில் அமாதுல் மாலிக் நின்றுகொண்டு ஹஜ்ரத் அவர்கள் முகத்திரையின்றி இபாதத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தற்போது காண இயலாது என்கிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களைக் காண வெகுதூரத்திலிருந்து ஆவலாய் ஓடோடி வந்த என்னை ஒரே ஒரு நிமிடம் அனுமதித்தாலும் போதும். இல்லாவிட்டால் என் மனம் நோகும் என கெஞ்சிப் பார்க்கிறார்கள். அமாதுல்மாலிக் அனுமதிக்கவே இல்லை. பொறுக்க முடியாத ஹஜ்ரத் ஹீசாமுத்தீன் படாரென உள்ளே நுழைந்துவிட்டார்கள். ஆஹா! என்ன அற்புதமான ஒளிவீசும் திருமுகம். சுபஹானல்லாஹ் ஹஜ்ரத் ஹீசாமுத்தீன் அப்பேரொளியில் பரவச நிலைக்குள் போகிற போதே கடிவாளம் போட்டது போல ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் குரல். ஹீசாமுத்தீன் அவமரியாதை அல்லாஹ்வை அடையச் செய்யாது. இந்த வார்த்தை மட்டுமல்ல. ஹஜ்ரத் அவர்களின் ஜலாலிய்யத்தான பார்வையும் ஹஜ்ரத் ஹீசாமுத்தீனை எரிக்க ஆரம்பித்தது. எனினும் தன்நிலை மறந்த ஹீசாமுத்தீன் இந்த அவமரியாதை தானே தங்களை முகத்திரையின்றிப் பார்த்துப் பரவசமுற வழிகோலியது என்றார்கள். உடனே சலாமத்தீ, சலாமத்தீ, சலாமத்தீ என குத்பு நாயகம் 3 முறை கூற உஷ்ணமாகிக் கொண்டிருந்த உடல் சீரான நிலைக்கு வந்தது. இதனால் தான் ஹஜ்ரத் ஹீசாமுத்தீன் (ரஹ்) அவர்களின் பெயருடன் சலாமத்தீ என்பதும் ஒட்டிக் கொண்டது.

## ஹிர்ஸா காஜ்கான் :

ஹஜ்ரத் மதார் ஆலம் (ரஹ்) அவர்களின் கலீஃபாக்களில் ஒருவர் ஹஜ்ரத் காஜா சையத் அபூ முஹம்மது அர்கூன். அர்கூன் என்ற பெயர் அவர்களது பெயரோடு சேர்ந்ததற்குக் காரணம். அவர்கள் திகர் செய்ய ஆரம்பித்தால் அவர்களது உடலிலிருந்து மணியோசை போன்ற மெல்லிய சப்தம் வருமாம். அர்கூன் என்பது அத்தகைய ஓசைக்கும் சொல்லப்படும். அதுமட்டுமல்ல அர்கூன் என்பதற்கு நிறம் என்ற பொருளுமுண்டு. அவர்கள் தரூத் ஓதும் போது அவர்களின் முகம் அப்படியே பொன் நிறமாக மாறி ஜொலிக்க ஆரம்பித்துவிடுமாம். அதனாலும் இப்பெயர் வந்ததாக காரணம் கூறப்படுகிறது.

அவர்கள் யாசீன் நதிக்கரையில் அமர்ந்து குர்ஆன் ஓதுவது வழக்கம். அப்படி ஓதும் போது அலையும் காற்றும் அடிக்காது அப்படியே அதிகமாகிவிடுமாம். இதைக் கண்டே பலர்



முஸ்லிமானதுண்டு. ஒருமுறை இதைக்கண்ட ஹஜ்ரத் ஷாஹ் ஹாமித் அஸ்ஃபஹாய் (ரஹ்) தன் நிலை மறந்து ஹஜ்ரத் அர்கூன் (ரஹ்) அவர்களின் திருவடி சிரம் பணிந்து பிறகு ஹஜ்ரத் அவர்கள் முஆனகா செய்த பின்பே இயல்பு நிலைக்கு வந்தார்கள். ஹஜ்ரத் அவர்களிடம் பைஅத்தும் பெற்றார்கள்.

ஒருமுறை ஹஜ்ரத் சைய்யத் அபூ முஹம்மது அர்கூன் சையத் அபூ துராப் ஃபன்சூர் சையத் அபுல் ஹஸன் தைஃபூர் (ரஹ்) ஆகியோரிடம் (இவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் சகோதரரின் பேரப் பிள்ளைகள் என்பதை நாம் முன்பே கூறியுள்ளோம்) ஹஜ்ரத் காஜி மத்ஹர் கில்லாஷோ் (ரஹ்)..... நீங்கள் நிக்காஹ் செய்து கொள்ளலாமே? நீங்கள் நிக்காஹ் செய்தால் இந்திய மண்ணில் நம் எஜமான் அவர்களின் வம்சம் தழைக்குமல்லவா? என கேட்டார்கள். அம்மூவரும் நாங்கள் எங்கள் பாட்டனார் போலவே மனைவி மக்களற்ற தனிமை வாழ்வில் இருக்கவே விரும்புகிறோம் என்றனர்.

இரு தரப்பும் நீண்ட நேரம் பேசியும் பேச்சுவார்த்தை முடிவுக்கு வரவில்லை. இறுதியாக இவ்விஷயம் ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களிடமே போனது. ஹஜ்ரத் பேசினார்கள். நீங்கள் நிக்காஹ் செய்து கொள்ள வேண்டும். கியாம நாள் வரை இவ்வூரில் என் வம்சம் தழைத்தோங்க அல்லாஹ் தஆலா உங்களை காரணமாக்கியுள்ளான். அதுமட்டுமல்ல சம்புரணம் மிக்க வலிமார்கள் பலரும் நம் வம்சத்தில் வரவேண்டுமென்பது அல்லாஹ்வின் ஏற்பாடு. அவர்கள் மூலம் பலரும் இஸ்லாம் பெறுவதும் பலரும் நேர்வழி பெறுவது அல்லாஹ்வின் நாட்டம்.

இதுகேட்டு அமைதியாயிருந்த தம் பேரன்மார்களை அருகில் அழைத்து கண்ணை மூடச் சொன்னார்கள். கண்களை மூடியதும் லவ்ஹீல் மஹ்பூழைக் கண்டார்கள். அதில் தமது வம்சத்தில் பிறக்கும் சீதேவிகளைக் கண்டார்கள். ஹஜ்ரத் அர்கூன் அவர்களுக்கு சையத் அஹ்மத் என்பாரின் மகளார் சையிதா பீபீ காத்தூன் அவர்களையும் ஹஜ்ரத் அபூதுராப் ஃபன்சூன் அவர்களுக்கு மலிக்புர்ஹான் என்பாரின் மகளார் பீபீ ஆபிதா அவர்களையும் அதன்பின் ஹலப் அருகிலுள்ள சனாரில் தம் உறவுப் பெண் சகீனா பானு அவர்களையும் மணமுடிக்கப்பட்டது.

ஹஜ்ரத் அபுல்ஹஸன் தைஃபூர் அவர்களுக்கும் இரு மனைவிமார்கள். ஒருவரின் பெயர் பீபீ சய்யிதா.இரண்டாமவர் பெயர் தெரியவில்லை.

அர்கூனி ஃபன்சூரி தைஃபூரி எனும் பெயராலும் அவர்களின் கொழுந்துகளான சலூத்தர், சர்மூர் சிக்கந்தர், அப்பன் ஆகிய பெயராலும் அவர்களின் வம்சத்தார் இன்றளவிலும் குறிப்பிடப்படுகின்றனர்.

## விலாயத்து உடைய வலியை விலாயத்தை விட்டு நீக்கியது:

ஸியருல் மதார் மதாரே ஆலம் என்கிற கிதாபுகளில் வருகிறது. ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் குறாசான் நகருக்கு வந்து அங்கு அடங்கி உள்ள ஹஜ்ரத் இமாம் முஸர்ரிலா (ரஹ்) அவர்களின் கபுருரீபை ஜியாரத்து செய்துவிட்டு அங்கு வீற்றிருந்தார்கள். அப்படி இருக்கையில் சையது முஹமது ஜமாலுத்தீன் ஜானே மன் ஜன்னத்தீ (ரலி) அவர்கள் அவ்வூரை சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது அங்கு நஸீமுத்தீன் எனும் வலியை சந்தித்து, எங்கள் நாயகம் ஹஜ்ரத் குத்பு ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் இங்கு வந்துள்ளார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் எனில், அவர்களுக்கு அல்லாஹு தஆலா சகல தத்துவத்தையும் கொடுத்து குத்புகள், வலியவர்கள் இவர்களை அவர்களின் சொல்லுக்கு வழிப்பட்டு நடக்கும்படி உத்தரவு செய்துள்ளது மட்டுமின்றி, ஒரு குதூபை உயர்த்தவும் அப்பதவியை நீக்கக் கூடிய அதிகார தத்துவத்தையும் கொடுத்துள்ளான். அவர்களின் சமூகத்தில் மனு, ஜின்னு முதலிய கூட்டங்கள் எப்போதும் வந்து ஹாலிறாகி அவர்களின் நின்றும் இரு லோகத்தின் சீதேவி தனத்தையும் அருளையும் பெற்றுக்கொண்டு செல்கின்றனர். இவ்வாறிருக்க நீர் அவர்களிடம் சென்று இப்படிப்பட்ட அருள் பாக்கியங்களை ஏன் ஹாஸில் செய்து கொள்ளக்கூடாது என சொன்னபோது, அந்த வலி நஸீருத்தீன் அவரின் சொல்லை சிறிதும் கவனிக்காமல் தற்பெருமை பாராட்டி நானே அல்லாஹ்வின் வலிமார்களில் நின்றும் ஒருவனாக உள்ளேன். ஆகவே நான் அவர்களிடம் போக எனக்கு



தேவையில்லை. எந்த ஒரு மனிதன் தாழ்ந்த மகாமில் உள்ளானோ அவன்தான் அப்படிப்பட்டவர்களிடம் போய், பணிவிடை செய்து உயர்ந்த பதவிகளைப் பெறுவது நல்லது என்றுகூறி, பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். நானாகிறவன் அல்லாஹு தஆலாவின் இஷ்கென்னும் கடலில் முக்குளித்து நீராடி மயக்கம் கொண்டவனாக உள்ளேன் என தற்பெருமை பேசி முடித்தார்.

இதற்கு இடையில் அன்னவருக்கு கொடுக்கப்பட்டிருந்த விலாயத்தின் மகாம் நீக்கப்பட்டு முன்னிருந்த நிலைமைகள் யாவும் மாறுதல் அடைந்துவிட்டது. இந்த பேச்சைக் கேட்ட சையத் ஜமாலுத்தீன் ஜானேமன் ஜன்னத்தியின் மனது மிகவும் வருத்தப்படலாயிற்று. பிறகு அவர்கள் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் சமூகம் சென்று நாயகமே! நான் இந்த ஊரை சுற்றி வருகையில் நஸீருத்தீன் எனும் வலியை சந்தித்து அவர்கள் கூறிய வியங்களைக் கூறிட அதற்கு நஸீருத்தீன் தற்பெருமை பேசிய நிகழ்ச்சியை எடுத்துக்கூறி இவ்வியங்கள் யாவும் தங்களுக்கும் தெரிந்திருக்கும் என சொன்னார்கள். அப்போது நாயகம் ஜிந்தா-ஷாஹ் மதார் (ரலி) அவர்கள் குறுஞ்சிரிப்பு சிரித்தவர்களாக சொன்னார்கள். எனது அருமையான முரீதே! இப்போது அன்னவர் தான் வகித்து வந்த விலாயத்தின் மகிமையை இழந்துவிட்டார். இதோ கூடிய சீக்கிரம் உம்மிடம் வந்து சேருவார் என சொன்னார்கள். அவ்வாறு சொல்லி முடிவதற்கிடையில் அந்த தற்பெருமை பேசிய நஸீருத்தின் அங்கு வந்து நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் பாதத்தில் விழுந்து, சில பைத்துக்களை சொல்ல துவங்கினார். அதன் பொருளாவது :

1. அவுலியாக்களுக்கெல்லாம் நாயகமானவரே நான் தங்களை இலேசாக எண்ணி பெருமை கொண்டதினால் அதற்குத் தக்க தண்டனை பெற்றேன். தாங்கள் நாயகம் ரசூல் (ஸல்) அவர்களின் கிளை கோத்திரத்தில் நின்றும் உள்ளீர்கள். மேலும் தாங்களோ அல்லாஹு தஆலாவின் அவுலியாக்களில் நின்றும் ஒருவராக உள்ளீர்கள் என்பதில் சிறிதும் எனக்கு ஐயமில்லை. தாங்கள் அல்லாஹு தஆலாவின் ஒளிவை பெற்றவர்களாக உள்ளீர்கள். நானே மண்ணுக்கு சமமாக உள்ளேன். ஆகவே இந்த அடிமை செய்த குற்றங்களை மன்னிக்கும்படி மிகவும் தங்களை

வேண்டுகிறேன். தங்கள் கொடை எனும் கிருபை கருணை கடைக்கண்ணால் இந்த அடியேனை ஓர் பார்வை பார்த்து அதுகொண்டு அவன் தனது நிலைமை முன்போல ஆகிவிடுவதை ஆதரவு வைத்தவனாக உள்ளான்.

இவ்வாறு அந்த நஸீருத்தீன் வலிமிக்க அடிபணிந்து விண்ணப்பம் செய்ததை நாயகம் ஜிந்தாஹ் மதார் (ரலி) அவர்கள் கேட்டுவிட்டு நீர் சையது முஹம்மது ஜமாலுத்தீன் ஜானேமன் ஜன்னத்தி (ரலி) அவர்கள் இடம் சென்று உம்மால் ஏற்பட்ட குற்றங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளவும். அப்போதே உமக்கு கொடுக்கப்பட்டிருந்த விலாயத்தின் மகாம் கிடைத்துவிடும் எனக் கூறி முடித்தார்கள். பின்பு அவர் ஹஜ்ரத் ஜானேமன ஜன்னத்தியிடம் வந்து தான் பேசிய மரியாதை குறைவான வார்த்தைகளைக் குறித்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்போது அவர் மதாருல் ஆலமீன் நாயகம் (ரலி) அவர்களின் துஆ பரக்கத்தால் பழைய நிலைமையை அடைந்தார்.

**ரிவாயத்து 1 :** இமாம் அப்து; வஹ்ஹாஃபுஷ்சுறானி (ரஹ்) தங்கள் கிதாபில் எழுதியிருக்கிறார்கள். "ஏ! எனது சகோதரர்களை நீங்கள் அல்லாஹ்வின் அவுலியாக்களை முஹப்பத்து வைத்து அவர்கள் நடந்துவந்த பாதையை பின்தொடர்ந்து அமல் செய்வதை தெரிந்து கொள்ளுங்கள். தவிர அவர்கள் மீதில் கெட்ட எண்ணம் வைத்து மோசம் போகாதீர்கள். ஆகவே அல்லாஹ் தஆலா அவுலியாக்களை லேசாக எண்ணி அவர்களை அலட்சியம் செய்வானாகில் அவன் ஈமான் இழந்துவிடுவான்."

**ரிவாயத்து 2 :** அன்னை ஆயிஷா (ரலி) அவர்களை தொட்டும் ரிவாயத்து ஹதீஸ் குத்ஸியில் அல்லாஹ் தஆலா திருவுளமாகி உள்ளான். (மன் ஆதலி, வரிய்யன்) அதாவது யாதொருவன் எனக்குள்ள ஒரு வலியை பகைத்தானாகில் அவன் என்னுடன் போரிட தயாரானவன் தான் என்பதே. மேலும் ஸவானிஹ் பந்தா நவாஸ் என்ற கிதாபில் வருகிறது. அதாவது ஸூபிய்யாக்கள் கூட்டத்திற்கு தலைமையாசிய ஷெய்கு காஜா ஜுனைதுல் பக்தாதி (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அவுலியாக்கள், ஸாலிஹீன்கள் விஷயத்தை குறித்துப் பேசுவதில்



என்ன பலனுண்டாகும் என கேட்டதற்கு, அன்னவர்களின் விஷயத்தைப் பற்றி பேசுவதினால் கல்பின் இருள் நீங்க தெளிவு உண்டாகுவதுமின்றி துக்கம் முதலியவைகள் யாவும் அகன்று அல்லாஹ்வின் பாதையில் நடப்பதற்கு ஹிம்மத்தும் உண்டாகும் எனப் பதில் சொன்னார்கள்.

இன்னும் சுல்தானில் மாயிகு நிஜாமுத்தீன் அவுலியா (ரஹ்) சொன்னதாவது : "யாராகிலும் ஒருவன் அவுலியாக்கள், ஸாலிஹீன்கள் சரித்திரங்களை கேட்பானாகில் அவனின் கல்பில் அல்லாஹ் தஆலாவின் முஹப்பத்தும் ஆசையும் அதிகப்பட்டு நல்வழியை துடர்ந்து நடப்பவனாகிவிடுவான் என்றார்கள்."

**ரிவாயத்து 3 :** நாயகம் காஜா சையது முஹம்மது பந்தா நவாஸ் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: ஒருநாள் இமாம் ஷாஃபியீ இமாம் அஹ்மதுப்னி ஹம்பலி (ரஹ்) இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கையில் அவ்வழியாக ஹஜ்ரத் பைஷானுர்ராயி (ரலி) போகவும் இமாம் ஷாபிஃயீ (ரஹ்) இமாம் ஹம்பலி (ரஹ்) இடம் நான் இந்த அறியாத ஸூஃபியிடம் ஒரு மஸ்அலா கேள்வி கேட்க நாடுகிறேன் என சொல்லி அதற்கவர்கள் இவர்களெல்லாம் மார்க்க நீதிநெறிகளை அறியாதவர்கள். ஆதலால் அவர்களிடம் எந்தக் கேள்வியும் கேட்பது சரியல்ல என சொன்னபோது அதைப் பொருட்படுத்தாது ஷாஃபீயீ இமாம் ஸூஃபி பைஷானுர்ராயி (ரஹ்) அவர்களிடம் ஸூஃபியே ஐந்து வக்து தொழுகையில் ஒரு வக்து தொழுகை தவறிவிட்டது. அது இன்ன வக்துதான் என தெரியாவிட்டால் அவன் என்ன செய்வது என கேட்க, பைானுர்ராயி (ரஹ்) அவர்கள், இப்படி மறதிக் குடிக்கொண்டவனுக்கு 5 வக்து தொகையும் தர்தீபாக களாச் செய்ய வேணும் என பதில் கூறினார்கள். அப்போது இமாம் ஷாஃபீயீ (ரஹ்) அவர்கள் இந்த பதிலை கேட்டு மதிமயங்கி ஸூஃபியாக்கள் கூட்டத்தில் உள்ள பைஷானுர்ராயி (ரஹ்) இல்மு இல்லாதவராக இருந்து அன்னவரின் நிலைமையே இப்படி எனில் அவர்களில் இல்மு அறிந்த உலமாக்கள் மஷாயிக்கீன்கள் நிலை எப்படி இருக்கும் என அவர்களை புகழ்ந்து பேசினார்கள். ஆகவே இப்படிப்பட்ட அவுலியாக்களாகிய நாதாக்களின் நடத்தையை பற்றி பேசுவதும் அவர்களுடன் சேர்ந்திருப்பதும் இபாதத்திற்கு மூலாதாரமாக

இருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

**மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரலி) தனது மஸ்னவி ரீபிலும் இதுகுறித்து சில பைத்துகளை சொல்லியுள்ளார்கள். அதன் பொருளாவது :**

1. சிறிது காலம் அல்லாஹ் தஆலாவின் அவுலியாக்களான பெரியோர்களுடன் சேர்ந்திருப்பது முகத்தாட்சி இல்லாமல் நூறு வருடம் வணங்கும் வணக்கத்தைவிட மேலானது. அதாவது ஒருவன் அன்னவர்களின் பணிவிடையிலிருந்து வருவானாகில் அவனுக்கு இபாதத்தின் இன்பம் தெரிய வந்து ரியாலத்து, முஜாஹதா முதலிய வணக்கங்களில் அவர்களின் பாதையை தொடர்ந்து அமல்செய்து முக்திப் பெறுவான் என்பதாம்.
2. நீ திண்ணமாகிய பாறாங்கல்லுக்கு ஒப்பாக இருந்தாலும் அதாவது நீ எவ்வளவு கீழ் பதவியை வகித்து வந்த போதிலும் சரி பெரிய மஹான்களை அடுத்திருந்தாயானால் மர்மர் என்ற கல்லுக்கும் ரத்தினக் கல்லுக்கும் ஒப்பானவனாகுவாய். அதாவது உயர்தர பதவியை பெற்றவனாகிவிடுவாய்.
3. உன்தன் சிநேகிதம் சாலிஹானவர்களோடு இருந்தால் நீயும் சாலிஹானவன் ஆகிவிடுவாய். அப்படியன்றி உன்தன் சேர்மானம் அறிவில்லாதவர்களுடன் இருக்குமேயானால் நீயும் அவர்களை போல முட்டாளாகிவிடுவாய்.

**ரிவாயத்து 4 :** ஹதீஸ் ஷரீபில் வந்துள்ளது. "அஸ்ஸுஹ்பது து அஸ்ஸிரு" அதாவது சேர்மானம் எவ்வாறிருக்குமோ, அவ்வாறே குணபாடு அமையும் என ரசூல் (ஸல்) அருள் செய்துள்ளார்கள். இன்னும் அல்லாஹ் தஆலா தன் திருமறையில் 11 ஜுஸ்விலே கூறுகிறான் : "ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ் தஆலாவை பயந்து தக்வா முதலிய நல் அமல்களை எடுத்து நடந்துகொள்வதுடன் அல்லாஹ்வுக்கு உகந்த உண்மையான சாதிகீன்களுடன் இருந்து வருவதை தெரிந்து கொள்ளுங்கள்". ஆகவே யாதொருவன் அல்லாஹ்வின் அவுலியாக்கள் முஹப்பத்து வைத்து அன்னவர்கள் நடந்து வந்த பாதையை



பின்தொடர்ந்து நல் அமல் செய்து வருவானாகில் அவன் இரு லோகத்திலும் பெரிய பதவிகளை பெற்றவனாகி மறுமை நாளையில் கவனப்பதியில் இருப்பார்கள்.

**ரிவாயத்து 5 :** அனஸ் (ரலி) அவர்களை தொட்டுத் ரிவாயத்து உள்ளது. அதாவது ஒரு மனிதன் ரசூல் (ஸல்) அவர்கள் சந்நிதானத்தில் வந்து அல்லாஹ்வின் ரசூலே, கியாம நாள் எப்போது வருமென்று கேட்டார். அதற்கு அவர்கள், மனிதனே! உமக்கென்ன கேடு, நீ அதற்காக என்ன அமல்களை தயாரித்து வைத்துள்ளீர் என்று கேட்க... அவர் நாயகமே நான் எந்த ஒரு அமலையும் தங்கரியமாக்கி வைக்கவில்லை. ஆயினும் நான் அல்லாஹ் தஆலாவையும் அவன் ரசூலாகிய தங்களையும் முஹப்பத்து வைத்துள்ளேன் என்று சொல்ல, நாயகம் ரசூல் (ஸல்) சொன்னார்கள் : "அந்த மஅமன் அஹபப்த" அதாவது நீர் யாரை பிரியம் வைத்திருந்தீரோ அன்னவர்களுடன் ஆயிருப்பீர் என்று அருள் செய்தார்கள் (மிஷ்காத்).

மேலும் அல்லாஹ் தஆலா தன் திருமறையில் 6ஆவது ஜுஸ்வில் கூறுகிறான். "ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ரப்பை பயந்து அவனளவில் முடுகுதல் பெறுவதற்காக பொலிவான அமல்களை செய்வது கொண்டு வஸீலா எனும் சிபாரிசை தேடி அவன் பாதையில் ஜிவாது செய்யுங்கள். அவ்வாறு செய்வது கொண்டு நீங்கள் இரு லோகத்திலும் ஜெயம் பெறுவீர்கள்." எனவே ஒரு அடியான் ஈடேற்றம் பெற நாடுவானாகில் அவன் நான்கு வஸ்துக்களைப் பேணி நடப்பது அவசியமாகும். 1. ரீப்ரு ஷிர்க் வந்து அணுகாமல் தன் ஈமானை காப்பாற்றிக் கொள்வது. 2. தக்வா - அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களை தவிர்த்து நடப்பது. 3. அல்லாஹ்தஆலா அளவில் முடுகுதல் பெற்றவனாகிறதற்காக வேண்டி நேர்வழி பெற்ற ஒருவரை தேடிக் கொள்ளுதல். 4. தன் நப்ஸின் துர்குணங்களை அகற்றி நற்குணங்களை துடர்ந்து நடக்கும்படி நப்ஸை ஏவுகிறதும், ஷைத்தான், துன்யா இவைகளின் ஆசைக்கு வழிபடாமல் மாறுதல் செய்து பகைவர்களோடு போர் புரிவது இவைகளேயாம்.

ஆகவே ஒருவன் எல்லா இல்முகளையும் கற்று எத்தனை

பேர்களை தோழமை பிடித்திருந்தபோதும் சரி, ஷர்உ படி நேர்வழியை கொண்டு காமிலான ஷெய்கிடம் தப் நப்ஸை மய்யத்தை போலாக்கி சீர்திருத்தி ஆக்கினாலே ஒழிய அவன் காமிலான் பதவியை பெற்றவனாக மாட்டான். இதற்காக தான் ஹஜ்ரத் செய்கு நஸீருத்தீன் மஹ்மூது ரோன் (ரஹ்) ஒரு பைத்தில் சொல்கிறார்கள். அதாவது "ஆய்! வாலிபனே! நீ ஒரு காமிலான ஷெய்கை தொடர்ந்து கொள்வது அவசியம் ஆகும். அவர் உனக்கு அல்லாஹு தஆலாவின் நற்பாதையை காட்டி அவனளவில் முடுகுதல் பெறுகின்ற வழியையும் காண்பித்து கொடுப்பார். அதனால் நீ மேலான பதவியை பெற்று கொள்பவனாகுவாய்" என்பதாம்.

ஆகவே மனிதனே! நீ வலிமார்கள் நடந்த பாதையை பின்பற்றி நடக்காமல் சோம்பேறித்தனம் கொண்டு இருப்பதுடன் உந்தன் செயல்களை அவர்களின் செயல்களுக்கு சமமாகப் பேசி மோசம் போகிறாய். இதற்கு உவமையாக மஸ்னவி ஷரீபில் மௌலானா ரூமி அவர்கள் சில பைத்துக்களை சொல்லியுள்ளார்கள். அதாவது அவுலியாக்களின் செயல்கள உந்தன் செயலைப் போல் எண்ணிக் கொள்ளாதே. மிகுதியான மக்கள் அவுலியாக்களான நாயகங்களின் சொல் செயல் நிலைமைகளை முற்றிலும் நன்றாய் அறியாததினால் அவர்கள் சொல்லும் சொற்களுக்குப் பலவகை கருத்துக்கள் வைத்து வழிதவறி போய்விட்டார்கள். ஆகவே அந்த நாதாக்கள் சில நேரங்களில் ஜதபின் நிலமையில் புத்தி மயங்கி பிசகான சில வார்த்தைகளை மொழிந்தார்கள் என நீயும் அவ்வாறே மொழிந்து கெட்டுபோய் விடாதே. மேலும் அன்னவர்கள் நடந்த பாதையை பின்பற்றி நடந்து ஜெயம் பெற்று கொள்வாயாக! ஆமீன்! ஆதலால் அல்லாஹு தஆலா நம்மனைவர்களுக்கும் அவுலியாக்களின் அகமியங்களை நல்லருள் புரிந்து நேர்வழியை தொடர்ந்து நடக்க ஹிதாயத்தையும் கொடுப்பானாக. ஆமீன்.

## குத்புல் மதர் (ரஹ்) அவர்களின் கராமத்துக்கள் :

"அக்பாருல் அக்யார்" என்ற கிதாபில் ஷெய்கு அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி (ரஹ்) அவர்கள் எழுதி உள்ளார்கள். குத்புல்



மதார் ஜிந்தா மதார் (ரலி) அவர்கள் ஸமதிய்யத்தின் மகாமில் சேர்ந்தது முதல் அன்னவர்களின் திருமுகத்தில் நூரே முஹம்மதியாவின் ஒளிவு வெளியாகி அதானது சூரியனைப் போல உதித்து பிரகாசித்து வந்தது. அதனால் அவர்கள் முகத்தின் ஒளியை பார்க்க எவரும் சக்தி பெறவில்லை. அப்படியே அந்த ஜோதியை கண்டாலும் அவர்கள் அக்கணமே கீழே விழுந்து சாஷ்டாங்க கோலத்தில் ஆகிவிடுவார்கள். அதனால் அவர்கள் தங்கள் முகத்தில் முக்காடு போட்ட வண்ணமாயிருந்தார்கள்.

மேலும் ஸியருல் மதார் என்ற கிதாபில் வருகிறது. குத்பு நாயகம் ஜிந்தாஹ் மதார் (ரலி) அவர்கள் 72 தடவை லைலத்துல் கத்ரு இரவைக் கண்டார்கள். அதனாலேயே எவரும் அவர்களின் முகத்தின் ஒளியை பார்க்க எவரும் சக்தி பெறவில்லை. அப்படியே ஒருவர் பார்த்தாலும் அவன் அக்கணமே உணர்வற்று கீழே விழுந்துவிடுவான். ஆகவே அவர்கள் தினமும் முஸாபிறாகவே இருந்து கஸ்ரு தொழுகையை தொழுது வந்ததாக ஒரு பைத்தில் சொல்லி வருகிறார்கள். அதன் பொருளாவது, "நாம் ஹிந்து ராஜ்ஜியத்திலேயே நிரந்தரமாக இருந்து வருவதை நாட்டம் செய்யவில்லை. அப்படி இருக்க நேர்ந்தாலும் கியாம நாள் வரை முஸாபிறாக இருந்து கஸ்ரு தொழுகையை தொழுது வருவோம்" என்பதாம்.

மேலும் எப்போது குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் ஸமதிய்யத்துவின் மகாமில் சேர்ந்தார்களோ அதுமுதல் கொண்டு அல்லாஹு தஆலாவின் தஜல்லியாத் ஜோதி அவர்களின் முகத்தில் வெளியாகத் தொடங்கினதும் அன்று முதல் அவர்களை எவரும் பார்க்கின்ற சக்தியற்றவர்களாகிவிட்டனர். தவிர இந்த மகாமில் தரிபட்டிருப்பவர்கள் நாடுவார்களாயின் தங்கள் வயது முழுமையும் கூட திண்ணாமல், குடிக்காமல் இருந்துவிடுவார்கள். இப்படிப்பட்ட வல்லமை அவர்களுக்குண்டாம். இதனுடைய முழு விவரங்கள் "கஷ்புல் அஸ்மா பீ ஷர்ஹில் அஸ்மா என்ற கிதாபில் உள்ளது.

ஒருநாள் குத்பு நாயகம் ஜிந்தா மதார் (ரலி) அவர்களின் சட்டைக் கையில் திடீரென நீர்த்துளிகள் வந்து விழுந்தன. அப்போது

அங்கிருந்தவர்கள் அதபு மரியாதையை பேணி அவர்களிடம் அதைக்குறித்து கேட்காமல் இருந்துவிட்டார்கள். பிறகு நாயகம் (ரலி) அவர்கள் எதிரே உள்ள மக்களின் மனதில் உலவிய ஊசலாட்டத்தை தெரிந்து இதன் மர்மம் உங்களுக்கு சில நாட்களுக்குப்பின் தெரியவரும் என கூறினார்கள். அவ்வாறே 6 மாதக் காலத்திற்கு பிறகு ஒரு வியாபாரி குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் சமூகத்தில் வந்து சில பொற்காசுகளை முன்னால் எடுத்து வைத்துவிட்டு, தனக்கு நடந்த சம்பவத்தை சொல்லத் தொடங்கினார்.

நாயகமே! நான் ஏறிவந்த கப்பல் கடலில் மூழ்கும் நிலையில் இருந்தது. அத்தருணத்தில் நான் தங்களைக் கொண்டு வஸிலா தேடினேன். அப்போது நானும் என் செல்வமும் கப்பலும் ஹலாக்கை விட்டும் அல்லாஹ் தஆலா காப்பாற்றினான். அதன் நன்றிக்காக என் லாபத்தினில் நின்றும் சரி பாதியை தங்களுக்கு ஹதியாவாக கொண்டு வந்துள்ளேன் எனச் சொல்லி வந்தார். அப்போது நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் அங்கு இருந்த மக்களுக்கு சொன்னதாவது : முன்பு நீர்த்துளி பட்டபோது உங்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் தீர்ந்ததா? என கேட்டுவிட்டு குத்பு ஸ்தானத்தை வகிப்பவர் தனது இடத்தை விட்டும் அகலமாட்டார். அதன் கருத்தாவது குத்புமார்கள், தங்கள் ஸ்தானத்தில் இருந்துகொண்டே எந்த வேலையையும் செய்து முடிப்பார்கள் என்பதே இப்படிப்பட்ட நடபாகங்களை அநேக அவுலியாக்களும் செய்து வந்துள்ளார்கள்.

இன்னும் ஹஜ்ரத் ஷெய்கு நூர் குத்பு ஆலம் (ரஹ்) அவர்களைத் தொட்டும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளது. ஒருநாள் அன்னவர்கள் சுல்தான் இப்ராஹீம் ஷர்கீ பாதுஷாவின் மஜ்லிஸுக்கு வந்து இருக்கையில் காஜி ஷிஹாபுத்தீன் சொன்னார்கள் குத்பானவர் தங்கள் இல்லிடத்தை விட்டும் அகலமாட்டார்கள் என்றார். அப்போது ஷெய்கு நூர் குத்பு ஆலம் (ரஹ்) அவர்கள் சொன்னார்கள் : குத்பு தன் இல்லிடத்திலிருந்துதான் வருகிறார். ஆயினும் அங்கு ஆள் அனுப்பி பார்த்தால் அவர் அங்கு இருப்பதும் இல்லாததும் உங்களுக்குத் தெரியும் என்றார்கள். அவ்வாறே தூதனை



அனுப்பிய பார்க்கையில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரஹ்) தங்கள் படுக்கையின் பேரில் தான் உட்கார்ந்திருந்தார்கள்.

நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் முரீதீன்களில் ஒருவராகிய வங்காள தேசத்தில் வசித்து வந்த ஹாஜி இப்ராஹிமுல் ஹிஜாஸி என்பவரின் மருமகனுமாகிய தஸ்துர்கான் எனும் பெயரை உடைய ஹாஜி சுலைமான் என்பவர் இல்மேஸீமியா கைரு, ஷர்ரு முதலிய மறைவான விஷயங்களை அறிகின்ற வகையான இல்மை கற்றுக்கொள்வதற்காக வேண்டி அவர் ஓர் சன்னியாசியிடம் வந்து அவனுக்கு மிகுந்த பணிவிடைகள் செய்து வந்தார். அப்படி இருக்கையில் ஒருநாள் அவர் அந்த சன்னியாசியின் கூஜாவில் தண்ணீர் கொண்டு வருவதற்காக கையில் அதை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு போய் கொண்டிருக்கும்போது வழியில் அவர் நாயகம் (ரலி) அவர்களை சந்திக்கவும் அவர்களும் தங்கள் கூஜாவையும் அவர் கையில் கொடுத்து இதிலும் நிரம்ப தண்ணீர் எடுத்துக்கொண்டு வாரும் எனச் சொல்ல அதற்கவர் அவர்களின் கூஜாவையும் வாங்கிக் கொண்டு ஆற்றுக்குப் போய் சேர்ந்தார்.

அப்போது அங்கு குத்புல் மதார் (ரலி) அவர்கள் தங்களை ஒரு வாலிபனின் தோற்றத்தில் அவரின் பார்வையில் தோன்றினார்கள். பின்பு செய்கு சுலைமான் இரு கூஜாவிலும் நீர் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவரின் பார்வைக்கு ஏதோ ஃபக்கீர் ஒருவர் அவர்கள் சமூகத்திலிருப்பதை கண்டதும் அவர் மாயமாய் மறைந்திட்டார். பின்பு ஷெய்கு சுலைமான் நாயகம் (ரலி) அவர்களிடம் வந்து நாயகமே, இப்போது இங்கிருந்த பக்கீரை என்ன செய்தீர்கள் என கேட்க, அதற்கவர்கள் நீர் ஃபக்கீரை தேடாதீர் என சொல்லி தங்களை அந்த வாலிபனின் தோற்றத்தில் வெளியாக்கி காண்பிக்க அக்கணமே அவர் திடுக்கிட்டு போனார். அப்போது குத்புல் மதார் (ரலி) அவர்கள், நான் உமக்கு எந்தன் அசல் கோலத்தை வெளியாக்கிக் காண்பித்தேன் என சொல்லி, நீர் இலகுவான் ஓர் இல்மை படித்துக் கொள்வதற்காக வேண்டி ஒரு காபிருக்கு பணிவிடை செய்து வருவது முற்றிலும்

தவறு எனக்கூறி அந்த கூஜாவை எறிய சொன்னவுடன், அவரும் அதன்படியே செய்ய நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் பணிவிடையில் இருந்து கீமியா, ஸீமியா முதலிய இல்முகளைப் படித்து முரீதாகி கிர்கா எனும் பரிவட்டத்தைக் கிடைக்கப் பெற்றார்.

அதன் பின்னர் ஷெய்கு சுலைமான் அந்த கிர்கா எனும் முபாரக்கான உடுப்பை ஷெய்கு சந்தன் என்பவருக்குக் கொடுத்தார்கள். பின்பு அவர்கள் அதை குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் காரண கராமத்து சரித்திரங்களை எழுதிய "துஹ்பதுல் அபுறார் பீ மனாகிபி குத்புல் மதார்" என்ற கிதாபை கோர்வை செய்தவர்கள் தகப்பனார் அவர்களுக்கு நன்கொடையாய் கொடுக்கவும் அவர்கள் அதைப் பேணுதலாக வைத்திருந்து, இறுதியில் வஸியத்து செய்தார்கள். என்னவெனில் இந்த முபாரக்கான கிர்காவை நான் வபாஃத்தானபின் எனது கபுரில் வைத்து அடக்கம் செய்துவிடுங்கள் எனக் கூறினார். அதன்படியே அந்த முபாரக்கான கிர்காவை கபுரில் அவர்களுடன் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

மேலும் ஷெய்கு சுலைமான் அவர்கள் துன்யாவில் வெகுகாலம் ஜீவித்திருந்து யாத்திரை செய்து கொண்டும் துன்யாவை வெறுத்தவர்களுக்கு மட்டும் பைஅத் கொடுப்பவர்களாயிருந்து ஷெய்கு சந்தன் அவர்களை தர்பியத்து செய்வதற்காக ஜவன்பூர் வந்து தங்கி பின் பீகார் எனும் நகரின் எல்லையில் உள்ள மல்வாஹ் எனும் ஊரில் வந்து வபாத்தானார்கள். அவர்களை பந்தகீ மியான் ஷெய்கு பதீ தமீப் என்ற மக்பறா கட்டடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

ஒருநாள் ஷிஹாபுத்தீன் என்பவர்கள் குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களிடம் பைஅத் வாங்கும் விஷயத்தில் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கும் போது, குத்புல் மதார் (ரலி) அவர்கள் யாதொருவன் என்னிடம் அல்லது என் தரீக்காவில் கலீபாவாக இருந்து வருகிறவர்களிடம் பைஅத் கொண்டு சிறப்பிக்கப்பட்டானாகில் நாம் அவனுக்கு 7 தலைமுறை வரையில் பிணையாக இருப்போம். மென்மேலும் நமது தரீக்கா கியாம நாள் வரையிலும் ஒளியாக வருவதுமின்றி அதில் வந்து



சேர்ந்தவர்கள் பெரிய பதவி மர்த்தபாக்களைப் பெற்றவர்களாவார்கள் என சொல்லி முடித்தார்கள்.

நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்களின் காத்திமை, நவ்வாஹ் எனும் ஊர் அருகில் உள்ள சித்தூரில் தங்கி அல்லாஹுஃ தஆலாவை இபாதத்து செய்து வரும்படி அனுப்பி வைத்தார்கள். அந்த ஊர் வந்தபோது அங்கிருந்த மாந்திரீகக்காரர்களில் சிலர் காத்திமை சந்தித்து அவருக்கு தங்களது மாந்திரீகத்தின் வல்லமையினால் ஒரு ஆட்டுக்கிடாயை அவரின் பார்வைக்குத் தோன்ற செய்தார்கள். இதனால் அந்த காத்திம் என்ன செய்வதென குழம்பினார். இந்த வியத்தை தனது கஷ்பினால் அறிந்த நாயகம் (ரலி) அவர்கள் உடனே சித்தூர் புறப்பட்டு வரும் வழியில் மாந்திரீகக்காரர்களின் இரு பெண்களைக் கழுதையாக மாற்றும்படி அல்லாஹ்விடம் துஆ செய்ய அவ்வாறே ஆனார்கள். பிறகு அந்த மாந்திரீகக்காரர்கள் அப்பெண்களைத் தேடித் திரிந்து பார்க்க அவர்கள் கழுதையின் நிலையில் இருப்பதை உணர்ந்து குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களிடம் வந்து தங்களின் குறைகளை மன்னிக்கும்படி வேண்டியும், மேலும் அப்பெண்களை உருமாற்றித் தரவும் வேண்டினர். அதற்கு நாயகம் (ரலி) அவர்கள் அனைவருக்கும் நல்லுபதேசம் செய்து இஸ்லாமாக்கி அவ்விரு பெண்களையும் பழைய நிலைக்கு மாற்றினார்கள்.

'மதாரே ஆலம்' எனும் நூலில் குத்பு நாயகம் ஜிந்தாஹ் மதார் (ரலி) அவர்கள் நைசாபூர் என்ற ஊரில் வந்திருந்தபோது அங்குள்ள காபிர்கள் தினமும் பெண் விக்ரகம் ஒன்றில் நகைகள் போட்டு சிங்காரித்து பூஜைகள் செய்து வந்தார்கள். இந்நிலையில் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் அப்துல்லாஹில் மிஸ்ரி என்பவருக்கு உத்தரவு செய்து, நீர் அங்கு சென்று முள் ஒன்றை எடுத்து அந்த விக்கிரகத்தின் கையில் குத்திவிட்டு வந்திடுமென சொல்ல, அவர் போய் அவ்வாறு செய்ததில் அது அல்லாஹ் தஆலாவில் வல்லமை கொண்டு அந்த சிலை பூமியினுள் புதைந்துவிட்டது. பின் காபிர்கள் சிலை காணாமல் போனதை அறிந்து, ஒரு முஸ்லீம் மஹான் இங்கு வந்து சிலையின்

கையில் முள் குத்தியதால் சிலை மாயமாய் மறைந்துவிட்டது என கூறி பிரபல்யப்பத்தினர்.

அதன்பின், காபிர்கள் அனைவரும் அப்துல்லாஹில் மிஸ்ரி (ரஹ்) அவர்களை தேடியவர்களாக நாயகம் (ரலி) அவர்களின் தர்பார் வந்து பெரும் கூச்சல் போட்டனர். சிலைக்கு நஷ்ட ஈடு வாங்குவதற்கு நாங்கள் இங்கு வந்துள்ளோம் எனக் கூறினர். அப்போது குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் காபிர்களிடம் நல் உபதேசம் செய்து, அதைக் கேட்டு அவர்கள் மேலும் கோபமுற்றனர். இந்த காபிர்களின் மனது இருள் எனும் குஃபுரினால் நிறைந்துள்ளது; அதை நீக்கினால்தான் அவர்கள் திருந்துவார்கள் எனும் யோசனையில் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்களின் திருமுகத்தின் போர்வையை நீக்கி, ஆய்! ஜனங்களே! எனது நாயன் மனிதனால் படைக்கப்பட்டவனில்லை. அவன் சகலரையும் படைக்கும் இறைவன். அவனுக்கு இணை, துணை இல்லை. அவன் தனித்தவன். இன்னும் இவ்வுலகில் காணும் சிருஷ்டிகள் அனைத்தும் அவனாலேயே படைக்கப்பட்டது. ஆகவே நானும் அவனும் அடியார்களில் ஒருவன் எனச் சொல்லி தங்களின் திருமுகத்தின் ஜோதியினை காட்ட, அன்னவர்கள் அதைப் பார்க்க சக்தி பெறாமல் உணர்வற்று கீழே விழுந்தனர். இதற்குள் அவர்களுக்கு இருந்த கோபம் நீங்கிவிட்டது.

அதன்பின் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்கள் முரீதுகளுக்கு அல்லாஹு அக்பர் என சப்தமாக தக்பிர் கூறுங்கள் எனக் கூற, அனைவரும் தெளிவு பெற்று, காபிர்கள் அனைவரும் இஸ்லாமாகிவிட்டார்கள். ஆகவே நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் இவ்வாறுதான் காபிர்களை இஸ்லாம் மார்க்கத்தில் அழைத்து இஸ்லாமை அதிகமாக பரவச் செய்து வந்தார்கள்.

'மதாரே அஃலம்' என்ற கிதாபில் வருகிறது. ஒருநாள் குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்களின் முரீதீன்களோடு ஒரு மஸ்ஜிதில் போய் இஃதிகாஃப் இருந்து கொண்டிருக்கையில் பாங்கு சொல்லப்பட்டது. அப்போது



மௌலானா ஹுஸைன் என்பவர் தொழுகிறதற்காக மஸ்ஜிதிக்கு வந்தார். பின் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களே இமாமாக நின்று அல்லாஹு அக்பர் எனச் சொல்லி தக்பீர் கட்டினார்கள். இச்சொல்லின் வலுப்பம் அன்னவரின் கல்பில் தாவி அவர் தன் நிலைமையை இழந்து உணர்வற்றவராக கீழே விழுந்தார். இந்த சப்தத்தை ஜமாஅத்தில் வந்து கலந்து கொண்ட மற்றவர்களும் கேட்டு அவர்களுக்கும் ஓர்விதமான நிலைமை உண்டாயிற்று. பின்பு தொழுது முடிந்த பின் அவர்கள் மௌலானா ஹுஸைனை தூக்கிக் கொண்டு குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் முன் கொண்டு வந்தார்கள்.

அப்போது நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்கள் முபாரக்கான கையை அவரின் நெஞ்சில் தடவியதும் உடனே அவர் தெளிவு பெற்று, அவர்களிடத்தில் பைஅத்துப் பெற்று கலீபா ஸ்தானத்தை வகித்தவரானார். இந்த நிலையில் மௌலானா காமில் என்பவர் தனது உஸ்தாதாகிய மௌலானா ஹுஸைனை தேடினவராக அங்கு வந்து தன் உஸ்தாதின் நிலையைக் கண்டு அவரும் நாயகம் (ரலி) அவர்களிடத்தில் பைஅத்தும் பெற்றவரானார்.

ஷாஹ் பஜ்லுல்லாஹி பதக்ஷானி என்பவருக்கு அல்லாஹு தஆலாவின் பாதையில் நடந்து முக்திபெற ஆசை உண்டாகிய போது, அவர் ஹஜ்ரத் மக்தூம் மீர் அஷ்ரப் ஜஹாங்கீர் (கத்தஸல்) அவர்களிடம் ஆஜராகி, பைஅத் பெற்றுக்கொள்ள நாடினார். அப்போது அவர்கள் இந்தக் காரியம் நம்மைக் கொண்டில்லை. அது ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களை கொண்டுள்ளது. அவர்கள் ஜான்பூரில் வந்து நாயகம் (ரலி) அவர்களிடம் ஆஜரானார். அப்போது குத்பு நாயகம் (ரலி) அவர்கள் அன்னவரை நோக்கி "எனது அருமையானவரே! நீர் நமது தரீக்காவில் புகுவதை நாடுகிறீர். அதானது கரையில்லாத சமுத்திரமாக இருப்பதுமன்றி அதில் புகுகிறவர்கள் வேதனை, சோதனை முதலிய பலாய்களுக்கு ஸபுர் செய்துதான் கரைச் சேர முடியும். அப்படிச் செய்தவர்கள்தான் என்றைக்கும் சௌகரியமும், ஆரோக்கியத்யையும் பெற்றவர்களாவார்கள்" எனச் சொன்னவுடன் அவரின் கல்பில் போய் தாவியதும், அதிக ஆசை உண்டாகி அவர்

கலப்பற்றதிலான நாட்டம் உண்டாகி, அவர்களிடம் பைஅத்துப் பெற்று கலிபாவாக இருந்து கார்னீகம் உடையவர்களாயிருந்தார்கள்.

ஒருநாள் சீன தேச அதிகாரியான பக்பூர் எனும் அநியாயக்காரன் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் கலிபாக்களில் ஒருவராகிய அப்துல் வாஹிது என்பவர்களின் சமூகம் வந்து ஆஜரானான். அப்போது அவர்கள் அவனை திரும்பி பார்க்கவில்லை. அதனால் அவன் கோபம் கொண்டு தன் இல்லத்திற்கு வந்து ஒரு தூதனை, இனி கலீபா அப்துல் வாஹித் அவர்களை அந்த ஊரின் எல்லையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என கட்டளை இட்டு அனுப்பினான். தூதன் வந்து கலீபாவிடம் இதைச் சொன்னதும் அவர்கள், உலகம் முழுவதும் எங்கள் அரசராகிய நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் அரசாங்கத்தின்கீழ் இருக்க நமக்கு கட்டளையிட இவர்கள் யார்? அவர் கட்டளைப்படி தம்மால் வெளியேற முடியாது எனச் சொல்லிவிட்டார்கள்.

இதனைக் கேட்ட அத்தூதன் அவர்களை கெடுதியாக பேசத் தலைப்பட்டான். அக்கணமே அவனது நாக்கு வீக்கம் கொண்டு வெளியே வந்து தொங்கிற்று. இதை அறிந்த அந்த அதிகாரி பக்பூர் நமக்கு இந்த ஃபக்கீரின் சாபம் பிடித்துக் கொண்டதெனச் சொல்லி, அவர்கள் சமூகம் வந்து, தன் குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டினான். அப்போது கலீபா, நீ மக்களை அநியாயம் செய்வதை விட்டும் விலகிக் கொள்; உனக்கு சவுக்கியம் உண்டாகும் என உபதேசிக்க, அவன் அதன்படி தௌபாச் செய்து மீண்டான். உடனேயே அவனது நாக்கு வீக்கம் தெளிந்து சுகமடைந்தான்.

ஷாஹ் லுத்ஃபுல்லாஹ் சாஹிப் என்பவர் வாலிப காலத்தில் நாயகம் ரசூல் (ஸல்) அவர்களைக் கனவில் தரிசித்தபோது அவர்கள் அன்னவர்களை, ஆய்! லுத்ஃபுல்லாஹ் நீர் குத்பு ஷாஹ் மதார் (ரலி) அவர்களின் பணிவிடையில் சென்று இருலோகத்தின் சீதேவி தனத்தை ஹாசில் செய்து கொள்ளுமாறு கூறினார்கள். அதன்பின் அவர்கள் கனவு கண்டு விழித்து, அவர்களை தேடி புறப்பட்டுப் போகையில், வழியில் ஒரு வியாபாரியை சந்தித்து அவருடன்



'நீம்ரோஸ்' என்ற ஊருக்குச் சென்றார்கள். அந்த சமயத்தில் குத்பு நாயகம் (ரலி) அவர்கள் அவ்வூரில் வந்து தங்கி மக்களுக்கு ஹிதாயத் எனும் நேர்வழி காட்டியவர்களாக இருந்தார்கள்.

இறுதியாக லுத்ஃபுல்லாஹ் சாஹிப் அவர்கள் அந்த வியாபாரியுடன் குத்பு நாயகம் (ரலி) அவர்களின் சமூகம் வந்து இருந்தார்.

அப்படி இருக்கையில் ஒருநாள் அவர்களின் கிருபை பார்வை அன்னவரின் மீதில் விழவே அவருக்கு ஒருவிதமான நிலைமை ஏற்பட்டு வஜ்தெனும் ஆசை பொங்கி, அவர்களிடத்தில் முரீதாகி சில காலம் வரையில் அவர்களின் பணிவிடையில் இருந்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு ஜத்புடைய நிலை உண்டாகி சில்லாவின் வைக்கப்பட்டவரானார். பின்பு அவர் நஜப் அஷ்ரப் என்ற ஊருக்கு போனது முதல் அவர் உண்ணவும் குடிப்பதுமில்லை. இப்படியே காலத்தைக் கழித்து வந்தார். மேலும் அன்னவரின் உடுப்புகள் அழுக்காகிவிடுமானால் அதை நெருப்பில் இட்டு சுத்தப்படுத்தி வருகிறவராயிருந்தார்கள். ஆகவே அன்னவரை குத்பு நாயகம் (ரலி) அவர்கள் அதிகமாக முஹப்பத்து வைத்து வந்தார்கள்.

## சையது அபூ முஹம்மது, காஜா அர்கூன் கலிஃபா ஸ்தானத்தைப் பெற்றது

'ஸியருல் மதார்' என்ற கிதாபில் வருகிறது. குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் முன்னிலையில் ஹிஜ்ரி 838ஆம் வருடம் ஜமாதுல் அவ்வல் மாதம் 1-ஆம் நாள் மக்கள் அனைவரும் கூடியிருந்தனர். அப்போது குத்பு நாயகம் (ரலி) அவர்கள் தங்களின் முபாரக்கான தலைப்பாகையை எடுத்து சையத் அபூமுஹம்மது காஜா அர்கூன் (ரஹ்) அவர்களின் தலையின்மீது வைத்து நீர் எனது மகாமில் தரிபட்டு கலிஃபா ஸ்தானத்தை வகித்து வரவேணும் எனச் சொல்லி அன்னவரின் சகோதரர்களாகிய சையது அபூதுறாப் காஜா மன்சூர், சையது அபுல்ஹசன் காஜா தைபூர் இவர்களையும் அழைத்து சில வஸிய்யத்துக்களை செய்தார்கள்.

**அதன்பின் ஹஜ்ரத் சையது அபூமுஹம்மது காஜா அர்கூன் (ரஹ்) அவர்களை நோக்கி சிற்சில பைத்துக்கள் கூறினார்கள். அதன் கருத்தாவது :**

1. எனது அருமையானவரே, நான் அல்லாஹ் தஆலா அளவில் சேர்வதற்கு முடுகினவனாக உள்ளேன். மேலும் நீர்தான் எனது மகாமில் இருந்து கலீஃபா ஸ்தானத்தை வகித்துவர பாத்திரமானவராகும்.
2. நாயகம் (ரலி) அவர்களால் சையது அபூமுஹம்மது காஜா அர்கூன் (ரஹ்) அவர்கள் சிறப்பை நன்கொடையாய் பெற்றதின் பின் குத்பு நாயகம் அவர்கள் முரீதின்களை நோக்கி நீங்கள் எதைச் சொல்ல வேண்டியிருந்தாலும் சொல்லி அவருக்கு வெகுமதி நஜர்களைக் கொடுத்து மரியாதித்து கொள்ளுங்கள்.
3. முரீதின்கள் யாவரும் நாயகம் (ரலி) அவர்களின் உத்தரவிற்கிணங்கி சையது முஹமது காஜா அர்கூன் அவர்களுக்கு வெகுமதி காணிக்கைகளை கொடுத்து மரியாதை செய்தனர் என்பதே.

இவ்வாறு குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் சொன்ன வாக்கியத்தின் மூலமாக சையது அபூமுஹம்மது காஜா அர்கூனும் இவர்களின் சகோதரர்களும் அங்கிருந்த மக்களும் குத்பு நாயகம் (ரலி) அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிடப் போகிறார்கள் என திகிலடைந்து மனக் கலக்கமுற்று அழத் தொடங்கிவிட்டார்கள். அப்போது நாயகம் (ரலி) அவர்கள் அன்னவர்களை நோக்கி, நான் உங்களின் நிலைமைகளை குறித்து வியப்படைகிறேன். ஏனெனில் நீங்கள் அறிந்துள்ளீர்கள். அல்லாஹ் தஆலாவின் அவுலியாக்கள் இவ்வுலகை விட்டும் மறுஉலகை அடைந்த போதும் அவர்கள் ஹயாத்தானவர்களாகவே உள்ளனர். அவ்வாறிருக்க நீங்கள் ஏன் சபுறு செய்யாமல் இப்படிப்பட்ட துக்கத்தில் மூழ்குகிறீர்கள் எனக் கூறினார்கள்.

மேலும் இப்படியின்றி பொறுமையை கொண்டு உங்கள் மனதுகளை திருப்தி செய்து வேலைகளில் கவனமாக இருங்கள்.



ஆனால் நான் உங்களை விட்டுப் பிரிந்துபோய் விட்டதாக எண்ணிவிடாதீர்கள் எனவும் மேலும் பல ஆறுதல் மொழிகளையும் கூறி அல்லாஹ் தஆலா எனக்கு இவ்வுலகில் நெடுநாள் ஹயாத்தை கொடுத்து அவன் என்னை தனது பாதுகாப்பில் வைத்திருந்தான். ஆனது பற்றி நீங்கள் எனது துஆவை கொண்டு நற்பாக்கியங்களைப் பெற்று வந்தீர்கள். ஆதலால் நீங்கள் நன்றி செய்து என்னை அல்லாஹ் தஆலா அளவில் ஒப்புவித்துவிடுங்கள் எனச் சொல்லி அன்னவர்கள் குத்பு நாயகம் (ரலி) அவர்களின் நல் உபதேசங்களைக் கேட்டு மனத்தேறுதல் அடைந்தார்கள்.

ஹஜ்ரத் காஜா ஃபன்சூரின் கராமத் : ஹஜ்ரத் அப்துர் ரஜ்ஜாக் (ரஹ்) அவர்களுக்கு சிறுவயதில் ஏதோ ஒரு நோய் தாக்கி உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு கடைசியில் பார்வையும் தெரியாமல் போனது. எந்தவித சிகிச்சையும் பலனளிக்கவில்லை. ஆனபோதும், இக்கொடிய நோயுடனேயே குர்ஆன் ஷரீப் மனனம் செய்து மார்க்கக் கல்வி கற்று சிறந்தார்கள். ஒருமுறை ஒருநாள் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார். தவறாக ஓதினார். ஹாபிஸ் அப்துல் ரஜ்ஜாக் தவறை திருத்திக் கொடுத்தார்கள். அதற்கவர்... குருடருக்கு எல்லாம் தெரியுமோ? என கூறினார். தம்மை குருடர் என்று கூறியதால் மனவருத்தம் அடைந்தார்கள்.

இச்சமயத்தில் தான் இந்தியாவில் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் வருகை புரிந்திருப்பதைக் கேள்விப்பட்டு, அவர்களைக் காண வெகுதூரம் பயணம் மேற்கொண்டார்கள். கண்பார்வை இல்லை. ஒரு கால் நோயால் பாதிக்கப்பட்டு ஊன்ற முடியாத நிலை. இந்நிலையிலும் ஒரு பணியாளரை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டார்கள். ஒரு காட்டில் பாதை மாறி செல்லுகையில் ஹஜ்ரத் கிழ்று (அலை) அவர்கள் தோன்றி எங்கே செல்கிறீர்கள்? எனக் கேட்டு, நான் அவர்களிடம் கொண்டு போய் சேர்க்கிறேன் எனக் கூறி ஒரே நொடியில் மக்கன்பூர் அருகில் வந்து விட்டுவிட்டுப் போனார்கள்.

ஹஜ்ரத் அப்துல் ரஜ்ஜாக் அவர்களுக்கு இந்திய மொழி எதுவும் தெரியாததால் யாரிடம் எப்படி விசாரிப்பது என தெரியாமல், யோசித்துக் கொண்டிருந்தார்கள். அதேநேரம் மக்கன்பூரில்

ஹஜ்ரத் காஜா ஃபன்சூர் (ரஹ்) தம் பணியாளரை அனுப்பி இந்த இடத்தில் இந்த அடையாளத்தோடு இருவர் இருப்பர். அவர்களை அழைத்து வாரும் என அனுப்பினார்கள். அவர்கள் வந்ததும் தாம் ஓதிக்கொண்டு இருந்த குர்ஆனுடைய பஞ்சூராவை அவர்கள் கையில் கொடுத்து பேனாவும் மைக்கூடும் கொடுத்து இதற்கு இஃராபு (ஜேர், ஜர்) இடுங்கள் என்றுகூற பார்வை தெரியாத நான் எப்படி இஃராபு இடமுடியும் என கேட்க, பேனாவை பிடியும்; மைக்கூட்டில் இடுவீர்; இஃராபு இடுவீர் எனக் கூற, அவ்வாறு செய்து குர்ஆனில் பேனாவை வைக்கும் முன் அவர்களுக்கு எல்லாம் பளிச்சென தெரிய ஆரம்பித்தது.

உடனே ஹஜ்ரத் காஜா ஃபன்சூரின் காலடியில் விழுந்துவிட்டார்கள். இவர்கள்தான் ஹஜ்ரத் மதார் ஆலம் (ரலி) என நினைத்தனர். பிறகுதான் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள்தம் அறையில் உள்ளார்கள். இவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதாரின் கலீஃபா காஜா ஃபன்சூர் (ரஹ்) என்பது தெரிய வந்தது. பிறகு குத்பு நாயகம் (ரலி) அவர்களை சந்தித்து பூரண சுகமும் பயனும் பெற்று சிறப்புற்றுத் திகழ்ந்த ஹஜ்ரத் அப்துல் ரஜ்ஜாக் (ரஹ்) அவர்கள் ஹாபிஸ் பீனா எனும் பெயரிலேயே பிரபலமாக உள்ளனர். அவர்களது கப்று ஷரீபும் மக்கன்பூரிலேயே உள்ளது.

## ஹஜ்ரத் காஜி ஹமீதுத்தீன் :

ஹஜ்ரத் காஜி ஹமீதுத்தீன் தமக்கும் பைஅத் வழங்கும்படி குத்பு நாயகம் (ரலி) அவர்களிடம் கேட்க, அதற்கு தாங்கள் காஜி மத்ஹர் அவர்களிடம் செல்லுங்கள் என்றார்கள். அதற்கவர்கள் அவர் என் சகோதரர் மகன். அவரிடம் போய் எப்படி... என தயக்கம் காட்டினார்கள். சத்தியத்தேடலில் தயக்கம் கூடாது. உம் பங்கு அங்குள்ளது என்று கூறிவிட்டார்கள். பிறகு அவர்களிடம் பைஅத் பெற்றதோடு கிலாஃபத்தும் பெற்று பின் அற்புதம் மிக்க வலியாக திகழ்ந்தார்கள். அவர்களது தர்காரிபும் மாவரில் உள்ளது.

ஹஜ்ரத் காஜா அபூதுராப் ஃபன்சூரி (ரஹ்) அவர்களது வாழ்விலும் அநேக கராமத்துக்களை நிகழ்த்தியுள்ளார்கள். கொள்ளையர்களால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட ஒரு வியாபாரக்



கூட்டம் இவர்களின் துஆவினால் உயிர் கொடுக்கப்பட்டு யாவரும் முஸ்லீமான சம்பவம் தார் ஆலம், தத்கிரத்துல் முத்தகீன் போன்ற கிரந்தங்களில் இடம் பெற்றுள்ளது. ஹஜ்ரத் அபூதுராப் அவர்களுக்கு ஃபன்சூர் என்பது சிறப்புப் பெயர். அதுபோல மலிகுல் உரஃபா என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இவர்கள் இறுதி நேரம் வந்ததும் ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்களின் ரவ்ளாவில் நெருக்கமாக அமர்ந்தனர். ரவ்ளாவிலிருந்து ஹஜ்ரத் குத்புல் மதார் பேச ஆரம்பித்தார்கள். நான் சிறப்பு மிக்க உவைசிய்யா நிஸ்பத்தை உமக்களித்தேன். உமக்குப்பின் அதை நீர் உமது மகனார் சையத் முஹம்மது இப்ராஹீம் அவர்களுக்கு அளித்து உம் கலீஃபாவாக ஆக்குவீர். முஹம்மது தர்யா சயீதை பிற தரீக்காவின் கலீஃபா ஆக்குவீர். பிற பிள்ளைகளுக்கும் கிலாஃபத் வழங்கி அவர்களை பிற பிரதேசங்களுக்கு அழைப்புப் பணிசெய்ய அனுப்புங்கள். இதையெல்லாம் செவ்வனே செய்தபின் 28 ஷாபான் அன்று யாவரையும் அழைத்து உபதேசம் செய்தார்கள். ரமலான் 3 அன்று வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

மதாரிய்யா சில்சிலாவில் வரக்கூடிய பாபா கபூர் (ரஹ்) அவர்கள் குறித்து ஷெய்கு அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி (ரஹ்) எழுதியுள்ளார்கள். அவர்கள் எப்போதும் ஜத்பு எனும் பரவச நிலையிலேயே இருந்துள்ளார்கள். மறைவிடத்தை மறைக்குமளவு ஆடை தவிர எதுவுமே அவர்களிடம் இருக்காது. மிகப்பெரிய கராமத் உடைய வலிய்யுல்லாஹ்.

'ஜபதத்துத் தாரீக்' எனும் கிதாபில் வருகிறது. ஒருமுறை அவர்கள் குவாலியரில் இருந்தபோது விருந்துக்கு அழைக்கப்பட்டார்கள். அப்போதவர்கள் இந்த உணவு ஹலால் தானா? என உறுதிசெய்ய வேண்டும் என்றார்கள். அதை எப்படி உறுதி செய்வது? இது பிறரின் கேள்வி. அந்த உணவே சொல்லும் என்றார்கள். அந்த உணவே தான் ஹலாலில்லை என்று கூறியதை அச்சபையே கேட்டது.

பாபா கபூர் (ரஹ்) குவாலியர் வருகை புரிந்திருப்பதை அறிந்த அரசர் அக்பர் வைர, வைடூரியங்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் நிரப்பி ஒரு பையை அன்பளிப்பாக அனுப்பினர். அதை வாங்கி நெருப்பில் போட்டுவிட்டார்கள் பாபா கபூர் (ரஹ்). இதையறிந்த அக்பர் மனவேதனையுற்று, கொடுத்த அன்பளிப்புகளை திரும்பப் பெற்று வாருங்கள் என தம் ஆட்களை அனுப்பிவைத்தார். அவர்கள் வந்து பாபா சாஹிபிடம் அரசரின் உத்தரவை கூறிட, தாம் அமர்ந்திருந்த பழைய துணியை எடுத்த உதறினார்கள். அரசர் அக்பர் கொடுத்ததைவிட இரு மடங்கு வைர, வைடூரியங்கள் 'தம் மதார், தம் மதார்' என சொல்லிக் கொண்டே உருண்டோடின.

இதையறிந்த அக்பர் பாபா கபூர் மெய்வலி என புரிந்துகொண்டார். அவர்களை சந்திக்க எவ்வளவோ முயன்றும் அவர்கள் அனுமதிக்கவில்லை. இதையறிந்த தான்சீன் ஸூஃபி சாஹிபை தாங்கள் சந்திக்க நான் ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி, பாபா கபூர் (ரஹ்) அவர்களை சந்தித்துப் பேசினார். அப்போதவர்கள் அரசர் உமது பாரதட்சைகளை தன் தலையில் சுமந்து வந்து எனை சந்தித்தால் நாம் அவரை சந்திக்க சம்மதிக்கிறேன் என சொல்லிவிட்டார்கள்.

தான்சீர் திரும்பப் போய் அரசர் அக்பரிடம் தாங்கள் ஸூஃபி சாஹிபை சந்திக்க இயலாது என்று கூற அவர் ஏன் என்று கேட்க, நடந்த விபரங்களை எல்லாம் சொன்னார். அந்த நிபந்தனைக்கு உட்பட்டு தான் சீனாவின் பாதரட்சைகளை சுமந்தவாறு அக்பர் சென்று சந்தித்தார் எனப்படுகிறது. குவாலியரில் ஹஜ்ரத் கௌஸ் குவாலியர் (ரஹ்) அவர்களின் மஜார் ஷரீஃப் அருகிலுள்ள மஸ்ஜிதை கபூரி மஸ்ஜித் என அவர்களது பெயரால் நினைவு கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. அதன்றி மேவாத் போன்ற வேறு சில இடங்களிலும் சில கபூரி மஸ்ஜித் என அழைக்கப்படுகிறது. அவர்கள் பிரபலமான கராமத் உடைய வலியாக திகழ்ந்துள்ளார்கள்.

'குல்ஜார் மதார்' எனும் நூலில் வருகிறது. ஹஜ்ரத் காஜி நேபாளி எனப் பிரபலமான ஹஜ்ரத் சையத் ஆபித் (ரஹ்) அவர்கள்



பாபா கபூர் எனப்பட்ட ஹஜ்ரத் சையத் ஷாஹ் அப்துல் கபூர் (ரஹ்) அவர்களின் கலீஃபாவாக ஆனார்கள். அன்றி பல முரீதுகளும் உள்ளனர். இவர்களிடமிருந்து வரும் சில்சிலா சோக்தாஹ் ஷாஹி மதாரிய்யா எனும் பெயரில் வழங்கப்படுகிறது. இவர்கள் மிகப்பெரிய மூத்த வக்கீலாக, ஆபிதாக, ஜாஹிதாக திகழ்ந்தார்கள். பல கராமத் நிகழ்த்திய வலியாவார்கள்.

## ஹஜ்ரத் காஜா அபுல் ஹஸன் தைஃபூர்

ஹஜ்ரத் காஜா அபுல் ஹஸன் என்பது அவர்களது இயற்பெயர். தைஃபூர் என்பதன் பொருள் வேகமாகப் பறக்கும் பறவை. அவர்கள் ஆன்மீகப் பாட்டையில் வேகமாக முன்னேறுவதைக் கண்ட ஹஜ்ரத் குத்புல் மதார் (ரலி) அவர்கள் தைஃபூர் என அழைத்தார்கள். இவர்களின் துஆ பரக்கத்தினால் பெரும் பஞ்சம் நீங்கி, மழை பெய்து செழிப்பானது.

## அற்புத பதில்

ஒருமுறை ஹஜ்ரத் மக்தூம் ஷெய்கு அப்துல் ரஹ்மான் குத்வாயீ (ரஹ்) அவர்கள் ஹஜ்ரத் குத்புல் மதார். ஜிந்தாஹ் மதார் (ரலி) அவர்களிடம் உண்ணாமல் குடிக்காமல் இருப்பது பற்றி கேட்டார்கள். யார் மலகூத் உடைய உணவு உண்டாரோ, அவருக்கு திக்ரே உணவாகி விடுகிறது.

"நான் உங்களைப் போல இல்லை. நான் என் ரப்பிடம் உண்கிறேன். குடிக்கிறேன்"என்று கண்மணி நாயகம் (ஸல்) அன்னவர்கள் கூறியதைப் போல நபிமார்களின் மெய் வாரிசுகளான வலிமார்களாகிய நாங்களும் தஆம் மலகூத்தி எனப்படும் மலக்குகளின் உணவான திக்ரைக் கொண்டே பசியாறுகிறோம் என்றார்கள்.

## ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் மறைவு

அன்னவர்களின் வஃபாத் நேரம் வந்தபோது ஹஜ்ரத் காஜா அபூமுஹம்மது அர்கூன், காஜா அபூதுராப் ஃபன்சூர், காஜா அபுல் ஹஸன் தைஃபூர் மூவரையும் தம் அருகில் அழைத்து, இவர்கள் என் மக்கள், என் கலீஃபாக்கள். இவர்களை என் இடத்தில், என்

பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்கள். பிறகு தம் சீடர்கள், மக்களை நோக்கி, நான் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்துவிட்டேன். அல்லாஹ் எந்தப் பிரச்சினைகளும் இன்றி, இடையூறுமின்றி என்னை காத்தான். ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைக்கக் கூடியதே என்பதை அறிவீர்கள். அல்லாஹ் நபிமார்கள், வலிமார்களுக்கு இப்புற உலகில் அளித்ததைவிட மறுமையில்தான் இன்னும் அதிக வல்லமையையும் அந்தஸ்துகளையும் அளிக்கிறான். ஆகவே மரணம் தற்காலிக மறைவு தானே அன்றி, நிரந்தர அழிவல்ல. ஆகையால் நான் மறைந்தாலும் கூட நீங்கள் எங்கிருந்து எனை அழைத்தாலும் இன்ஷா அல்லாஹ் அல்லாஹ்வின் அருளால் நான் உங்களுக்கு உதவுவேன். இப்படி கூறியபோது, சீடர்களில் ஒருவர் எஜமானே! அல்லாஹ் தங்களுக்கு தாங்கள் நினைத்தால் தங்களின் ஆன்மாவை எந்த உடலிலும் புகுத்திக் கொள்ளும் ஆற்றல் தந்துள்ளான். தாங்கள் வேறொரு அவயத்தை தேர்வு செய்து கொள்ளலாமே என்று கோரினார்.

இந்த ஆற்றல் நமக்கு அல்லாஹ் வழங்கியிருப்பது மெய்தான். எனினும் எந்த உடல் எந்த ரூஹ்க்காக உண்டாக்கப்பட்டதோ, அந்த உடலில் அந்த ரூஹ்தான் பொருந்தும். ரூஹும் உடலும் சேர்ந்துதான் திக்ரிலும், சிந்தனைகளிலும் ஈடுபடும். தனக்கு தகுதியில்லாத உடலுக்குள் ரூஹ் அடைக்கலமானால், அந்த ரூஹ் திருப்தி அடையாது. அந்த உடலாலும், அந்த ரூஹை திருப்திபடுத்த முடியாது எனச் சொல்லி விட்டார்கள்.

பின் தம் கலீஃபாக்களை அழைத்து, இனி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் அவர்கள் சன்மார்க்கப் பணி செய்ய செல்ல வேண்டிய ஊர், பிரதேசங்கள் குறித்தும் உத்தரவிட்டு ஆவன செய்தார்கள். சில அத்தியாவசிய உபதேசங்களை அருளினார்கள். எனக்கு ஹுசாமுத்தீன் சலாமத்தீ ஜனாஸா தொழுகை நடத்துவார் என வஸிய்யத் செய்தார்கள். மேலும் மேற்கூறிய 3 கலீஃபாக்களும் "நாயகமே! நாங்கள் தங்களின் வாயிலை காத்து வருவது எங்களுக்கு இரு லோகத்திலும் பெருமையும் சிறப்பும் தவிர



வேறில்லை. ஆயினும் நாங்களோ ஊரைவிட்டும் வந்து பரதேசிகளாக உள்ளோம்" என கூற அதற்கவர்கள், நான் உங்களின் ஜீவனாம்சத்திற்குத் தக்கவாறு போதுமானதை கொடுத்துவர நமது ஜவன்பூர் அரசராகிய சுல்தான் இப்ராஹிம் ஷர்க்கி பாதுஷா சித்தமாக உள்ளார். அவர் உங்களை நல்லவிதமாக ஆதரித்து வரும்படியான ஏற்பாடுகளையும் நான் அவரைக் கொண்டு செய்து வைக்கிறேன் என கூறிய போது, அன்னவர்கள் அல்லாஹ்வின் உதவியும் தங்களின் சிபாரிசும் எங்களுக்குப் போதுமானதாக உள்ளது. அவைகள் யாவும் தேவையில்லை எனக் கூறியதுடன், குத்பு நாயகம் (ரலி) அவர்கள் அன்னவர்கள் அல்லாஹ்வின் பேரில் வைத்துள்ள தவக்கல் எனும் புறம் சாற்றுதலையும், தைரியத்தையும் கண்டு அவர்கள் அனைவரையும் மக்கன்பூரிலேயே இருந்து வரும்படியாக அனுமதி அளித்தார்கள்.

அதன்பின் குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தங்கள் காத்தீம்களை அழைத்து, நீங்கள் புதுக்குடங்களை எடுத்துக்கொண்டு ஷாஹெ யாஸீன் எனும் ஆற்றில் போய் தண்ணீரை எடுத்து வந்து நமது ஹுஜீரா அறையில் வைத்திடுங்கள். நான் இந்த வார கடைசியில் அல்லாஹ் தஆலாவின் சமூகம் சேர்ந்திடுவேன் எனவும் கூறினார்கள். மேலும் எம்மை குளிப்பாட்டுவது, கபனிடுவது யாவும் ஹிஸாமுத்தீன் தன் கையால் செய்து முடிப்பார் என தக்தீரில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். இதற்கு கலிபாக்கள் தங்கள் மனதில், ஹிஸாமுத்தீன் ஜான்பூரிலிருந்து எப்படி வரப்போகிறார்கள், இவ்வளவு தொலைவான இடத்திலிருந்து என நினைத்து திகைத்தார்கள்.

பின்பு குத்பு நாயகம் (ரலி) அவர்கள் வபாத்தாகின்ற நாளன்று அவர்கள் தங்கள் ஹுஜீராவினுள் சென்று வாயிலை அடைத்து அல்லாஹ் தஆலாவின் இபாதத்தில் ஈடுபட்டு இருந்து வபாத்தானதும் சற்று நேரத்திற்கெல்லாம் அதிலிருந்து ஓர் சப்தம் அவுலியாக்களுக்கெல்லாம் நாயகமானவர் அல்லாஹ் தஆலா அளவில் சேர்ந்திட்டாரென்று வந்தது. இன்னாலில்லாஹி

வஇன்னா இலைஹி ராஜிஊன். இந்த நிலையில் திடீரென்று ஜவன்பூரிலிருந்து ஹிஸாமுத்தீன் (ரஹ்) குத்புல் மதார் (ரலி) அவர்களின் சொல் போல் அங்கு வந்து ஹாலிராகிவிட்டார்கள். பின்பு அன்னவர்களால் குளிப்பாட்டிக் கபனிட்டு அவர்களே இமாமாக நின்று தொழ வைத்து ஹுஜ்ராவின் கட்டடத்திலேயே ஹிஜ்ரி 848ஆம் ஆண்டு ஜமாதுல் அவ்வல் மாதம் 17-ஆம் தேதி தினமே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஆகவே ஒவ்வொரு வருடத்திலும் ஜமாதுல் அவ்வல் மாதம் 17-ஆம் தேதி இரவு மக்கன்பூரில் உருஸ் வெகுநேர்த்தியாக நடத்தப்பட்டு வருவது மட்டுமின்றி, அதற்காக பல ஊர்களில் இருந்தும் திரளான மக்கள் வந்து குத்பு நாயகம் (ரலி) அவர்களின் முபாரக்கான ரவ்லா ஷரீபை ஜியாரத்து செய்து தங்கள் நாட்டங்களை பெற்றுக்கொண்டு போகிறார்கள். ஆதலால் அல்லாஹ் சுபஹானஹு தஆலா ம்மனைவர்களுக்கும் அவர்களின் துஆ பரக்கத்தின் பொருட்டு அவர்களின் ரவ்லா ஷரீபை ஜியாரத் செய்ய நல்லுதவியை அருள்புரிவானாக ஆமீன்! யாரப்பல் ஆலமீன்.

## தர்கா ஷரீப் கட்டியது

தஸ்கிரத்துல் முத்தகீன் பீ அஷ்வாலி குலபாயி சையது பதீஉத்தின் என்ற கிதாபில் வருகிறது. நாயகம் குத்பு ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் முரீதீன்களில் ஒருவரும் ஜவன்பூர் அரசருமாகிய சுல்தான் இப்ராஹிம் ஷர்கீ பாதுஷா என்பவர் மக்கன்பூர் வந்து குத்பு நாயகம் (ரலி) அவர்களின் கப்ரின் மேல் குமுசு (டூம்) கட்டவும் ஃபக்கீர்கள் தங்குவதற்கு கான்காஹ் கட்டும்படியும் கட்டளை இட்டார்கள். அப்போது வேலையாட்கள் பாதுஷாவின் உத்தரவுப்படி குமுசு கட்டடத்தை கட்ட ஆரம்பித்து வேலை நடந்து கொண்டு வருகையில் உருஸ் காலம் நெருங்கிவிட்டது. அப்போது பாதுஷா தனது வேலைக்காரர்கள் மீது கோபங்கொண்டு, நீங்கள் என் உத்தரவுப்படி குமுசு கட்டடத்தை உயரமாக்கப்படாமல் கட்டி முடித்துள்ளீர்கள் என கொதித்தார். அப்போது அந்த கொத்தனார் பாதுஷாவிடம் சொன்னதாவது, நான் இன்றிரவு ஓர் கனவு கண்டேன். இங்கு சமாதியாகி இருப்பவர்கள்



குமுஸின் உயரம் போதுமானதாக உள்ளது. இதற்குமேல் அதிக உயரமாக கட்ட வேண்டாமென உத்தரவு செய்ததாக சொன்னான்.

பின்பு பாதுஷாவிடம் அதுபோலவே ஓர் கனவு கண்டுவிழித்து, அவர்களின் உத்தரவிற்கிணங்க உயரமாக கட்டுவதை நிறுத்திவிட்டார். அதன்பின் அவுரங்கசீப் ஆலம்கீரி பாதுஷாவின் அரசாங்கம் நடைபெற்று வரும் சமயம் அவர் மக்கன்பூருக்கு வந்து நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் ரவ்லா ஷரீபை ஜியாரத் செய்துவிட்டு, தர்காவின் வாயில் வெகுகாலமாக அடைக்கப்பட்டு இருந்து வருகிற செய்தி அறிந்து, குத்பு நாயகம் அவர்களின் கலீஃபாக்களிடம் ஜியாரத்திற்கு வரும் மக்கள் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் ரவ்லா ரீபை கண்ணால் கண்டு தரிசிப்பதை விட்டும் நற்பேரில்லவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகவே, பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து ரவ்லா ஷரீப் தெரிய கூடிய ஏற்பாடுகளை செய்து வைத்தல் நன்று என உத்தரவு கேட்டு, அதன்பின் நான்குபுற சுவர்களையும் குடைந்து கபுரு ஷரீப் மக்களுக்கு தெரியும்படி ஜன்னலை போல செய்து முடித்தார்கள். அதுநாள் முதல் இன்றுவரை ஜியாரத் செய்கின்றவர்கள் அந்த ஜன்னலில் நின்றுதான் ஜியாரத் செய்து போகிறார்கள்.

தாரீகு எனும் கிதாபுகளில் வருகிறது. குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் தர்காவின் மேல் பாகத்தில் பொன் கலசங்கள் ஐந்து ஜோதியைப் போல இயங்குகிறது. அதன் நான்கு மூலைகளில் உள்ள பொன் கலசம் டில்லி பாதுஷாக்களால் வைக்கப்பட்டது. குமுசின் நடு மையத்தில் உள்ள கலசம். கின்னூஜ் பட்டணத்தில் உள்ள மக்கன்கான் என்பவரால் பொன்னால் செய்து வைக்கப்பட்டது என லஹீருல் ஆஷிகீன் எனும் கிதாபில் உள்ளது.

## குத்பு நாயகம் உருஸ் வைபவம் :

குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் உருஸ் வைபவம் பிரதி வருடம் ஜமாதுல் அவ்வல் 17-ஆம் தேதி இரவில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் அன்று பகல் தர்காவில் குர்ஆன் ரீப் ஓதி கத்தம் செய்து மாலை மஃரிப் தொழுகையின்பின் ரௌளா கட்டடத்தை தவிர, மற்ற இடங்களில் விளக்குகள் பொருத்தப்பட்டு

இஷா முடிந்து மௌலீது ஷரீப், குத்பு நாயகத்தின் கீர்த்தி, சிறப்பு முதலிய சரித்திரங்களை ஆலிம் உலமாக்களால் இரவு மூன்று மணிவரையிலும் பயான் செய்யப்படுகிறது. மேலும் உரூஸ் காலத்தின் சந்தனம் பூசும் நேரத்தில் தர்காவின் மேல் ஜோதி பிரகாசம் ஒன்று வெளியாகி மின்னுகிறதென்றும் அதற்கு ஜோதி என்றும் கூறுகிறார்கள். இது விஷயம் இந்த நவீன கம்ப்யூட்டர் உலகில்நாம் you tube-இல் கண்டுகளிக்கலாம். ஜோதி தென்படுவதை படமெடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

இன்னும் லஹீருல் ஆஷிகீன் எனும் கிதாபில் வருகிறது. குத்பு நாயகம் (ரலி) அவர்களின் தர்காவை சேர்ந்த எல்லையில் "அஞ்சுமன் குத்தாமே தர்கா" எனும் கட்டிடமொன்றை மௌலானா சுல்தான் அஹமது என்பவரது முயற்சியினால் கட்டப்பட்டுள்ளது. அதில் முஸாபிர்களும் ஜியாரத்திற்கு வரும் மக்களும் தங்கி போக வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தர்காவின் எல்லையில் ஓர் வைத்தியசாலை நிறுவப்பட்டு அதில் பொது மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்யப்படுகிறது.

இன்னும் தவாரீகு கிதாபுகளில் வருகிறது. அவுரங்கசீப் ஆலம்கீரி பாதுஷா மக்கன்பூருக்கு வந்து குத்பு நாயகம் (ரலி) அவர்களின் கபுறு ஷரீபை ஜியாரத் செய்துவிட்டு, தர்காவை சேர்ந்த எல்லையில் பிரம்மாண்டமான ஜாமி ஆமஸ்ஜிது ஒன்றை கட்டிக் கொடுத்துள்ளார். அதற்கு மஸ்ஜிதே ஆலம்கீரி எனப்பெயர் விளங்குகிறது. குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் அஜ்மீரில் சில்லா இருந்த மலை அந்நகரின் கீழ்ப்பகுதியில் உள்ளது. குத்பு நாயகம் (ரலி) அவர்களின் வளர்ப்புப் பிள்ளையாகிய ஜானேமன் ஜன்னத்தீ என சிறப்புப் பெயர் பெற்றுள்ள சையது முஹமது ஜமாலுதீன் (ரஹ்) அவர்களால் அஜ்மீரில் தாழ்வாரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தை "மதார் சாஹிப் ஸரா" (மதார் சாஹிப் சத்திரம்) என அழைக்கப்படுகிறது. "மதார் சாஹிப் ஸரா" (மதார் சாஹிப் சத்திரம்) என அழைக்கப்படுகிறது. இதில் ஒவ்வோர் ஆண்டும் ஜமாதுல் அவ்வல் பிறை 18-இல் சிறப்பான உரூஸ் நடைபெறுகிறது.



ஹஜ்ரத் குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் தர்காவில் இன்றுவரை விளக்குகள், சாப்பாடு, இசை, பெண்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. ரவ்லா கட்டடத்தின் வெளிசுவர் வரை பெண்கள் அனுமதிக்கப்படுவர். ஆண்களும் மஃரிப் வரையே தர்காவினுள் அனுமதிக்கப்படுவர். அதன்பின் வெளிசுவர் வரை மட்டுமே ஆண்களும் அனுமதிக்கப்படுவர். இந்த வழக்கம் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. நாயகம் (ரலி) அவர்களின் குமுசு கட்டடத்தின் மேல் எந்நேரமும் ஸல்ஸபீல் பறவை பறந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஹஜ்ரத் குத்புல் மதார் அவர்களின் தரீக்கா

ஹஜ்ரத் குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் முதலில் உவைஸுல் கர்னைன் (ரலி) அவர்களின் தரீக்காவாகயி உவைஸீ எனும் தரீக்கா முறைகளைப் பின்பற்றி வணக்கங்களில் ஈடுபட்டு வந்தார்கள். இதற்கு ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களிடத்தில் உத்தரவும் பைஅத்தும் பெற்றிருந்தார்கள். அதன்பின் அபாயஸீத் பிஸ்தாமி (ரலி) அவர்களின் தைஃபூரிய்யா தரீக்காவை தொடர்ந்து எல்லா வணக்கங்களையும் செய்து வந்தார்கள். பிற்காலத்தில் தைஃபூரிய்யா தரீக்காவை சார்ந்தவர்கள் பல கிளைகளாகப் பிரிந்தனர். குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் தான் 'தபகாத்தியா'தரீக்காவை ஏற்படுத்தினார்கள். இந்த தரீக்காவை சேர்ந்தவர்கள் மதாரிய்யா அல்லது தபகாத்தியா என அழைக்கப்படுகின்றனர்.

ஷாஹ் தபகாத்தி மதாரிய்யா-வில் 4 கிளைகள் உள்ளன. அவை ஆஷிகானே மதாரி, தீவான்கானே மதாரி, தாலிபானே மதாரி, ஹாதிமானே மதாரி எனப்படுவதாகும்.

குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களுக்கு 442 முதன்மை கலீஃபாக்களும் 1442 கலீஃபாக்களும் இலட்சக்கணக்கான முரீதீன்களும் இருந்தனர். உலகின் பல பகுதிகளிலும் தபகாத்தியா தரீக்காவை சார்ந்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். உலகில் அதிகமான காலடி பதித்த குத்பு ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் சையது பதீஉத்தின் (ரலி) அவர்களேயாம். உலகம் முழுவதும் அவர்களது சில்லா முபாரக் உள்ளது

குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலும் பரவலாக பல பகுதிகளிலும் இந்த தரீக்காவை சேர்ந்த கலீஃபாக்கள் பலரின் தர்காக்கள் உள்ளன.

தஞ்சாவூர் ஹஜ்ரத் ஷம்ஸ் மன்சூர் பீர் (ரஹ்) தர்காவில் உள்ள ஹஜ்ரத் ஷாகரீப் திவான் (ரலி), மயிலாடுதுறை அண்ணல் அப்துல்லாஷா (கத்-ஸல்), கொரடாச்சேரி வெண்ணவாசல் ஹஜ்ரத் சப்ஜே அலிஷாசர்கிரோ (கத்-ஸல்) ஆவூர் ஹஜ்ரத் மதார்ஷா அவுலியா மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களின் தர்காக்கள் அடவங்குடி பரக்கத்தாபாத் ஹஜ்ரத் மஹ்மூது ஷாஹ் (கத்-ஸல்), திருச்சி பாலக்கரை ஷாமதாரி திவான் (கத்-ஸல்), காரைக்கால் மஸ்தான் அலிஷா (கத்-ஸல்) வடக்கு மாங்குடி வஞ்சுவழி ஹஜ்ரத் பதர் மலங்குஷா (கத்-ஸல்), துக்காச்சி ஹஜ்ரத் ஷெய்கு பாவா பக்ருத்தீன் (ரலி) வழுத்தூர் ஹஜ்ரத் ஷா மத்திவான் (ரஹ்), ஷத்ரத் திவான் (ரஹ்), கல்கல் தீவான் (ரஹ்) அய்யம்பேட்டை சக்கராப்பள்ளி ஷெய்கு மீரான் ஆலிம் (வலி) மற்றும் மேலப்பாளையம், காயல்பட்டிணம், கடையநல்லூர், கமுதி, பரமக்குடி, இராமநாதபுரம், கீழக்கரை, தேவிப்பட்டிணம், சிவகாசி, இராஜபாளையம், பொதக்குடி, மேலக்காவேரி, பண்டாரவாடை, சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திண்டிவனம் இன்னும் பல ஊர்களிலும் தபகாத்தியா தரீக்காவில் பைஅத் பெற்ற கலீபாக்கள் மறைந்து வாழ்ந்துகொண்டு உள்ளார்கள். அய்யம்பேட்டை அஞ்சுமன் நகர் பள்ளியில் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) சில்லா உள்ளது. வருடந்தோறும் அங்கு சிறப்பான முறையில் கந்தூரி நடைபெற்று வருகிறது. இவர்கள் வருகையால் அய்யம்பேட்டை வளம் பெற்றது என குறிப்பு உள்ளது.

என்னிடம் அல்லது எனது கலீஃபாக்களிடம் பைஅத்து பெற்று எமது தரீக்காவில் நுழைந்து விட்டவருக்கு ஏழு தலைமுறை வரை நாம் பிணையாக இருப்போம். உலக முடிவு நாள் வரை எமது தரீக்கா உலகில் நீடித்திருக்கும். அதில் பல மகான்கள் தோன்றுவார்கள் என குத்பு நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள் திருவாய் அருளியுள்ளார்கள்.



## நாயகம் (ரலி) அவர்களின் புகழ் பாக்கள் :

தபகாத்தியா தரீக்காவினர் நடத்தும் மஜ்லிஸிற்கு திக்ருல் மதாரிய்யா அல்லது ராத்திபத்துல் மதாரிய்யா எனப்படும் இவைகள் இந்த தரீக்காவினரின் வீடுகளிலும், தர்காக்களிலும் வாரந்தோறும் சிறப்பாக நடந்தேறி வருகிறது. ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டவர் பேரில் கௌதிய்யா சலவாத்து இருப்பதுபோல ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்கள்மீதும் சலவாத்துல் மதாரிய்யா என்ற சலவாத்து உள்ளது. ஒருவர் ஓர் காரியத்தை நாடி சலவாத்துல் மதாரிய்யாவை ஓதினால் அவர்களின் நாட்டம் இன்ஷா அல்லா நிறைவேறும் என சோதிக்கப்பட்டுள்ளது.

**தபகாத்திய தரீக்காவை சார்ந்தவர்களில் சிலர் நாயகம் (ரலி) அவர்களைப் பற்றிய பல புகழ் பாக்களை எழுதியுள்ளனர். அவை :**

1. கஸீதா நூரிய்யா, 2. கஸீதா ஹம்ஸிய்யா, 3. கஸீதா ரிலாயிய்யா, 4. கஸீதா பத்ரிய்யா, 5. கஸீதா மீமிய்யா, 6. கஸீதா மதாரிய்யா ஆகியவற்றை முஹம்மது அப்துல் ரஹ்மான் இப்னு ஷெய்கு காதர் மீரான் என்பவர் அரபியில் இயற்றியுள்ளார்கள். சின்ன முஹம்மது அஹமது முஹ்யித்தீன் ஆலிம் அவர்களால் கஸீதா பர்ரிய்யாவையும், பஸ்ஜல் உலமா என்பவர் கஸீதா ஷாகிரிய்யா, கஸீதா குதுபிய்யா, கஸீதா மத்ஹிய்யாவையும் பாடியுள்ளார்கள்.

நெல்லை மாவட்டம், மேலப்பாளையம் வாழ்ந்த மெய்ஞ்ஞானி குன்யா அலி ஷெய்கு முஹ்யத்தீன் தபகாத்தி அவர்கள் தமிழில் பதிவுத்தீன் முனாஜாத் என்பன பாடியுள்ளார்கள். தரிகத்துல் இலாஹிய்யா எனும் தரீக்காவை நிறுவிய கல்வத்நாயகம் எனப் போற்றப்படும் ஹஜ்ரத் சையது அப்துல் காதிர் (ரஹ்) அவர்களின் தந்தையாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் எனும் ஹஜ்ரத் சையது முஹம்மது (ரஹ்) அவர்கள், “அல் கவாகிபுத் தாரிய்யா” எனும் பெயரில் ஒரு மௌதூதை நாயகம் ஜிந்தாஷாஹ்

மதார் (ரலி) அவர்கள் மீது இயற்றியுள்ளார்கள். மேலும் தபகாத்தியா தரீக்காவை சார்ந்த தர்காக்களில் நாயகம் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் நினைவாக ஜமாதுல் அவ்வல் மாதம் 1-ஆம் நாள் கருப்பு நிற (யானை நிறம்) கொடி ஏற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.



## ஆவூர், ஹஜ்ரத் சையதினா சர்குரு மதார்ஷா அவுலியா (கத்-ஸல்) அவர்கள்

### சிறுகுறிப்பு

தென்னிந்தியாவின் ஜோதியாம் குத்புல் மஜீது வல்ஃபர்துல் ஹமீது ஹஜ்ரத் காதிர்வலி துஞ்ஜபக்ஷ் ஷாஹுல் ஹமீது (ரலி) அவர்கள் 14 கான்வாதாக்களின் ஞானக்குருக்களிடம் அனுமதி பெற்ற குத்பாவார்கள். அன்னவர்கள் தீன் மார்க்கம் செழிக்க வட இந்தியாவில் இருந்து புறப்படும் போது தன்னுடைய முர்ஷிதின் ஆணைக்கிணங்க, தன்னுடன் 14 கான்வாதாக்கள் உள்ளடங்கிய தரீக்காக்களின் 404 ஃபுகறாக்களுடன் புறப்பட்டார்கள் என "கன்ஜுல் கறாமாத்" நூல் கூறுகிறது. இதில் காதிரியா, சிஷ்தியா, தபகாத்தியா, சுஹர்வர்த்தியா, நக்ஷபந்தியா, ஷத்தாரிய்யா உள்ளிட்ட சில தரீக்காக்களை சார்ந்த ஃபுகறாக்கள் இருந்தனர்.

இதில் தபகாத்தியா தரீக்காவிற்கு தலைமையாக (சர்கிரோ) ஹஜ்ரத் சையதினா சர்குரு மதார்ஷா அவுலியா (ரலி) அவர்கள் இருந்தார்கள். சர்கிரோ என்பது உருதுவில் சர் என்பது தலை, கிரோ என்பது குழு. சர்கிரோ மருவி தமிழில் சர்குரு எனப்பட்டது என எம் முன்னோர்கள் கூறக் கேட்டோம். ஒவ்வோர் வருடமும் ஜமாதுலவ்வல் மாதம் பிறை 5-க்கு ஆவூரில் உள்ள ஹஜ்ரத் சர்குரு மதார்ஷா அவுலியா (கத்-ஸல்) அவர்கள் தர்காவில் கொடியேற்றம் மற்றும் சந்தனம் பூசும் நிகழ்வு வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. அதுபோது மார்க்கச் சொற்பொழிவு, மத நல்லிணக்க விருந்து உபசரிப்பு ஆகியவை நடைபெறுவது வழக்கம். அடுத்த நாள் முதல் ஷா தப்காத்தி ஜமா ஃபுகறாக்களுடன் நாகூர் நாயகம் சென்ற ஊர்கள் நோக்கி செல்வார்கள். கோவிந்தகுடி, வலங்கைமான், அடவங்குடி, அபிவிருத்தீஸ்வரம், வெண்ணவாசல், பாலாகுடி, தஞ்சை, அத்திக்கடை, பொதக்குடி, கூத்தாநல்லூர், பூதமங்கலம், புலிவலம், அடியக்கமங்கலம், மேல்நாகூர் சென்று ஜமாதுலாகிர் பிறை 1-க்கு நாகூர் நாயகம் தர்கா ஷரீப் வந்தடைவார்கள்.

நாகூர் பாதுஷாவின் பெரிய கந்தூரி வைபவங்களில் கலந்து கொண்டு 40 நாட்கள் தங்கி ரஜப் பிறை மலை மாட்சிமை தாங்கிய அஜ்மீர் காஜா முயினுத்தீன் (ரலி) அவர்களின் ''ஆறாம் பாத்திஹா'' மௌலூது மஜ்லிஸ் முடிந்து பிறை 9-க்கு நாகூரிலிருந்து புறப்பட்டு பல ஊர்கள் சென்று ரமலான் பிறை 1-க்கு திருச்சி ஹஜ்ரத் பாபாயே நத்ஹர் சர்மஸ்த் தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அவர்கள் தர்கா ஷரீப் சென்றடைவோம். அங்கு உருஸ் கிரியைகள் முடிந்து பிறை 20-க்கு அங்கிருந்து புறப்படுதல் வழக்கமாக உள்ளது. அதன்பின் ரக்கஸ் முசாபரி ஏர்வாடி நோக்கி செல்வது வழக்கம்.

**ஃபுகறா கலாச்சாரம் :** ஃபுகறா என அழைக்கப்படும் ஃபக்கீர்மார்கள் உலகளாவிய பரந்த கலாச்சார அமைப்பை உடையவர்கள். உலக வரலாறு போற்றி புகழும் மாமன்னர்களில் ஒருவரான சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் என்ற கிரேக்கத்தின் மகா அலெக்ஸாண்டர், தான் இறக்கும் தருவாயில் தன் சடலத்தை எடுத்துச் செல்லும் போது, சவப்பெட்டிக்கு வெளியே என் இரு கரங்களையும் தொங்க விட்டு விடுங்கள். மனிதன் பிறக்கும் போது எதுவும் கொண்டு வருவதில்லை. உலகை விட்டு பிரிந்து செல்லும் போதும் அவன் எதையும் எடுத்து செல்வதில்லை என்பதை தொங்கும் என் வெற்றுக் கரங்கள் உலக மக்களுக்கு உணர்த்தட்டும் என கூறினார்.

'உஜல் அஜம்' எனப்படும் நபிமார்களில் மூஸா (அலை) முதல் ஹஜ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) உரை அவர்களது வாழ்நாள் முழுவதும் எளிய ஃபக்கீர்களின் கோலத்திலேயே வாழ்ந்தார்கள் என்பதை அறிவோம். ஃபக்கீர்கள் இம்மாமனிதர்களின் துறவு மனப்போக்கை தங்களின் இலட்சியமாக ஆக்கிக் கொண்டவர்கள். ஆனால் அவர்களை இந்த மனித சமுதாயம் இன்று பக்கிரிகள் என பெயரிட்டு வேலை வெட்டி செய்யாமல் பிச்சை எடுத்து திரியும் சோம்பேறிகள் என கருதுகிறது. தலையில் பச்சை, கருப்பு, காவி வண்ண தலைப்பாகையினை அணிந்தவர்களாக, முகத்தில் தாடி, கையில் பாங்கா அல்லது நஃபில் எனும் ஊதுகோல், சட்டா, சோட்டா எனும்கைத்தடி, தஃப் வகையறாவுடன் வரும் இவர்கள் யார்? இவர்களுடைய



கொள்கைகள் தான் என்ன? இதற்கான விடையை உலகம் புரிந்து கொள்வது இன் காலத்தின் கட்டாயமாக உள்ளது.

நபிமார்களும், மகான்களும் பரபரப்பான கராமத்துக்களை நிகழ்த்தி பாமர மக்களை பரவசப்படுத்தி தீன் மார்க்கத்தில் மக்களை அழைத்தார்கள். ஃபக்கீர்கள் மறை வாசகங்களை ஓதியும், ரப்பு, நபி இறைநேசர்களின் பெருமைகளை பாடியும், திக்ர் மஜ்லிஸ் மூலமும் மக்களின் கவனத்தை இறைவனின் பாதையில் திருப்புகிறார்கள். மேலும் ஆயுதங்களை பயன்படுத்தி குத்தி, குருதி வெளிவராத அற்புதத்தை நிகழ்த்தி காட்டுகிறார்கள். இவர்கள் ஈமான் எனும் இறை விசுவாசம் உறுதியாகிவிட்டால் மனதையும், உடலையும் பஞ்ச பூதங்களால் பாதிப்பை உண்டாக்க முடியாது என்பதை மக்களுக்கு உணர்த்தவே வெளிப்படுத்தி காட்டுகிறார்கள்.

இறைநேசர்களின் பெயரை ஈமானோடு இறை விசுவாசத்தோடு உச்சரிப்பதால் இயற்கையின் இயல்புகள் தடைபடுகிறது என்பதை உணர்த்தி இறைநேசர்களை அழைப்பதால் விதி வசத்தின் போக்கில் தீமை நன்மையாகிறது. வேதனை விலகுகிறது என்பன உணர்த்துகிறார்கள்.

உலக நியதியான உழைப்பையும், தொழிலையும் அவர்கள் கவனமாகப் பேனாமல் ஃபக்கீராக நிற்கும் நிலை. உங்களுக்கு வீட்டை விட்டு வெளியேறும் ஹஜ்ஜின் கடமையை மட்டுமல்ல. உலகின் நிலையற்ற தன்மையையும், நீங்கள் மண்ணறை மாளிகைக்கு செல்ல எத்தருணத்திலும் தயார் நிலையில் இருங்கள் என்பனவும் உங்களுக்கு உணர்த்துகிறது.

இறைநேசச் செல்வர்கள் சுவர்க்கத்தின் கர்ப்பதரு போன்றவர்கள். அவர்களின் நிழலில் ஒதுங்கி நின்று உங்கள் தேவைகளை அடைந்து கொள்ளுங்கள் என்ற அருமை நபி (ஸல்) நவின்றுள்ளார்கள். மேலும் முஹ்யத்தீன் ஆண்டகை என்ற அருமை நபி (ஸல்) நவின்றுள்ளார்கள். மேலும் முஹ்யத்தீன் ஆண்டகை "போற்றப்படும் மஜாரை உடையவர்களின் சமாதிக்கு சென்று ஜியாரத் செய்யுங்கள். உங்கள் சகல காரியங்களும் நேர்பெறும் !" என கூறியுள்ளார்கள். மேலும் இந்த ஃபுகறாக்களின் தலைவர் மஹ்பூபே சுப்ஹானி முஹ்யித்தீன் அப்துல்காதிர்

ஜிலானி (ரலி) ஆவார்கள். வட நாட்டிலும், தென்னாட்டிலும் தலைசிறந்த ஞான தர்பார்களின் ஞானவான்கள் ஹஜ்ரத் காஜா முயினுத்தின் (சிஷ்டி) குல்பர்காவில் ஹஜ்ரத் காஜா பந்தே நவாஸ் (ரலி) டெல்லியில் ஹஜ்ரத் ஜாழத்தின் (ரலி) மக்கன்பூரில் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) திருச்சியில் ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா (ரலி) முல்பகாலில் பாபாஹைதர் சஃப்தர் (ரலி) பொனுகொண்டாவில் ஹஜ்ரத் பாபா ஃபக்ருத்தின் (ரலி) நாகூரில் ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) ஆகியோர் ஃபுகறாக்களின் வழிகாட்டிகள் ஆவார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்தியா ஏன் உலகமெங்கும் ஃபக்கிர்களும் அவர்களின் குழுவான ஜமாவும் அவர்கள் கூடி ஆலோசிக்கும் ஆஸ்தானாக்களும் உள்ளன. உலகம் அறிந்து கொள்ளட்டும். திருமணம் ஆகாதவர்களும், குடும்பஸ்தர்களான ஃபக்கீர்களுக்கும் சுய சம்பாத்திய தொழில்கள் உண்டு. உலகம் மற்றும் மறுமைக்கான கல்வி அறிவை நாடிச் செல்லும் பண்பாடு உண்டு. குடும்ப உறவுகளும் மானம் மரியாதையும் மனதில் உண்டு.

ஃபக்கீர்களின் கலாச்சாரம் அது தெய்வீகமானது. தியாக மனப்பான்மையுடன் கூடியது. அது இயற்கையோடு ஒன்றி வாழும் பண்பை உடையது. மறுமையை மறக்காத இம்மை வாழ்க்கை வாழ தன் அகம்பாவங்களை ஒழித்து விட்டு ஆண்டவனின் பாதையில் தன்னை அர்ப்பணிப்பது என்பதே அவர்களின் பண்பாடு.

இவ்வாறு உள்ள ஃபுகறாக்கள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 5 ஜமா (குழு) க்களாக உள்ளனர். இதில் ஹஜ்ரத் குத்புல் மதார் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் தரீக்காவை சார்ந்த ஷா தப்காத்தி மண்டல் தாரிஜமா தமிழகத்தில் மட்டும் தம் இறைப்பணியை செய்து வருகிறது. இதன் தலைமைப்பீடம் கும்பகோணம் அருகில் ஆவூர் எனும் ஊரில் உள்ளது. இவர்களின் குழு தலைவர் சர்குரு (சர்கிரோ) என அழைக்கப்படுகிறார்.

இந்த சர்குரு, பரம்பரை வம்சா வழியில் இதுநாள் வரை நடந்தேறி வருகிறது. தமிழகம் முழுவதும் தப்காத்தி அல்லது மதாரிய்யா ஃபக்கீர்கள் வாழ்ந்து வருகிறார்கள். நமது



ஷஜராவின்படி, 5 சர்குருக்கள் ஆவூரிலும், கொரடாச்சேரி, வெண்ணை வாசலில் ஹஜ்ரத் ஹாஜி சப்ஜே அலிஷா சர்குரு அவர்களும் அடக்கமாகி உள்ளார்கள். தப்காத்தி ஃபக்கீர்மார்கள் “ஹக் அல்லா அல்லாஹ் முஹம்மத் மதார் !” சத்தியமென்பது அல்லாஹ்வும் முகம்மதுவும் ஆகும். “தம்பீர் ஜிந்தாஷா மதார் !” ஜிந்தாஷா மதாரை நினைவில் நிறுத்துவோம் ! என இஷக் (எனும்) சலாம் சொல்லிக் கொள்வார்கள்.

மேலும் ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) அவர்களின் மீது “தம் மதார் பேடா பார்” எங்கள் உயிரான ஜிந்தாஷா மதார் நாயகமே ! எதிர் வரும் கஷ்டங்களை விலக்குவீராக என சொல்வது ஃபக்கீர்களின், முரீதுகளின் திக்ராக உள்ளது.

ஒவ்வோர் வருடமும் ஆவூர் ஹஜ்ரத் சையதினா சர்குரு மதார்ஷா அவுலியா தர்காவில் ஜமாதுலவ்வல் மாதம் பிறை 5-க்கு கருப்புக்கொடி ஏற்றி அன்று இரவே சந்தனம் பூசும் மகோற்சவமும் நடைபெற்று வருகிறது. அது சமயம் அனைத்து சமூகத்தவர்களும் விருந்து உபசரிப்பு, சந்தனம் பூசும் வைபவத்தில் கலந்து கொள்கிறார்கள். ரப்புல் ஆலமீனின் அருளும் இறைநேசர்களின் துஆவும் பெற்று அனைத்து மக்களும் ஒற்றுமையுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ துஆ செய்வோமாக !

மேலும் இந்த “ஆன்மீக சூரியன்” ஹஜ்ரத் ஜிந்தாஷாஹ் மதார் (ரலி) எனும் நூலானது அவர்களது முழு ஜீவிய சரித்திரத்தையும் விளக்கி விடவில்லை. இது ஓர் சிறு தொகுப்பே. தமிழகத்தில் ஹஜ்ரத் அவர்களின் பல சில்லாக்கள் இருந்தும் அவற்றின் வரலாற்றுக் குறிப்புகளை நாம் சேகரித்து வருகிறோம். கர்நாடகாவில் அமீர் மதாரி என்பார் ஹஜ்ரத் அவர்களின் சில்லா இருந்த இடங்கள் 93 எனவும் அதன் குறிப்புகளையும் எடுத்துள்ளார்.

ஹஜ்ரத் குத்புல் மதார் ஜிந்தாஷா மதார் (ரலி) அவர்களின் சிறப்புகளை கூறிக் கொண்டே போகலாம். நூலின் விரிவை அஞ்சி முக்கிய நிகழ்வுகளை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளோம். அது போல ஹஜ்ரத் அவர்கள் சில்லா இருந்த முக்கிய இடங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளோம். மேலும் ஹஜ்ரத் ஜிந்தாஷா மதார் (ரலி)

அவர்களின் விபரங்களை அறிய www.madareazam.com என்ற இணையதளத்தில் தேடலாம்.

## ஆன்மிக முத்துச் சிதறல்கள்

நபிகள் நாயகம் (ஸல்), "தன்னை அறிவது நிச்சயமாக தன் ரப்பை அறிவது" ஆகும் என திருவுளமானார்கள். அறிவது என்பது தெரிந்து கொள்வது. "முஷாஹிதா" இறைவனைப் பற்றி அறிவார்ந்த விளக்கங்களை கேட்டறிந்து அவனை சந்திக்க விரும்பி ஷரிஅத் உடைய கடமைகளை நிறைவேற்றுவதாகும். இதை இல்முல்யகீன் (அறிவார்ந்த நிர்ணயம்) என்பதாகும்.

இதற்கு மேல் இறைவனுடைய பாதையில் வழிகாட்டக் கூடிய ஒரு (குருவை) ஷெய்கை தேடிப்பிடித்து தரீக்கத்தை பெற்று அதன் மூலம் செயல்பட்டு அவன் முறாக்கபாவில் ரப்புடைய ஜோதியைக் காண்பான். அதற்கு ஐனுல்யக்கீன் (நிதர்சன நிர்ணயம்) என்பதாகும். சுழுமுனையில் காட்சி தரும் தம் குருவின் தோற்றம் மாறி தன் சுரூபம் ஒளிமயமாய் வெளிப்படுமானால் அதற்கு கமாஜல் யகீன் எனப்படும்.

நம்மை அறிந்து கொள்ளும் பாதையில் நாசூர் எனும் சடத்துவ நிலைக்கும், மலக்கூத் எனும் ஆக்கும நிலைக்கும் இடையிலுள்ள படித்தரம் அனைத்தும் ஷரீஅத் எனும் சட்ட நிலையாகும்.

**நாசூத் :** இந்நிலை மனிதன் தன் மெய்நிலை மறந்து உலக மயக்கத்தில் இருப்பதாகும்.

**மலக்கூத் :** மனிதன் விழிப்படைந்து இறைவனுடைய ஏவல்களை ஏற்று நடக்கும் நிலை. இந்நிலை ஷரிஅத்தின் சட்ட திட்டங்களை ஏற்று நடப்பதால் உண்டாயிற்று. இத்துடன் தரீகத்தின் பயிற்சிகளை கைகொள்ளும் போது தெய்வீகச் சக்திச் சுடர்கள் வெளியாகின்றன.

**ஜபரூத் :** இந்நிலை சக்தி நிலையாகும். அத்துடன் ஹகீகத் (தெளிந்த மெய்நிலை) ஏற்படும் போது தான் சிருஷ்டியின்



இல்லாமைத் தன்மையும், இறைவனின் உண்டெனும் நிலையும் உணரப்படுகிறது.

**லாகூத் :** சக்தி சுடர்களை பக்திப் பரவசம் அதிகரிக்கிறது. தான் என்பது முற்றிலும் அழிந்து மனித மனம் தெய்வீக மயமாக ஆகி விடும் முக்தி நிலை.

மலக்கூத் நிலைக்கும் ஜபரூத் எனும் ஆன்ம நிலைக்கும் இடையே உள்ள படித்தரம் அனைத்தும் தரீக்கத் தத்துவம் ஆகும். ஜபரூத் நிலைக்கும் லாஹூத் எனும் இறை நிலைக்கும் இடையிலுள்ள படித்தரம் அனைத்தும் ஹக்கீகத் சத்தியம் ஆகும்.

**மெய்ஞ்ஞானம் :** ஆத்மா, உள்ளம், இதயம் ஆகிய மூன்றுக்கும் மெய்ஞ்ஞான உணவு தனிமைதான். அதனால் தான் "நான் என் ரப்பிடம் தடுப்பட்டு விடுகிறேன். அவனே உணவு ஊட்டுகிறான், குளிப்பாட்டுகிறான் என நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். மேலும் சூக்குமமான ஞான அமுதத்தையே என் ரப்பு எனக்கு புகட்டியுள்ளான். அது முழுக்கவும் எனக்கே உரியது" எனவும் அருளியுள்ளார்கள். இதைக் கொண்டே முதலில் நபிகள் (ஸல்) அவர்களுக்கு சடத்துவ உடலோடும், இதயத்தோடும் கூடிய மிஃராஜீம் பின் ஆத்மா மட்டும் சென்ற சூக்கும தரிசனமும் கிடைத்தன. மெய்ஞ்ஞானம் பெற்று சித்த சுத்தியோடு வணக்கம் புரிந்த மெய்யடியார்களான ரசூல் (ஸல்) அவர்களின் வாரிசுகளான தவ சிஷ்யர்களுக்கு தான் இம்மகோன்னத் நிலை சித்தியாகும்.

**மெய்ஞ்ஞான வழி :** மனிதா ! முதலில் மனிதர்களிடம் ஞானம் பெறு. பின் ஹக்கிடம் மெய்ஞ்ஞானம் அருள துஆ செய். சிருஷ்டிகளிடம் கற்பது ஷரீஅத். ரப்பு அளிப்பது ஞானோதயம் (இல்முல்லதுன்னீ) இந்த மாண்புமிக்க மெய்ஞ்ஞானமே இதயத்தை சீர் செய்யும் ஞான மகான்களின் சகவாசம் தான் கல்பை ஒளிப்படுத்தும். ஞானநாதரின்றி மெய்வழி நடக்க முடியாது. வழிகாட்டும் ஆசான் இல்லாமலே ஞான விளக்கம் பெற நாடாதே.

**ஆத்மீகப் பார்வை :** மனிதனின் பகுத்தறிவையும், பழக்க வழக்கங்களையும் உடைத்தெறிக்கக் கூடிய அல்லாஹ்வின் செயல்கள் எல்லாம் இறை நேசர்களான அவுலியாக்களுக்கும் இறையாட்சி கண்ட நாயகர்களாக உள்ள அப்தால்களுக்கும் ஆன்மீகப் பார்வை (கஷ்ஃப்) மூலமும் முஷாஹிதா ஆன்மீக அனுபவம் மூலமும் வெளியாகின்றன. இவ்விதம் வெளிப்படுவது இரண்டு வகை. ஒன்று ஜலால் (தீவிர சக்தி) கொண்டு வெளிப்படுவது. மற்றொன்று ஜமால் (சாத்வீக சக்தி) கொண்டு வெளிப்படுவது.

அல்ஹம்துலில்லாஹ் !


**ஆத்மீகப் பார்வை :** மனிதனின் பகுத்தறிவையும், பழக்க வழக்கங்களையும் உடைத்தெறிக்கக் கூடிய அல்லாஹ்வின் செயல்கள் எல்லாம் இறை நேசர்களான அவுலியாக்களுக்கும் இறையாட்சி கண்ட நாயகர்களாக உள்ள அப்தால்களுக்கும் ஆன்மீகப் பார்வை (கஷ்ஃப்) மூலமும் முஷாஹிதா ஆன்மீக அனுபவம் மூலமும் வெளியாகின்றன. இவ்விதம் வெளிப்படுவது இரண்டு வகை. ஒன்று ஜலால் (தீவிர சக்தி) கொண்டு வெளிப்படுவது. மற்றொன்று ஜமால் (சாத்வீக சக்தி கொண்டு வெளிப்படுவது.

அல்ஹம்துலில்லாஹ் !




























REDMI NOTE 8 PRO
AI QUAD CAMERA

